# செல்வவிநாயகர் திருவருளமுதம்



வடமராட்சி கிழக்கு - முள்ளியான் - வெற்றிலைக்கேணி

# ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

## மஹா கும்பாபிஷேக மலர்

12.02.2014

வடமராட்சி கிழக்கு - முள்ளியான் - வெற்றிலைக்கேணி

ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்



செல்வவிநாயகர் திருவருளமுதம்

# மஹா கும்பாபிஷேக மலர்

12.02.2014



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

# அருளாசிச் செய்தி



விநாயகர் அடியார்களுக்கு

யாழ்ப்பாணம் வடமராட்சி வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர்க்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகமானது இவ்வூரில் நடைபெறுவது ஊருக்கும் ஊர் மக்களுக்கும் நன்மையைத் தேடித்தருவதாகும். கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்னும் வாக்கிற்கமைய எம்முன்னோர்கள் வாழ்ந்த இடமெல்லாம் கோயில்கள் அமைத்து வழிபாடு செய்தனர்.

அவ்வகையில் வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர்க்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இக் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தும் ஆலயகுருக்கள் ஊர்மக்கள் அனைவருக்கும் இறைவனுடைய ஆசிகிடைக்கப் பெறுவதாக. கும்பாபிஷேகம் சிறப்புற நடந்து ஊருக்கும் ஊர்மக்களுக்கும் விநாயகனின் ஆசிகிடைப்பதாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

*நல்லை ஆதீன முதல்வர்,*
*இரண்டாம் குருமஹாசந்நிதானம்,*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.*

# கும்பாபிஷேக பிரதம குருவின் அருளாசியுரை



"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"

சிவபூமி என திருமூலரால் சிறப்பிக்கப்படும் ஈழத் திருநாட்டின் வட மராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பதியிலே இற்றைக்குப் பன் னெடுங்காலமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் செல்வ விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகட்கும் விஜய வருடம் தைத்திங்கள் 30ஆம் நாள் மகா கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து நடாத்தி வைப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

இப்புண்ணிய கைங்கரிய வேளையில் எம்பெருமானது குடமுழுக்கு விழாவிற்கு சகல வழிகளிலும் உதவி நல்கி திருத்தொண்டு புரிந்து கும்பாபி ஷேகத்தைக் கண்டுகளித்த அனைவருக்கும் எல்லாம் வல்ல செல்வ விநா யகப் பெருமானின் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென எம்பெருமானின் பாதம் பணிந்து நல்லாசி கூறி அமை கின்றேன்.

"லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து"
சுபமஸ்த்து

*சிவஸ்ரீ. கனக. சிவகுமாரக்குருக்கள்*
*"கிரியா சிரோன்மணி"*
*(பிரதம குரு, கரவை பிராமணன் தோட்ட ஞான வைரவர் ஆலயம்)*

# ஆலய
# பிரதம குருவின்
# அருளாசியுரை



"ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்வோம்"

தெட்சிண கைலாசம் எனப்படும் இலங்காபுரியிலே நெய்தல் நிலமும் மருதநிலமும் பாலைநிலமும் ஒருங்கமையப் பெற்ற வெற்றிலைக்கேணிப் பதியிலே வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டும் செல்வங்களை வாரி வழங்கும் செல்வ விநாயகப் பெருமானுக்கு 12.02 2014 அன்று மகாகும்பாபிஷேகம் நிகழ்வதை எண்ணி உள்ளம் பூரிப்படைகின்றேன்.

இச்சுப வேளையிலே மேன்மையுறு சிவ தர்மமாகிய மகா கும்பாபிஷேகத்தை செய்விக்கும் நற்செயலுக்கு உதவி ஒத்தாசை நல்கியோரும் உலகில் வாழும் அனைத்து மக்களும் சகல செல்வங்களையும் பெற்று நீடூழி வாழவேண்டும் என ஆசீர்வதிப்பதோடு இவ்வாலயமும் மேன் மேலும் வளர்ச்சி பெற்று சைவ, கலை, பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கும் பொற்கோயிலாக திகழ வேண்டும் எனவும் என்னப்பன் கரணவாய் மூத்த விநாயகனையும் இவ்வாலயப்பதியுறை செல்வ விநாயகனையும் சிரம் தாழ்த்திப் பணிந்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

"சர்வே ஜனாகா சுகினோ பவந்து"

சுபமஸ்த்து

*சிவஸ்ரீ ச.யோக சம்பந்தக் குருக்கள்*
*"தேவி சாதகப் பிரியன்"*
*பிரதம குரு, வெற்றிலைக்கேணி செல்வ விநாயகர் ஆலயம்,*
*ஆசிரியர், யா/ கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை*

# வாழ்த்துச் செய்தி



கும்பாபிஷேகம் காணும் எல்லாம் வல்ல செல்வவிநாயகர் அருள் அனைவர்க்கும் சித்தித்திடுக. ஆழிப்பெருங்கடலோரம் வெற்றிலைக்கேணி எனும் தமிழர் வாழ்வியலில் மறக்கவியலா நாமம் கொண்ட அழகிய விக்கினம் தீர்க்கும் விநாயகப்பெருமான் செல்வவிநாயகராக அவதாரம் கொண்டு அடியார்கள் துயர்தீர்க்கும் வரலாறு நாம் அனைவரும் அறிந்தது.

எம் பெருமான் செல்வவிநாயகர் ஆண்டாண்டு காலமாக வெற்றிலைக் கேணிவாழ் மக்களுக்கும் அதை சூழவுள்ள மக்களுக்கும் தன் அருட் கடாட்சங்களை வாரிவழங்கி வந்துள்ளதை அடியார்கள் பக்திப்பெருத் துடன் நினைக்கின்றனர். இயற்கைப் பெருமனர்த்தமான சுனாமி கடற்கோளையும் அதனால் விளைந்த பெருந்துன்பங்களையும் எதிர்கொண்ட மக்களுக்கு செல்வவிநாய கர் தேறும் மனத்தை கொடுக்கும் வல்லவராக இருந்திருக்கிறான்.

போர் அனர்த்தம் காரணமான இடப்பெயர்வுகளால் வழிபாடுகள் தடையுறும் நிலை வந்தபோதும் எம்பெருமான் தன் மக்களுக்கான அருட்கொடையை கைவிடவில்லை.பெயருக்கு ஏற்றால்போல் தன் அடியார்களின் செழிப்புற்ற வாழ்வுக்கு வழிகாட்டி இன்று அந்த மக் களாலேயே கும்பாபிஷேக பெருவிழா காண அருள்புரிந்திருக்கின்றார்.

எமது மண்ணில் புகழ்பூத்த செல்வவிநாயகர் வரிசைகளில் வெற்றிலைக்கேணி செல்வவிநாயகரின் புகழ் மாண்புக்கும் தனி இட முண்டு. எம் பெருமான் கும்பாபிஷேக பெருவிழா ஈடேறும் இந்த பக்தி பூர்வ ஆனந்தப் பெருவெள்ளத்தில் எமது மக்களுக்கு எம்பெருமானின் அருள்ஆசி வேண்டிநிற்கின்றேன்.அத்தோடு விநாயகப்பெருமானின் அருட்பணியில் கலந்துள்ள அனைத்து உள்ளங்களுக்கும் வழிகாட்டு பவர்களுக்கும் எம்பெருமானின் அருள்கிடைப்பதாக.

நன்றி

சி.சிறீதரன்,<br>
பாராளுமன்ற உறுப்பினர் ,<br>
யாழ். தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி.

# இறையருள் பெருக



மிகவும் தொன்மையான கிராமமான வெற்றிலைக்கேணியில் அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானின் அருளால் அவரின் குடமு ழுக்கு மலருக்கு ஆசிச் செய்தி வழங்க அடியேன் கொடுத்து வைத்திருக்கின்றேன். மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இக்கோயிலின் கும்பாபிஷேகத்தை அவ்வூர் சைவப் பெருமக்கள் நிறைவேற்றியிருந்தனர். இவ்வருடம் இத் தைத்திங்களில் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் அவ்வூர் மக்கள் முக்கியமாக வீரகத்தி குடும்பத்தினர் இறையருள் பெறுபவராவார். ஆழிப் பேரலையினால் கடற்கரைப் பிரதேசங்கள் எல்லாம் அழிவுற்ற போதும் இக்கோயில் சேதமுறாமல் இருப்பது இறைவனின் அற்புதமாகும்.

போத்துக்கேயர் ஒல்லாந்தர் கால ஆட்சியின் போது சைவசமயத்திற்கு அழிவு ஏற்பட்டாலும், இவ்வூர் மக்கள் சைவசமயத்தை கெட்டியாகப் பிடித்திருந்தமையும் இக்கோவிற் பெருமானின் அருளாகும். ஒரு கோயிலை மீளப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வது என்பது மிகவும் சிரமமான ஒரு செயலாகும். இக் கைங்காரியத்தைச் செய்து முடித்த நிர்வாகக் குழுவினர் போற்றுதற்குரியவர்களாவார்.

வெற்றிலைக்கேணி ஒரு செல்வங் கொழித்த கிராமமாகும். மீள் குடியேற்றத்தின் பின் மீண்டும் அவர்கள் சகல செல்வமும் பெற இக்கோயிலில் குடிகொண்டிருக்கும் செல்வவிநாயகப் பெருமான் அருள்வார் என்பது திண்ணம். இவ்வூர் மக்களின் தொழில் பெருகவும், பிள்ளைகள் கல்வி பெறவும் இப்பெருமான் அருள்புரிவாராக கும்பாபிஷேகம் நடைபெறும் நன்னாள் எல்லோருக்கும் இறையன்பு கிடைக்கப் பெறுவதாக.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க."
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்."

திரு.வே.தி.செல்வரத்தினம்
ஓய்வு நிலைப் பிரதிச் செயலர்,
வடமாகாணக் கல்வியமைச்சு.

# வாழ்த்துரை



ஈழவளத் திருநாட்டின் யாழ் குடாநாட்டின் மூளை எனப் போற்றப் படும் வடமராட்சி நீணட கடல் எல்லைகளைக் கொண்ட பிரதேசமாகத் திகழ்கின்றது. தொண்டமானாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரை பரந்து விரிந்து செல்கின்ற பாக்கு நீரிணையையும் வங்காள விரிகுடாவையும் கொண்ட மிகப் பெரிய கடல் பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேசமாகும். இக்கடல் பிரதேசத்தில் பெரும் பகுதியை தன்னுள் அடக்கிய அழகிய பிரதேசமாக வடமராட்சி கிழக்கு திகழ்கின்றது.

கடலாலும் மணல் திட்டுக்களாலும் வயல் நிலப் பரப்புக்களாலும் தோட்ட நிலப் பரப்புகளாலும் நன்னீர் தொடுவாய்களாலும் சூழ்ந்த கடலும் கடல் சார்ந்த பிதேசமாகவும் வயலும் வயல் சார்ந்த பிரதேசமாக வும் மணலும் மணல் சார்ந்த பிரதேசமாகவும் திகழ்கின்ற வெற்றிலைக் கேணிக் கிராமம் தனித்துவமான சிறப்புகளைக் கொண்ட சைவப் பாரம் பரியமிக்க அழகிய கிராமமாகும்.

இவ்வெற்றிலைக்கேணிக் கிராமத்தில் அமைந்திருந்து அருள் பாலித்தக் கொண்டிருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளிவருகின்ற கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சைவப் பாரம்பரியமும் பண்பாட்டு விழுமியங்களும் ஒன்று கலந்த இக்கிராமத்தில் சிற்ப வேலைகளுடன் கூடிய இரட்டைப் பஞசாங்க மூலஸ்தானத்துடன் அமைக்கப்பட்ட ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் 1977 ஆம் ஆண்டு தை மாதம் நடைபெற்றதாக வரலாற்றுச் சான்று தெரிவிக்கின்றது.

1990 களைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய அசாதரண சூழ்நிலை கள், மக்களின் செறிவான இடப்பெயர்வு இக்கிராமத்தை அடியோடு அழித்து விட்டதை என்றும் மறக்க முடியாது. மீண்டெழ முயற்

சித்த வேளையில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவு எஞ்சியிருந்த அனைத்து வளங்களையும் தன்னோடு அள்ளிச் சென்றது. அதன் தாக்கம் இன்னும் மாறாத வடுவாக உள்ளது.

யுத்தம், சுனாமி ஆகிய பேரழிவுகளின் போதும் அழியாது இன்னும் நிமிர்ந்து நிற்பது ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயமே. இதுவே இக்கிராமத்தின் அடையாளமாகத் திகழ்கின்றது.

2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாதகமான மாற்றங்களும் யுத்தம் முடிவுற்ற சூழலும் மக்களின் மீள் குடியமர்வுகளும் மீண்டும் இக்கிராமத்தினை மீள் எழுச்சியுறச் செய்துள்ளன. பாடசாலைகள், வீட்டு வசதிகள், போக்குவரத்து வசதிகள், மின்சார வசதிகள் மக்களின் வாழ்வியலில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்தின.

இம்மாற்றங்களோடு இணைந்து ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயமும் புதுப்பொலிவு பெற்று இன்று மகா கும்பாபிஷேகத்தைக் கொண்டாடவுள்ளது. இவையெல்லாம் விநாயகப் பெருமானின் அருளாட்சியே என்பதில் ஐயமில்லை.

ஐந்து மில்லியன் ரூபா செலவில் ஆலயம் புனரமைக்கப்பட்டு அழகிய தோற்றத்தில் எம்பெருமான் தோற்றமளிக்கின்றமை இக்கிராம மக்கள் சைவப் பாரம்பரிய முறைகளுக்கும் ஆன்மீக நாட்டத்திற்கும் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இவ்வகையில் இவ்வாலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கோண்டு 12.02.2014 புதன் கிழமையன்று கும்பாபிஷேக விழாவினையும் நடாத்த இறைபணியில் உழைத்த தர்மகர்த்தா சபையினருக்கும் குறிப்பாக திரு வயிரமுத்து. வீரகத்தி அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

எல்லாம் வல்ல எம்பெருமான் இக்கிராமத்தையும் இக்கிராம மக்களையும் என்றும் காத்து அருளுவதுடன் சைவப் பாரம்பரியங்களைப் பேணுகின்ற ஆன்மீகப் பற்றுள்ள மக்களை இக்கிராமம் என்றும் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு.சி.நந்தகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி

# வாழ்த்துச் செய்தி



ஈழவள நாட்டின் தமிழும் சைவமும் தழைத்தோங்கும் தலைமைப் பதியாம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியின் ஓரங்கமாக விளங்குவது இயற்கை எழிலும் எண்ணற்ற வளங்களும் நிறைந்து திகழும் வடமராட்சிக் கிழக்குப் பிரதேசமாகும். இவ்வடமராட்சி கிழக்கு என்னும் நீண்ட நீள்சதுர நிலப்பரப்பின் நடுநாயகமாக விளங்குவது வெற்றிலைக்கேணி என்னும் எழிற் கிராமம். கடலும் தரவையும் கொண்டு இயற்கை அன்னையின் அரவணைப்புக்கு ஆட்பட்டு வரலாற்றில் மிளிர்ந்து செழித்து ஓங்கியது இக்கிராமம். இவ் வெற்றிலைக்கேணிப் பதியில் குடிகொண்டு, அருள்பாலித்து, அண்டி வருபவர்களுக்கு உயிராக, உறுதுணையாக, திகழும் ஸ்ரீ செல்வவிநாயகர் உறையும் திருத்தலம் கடல் அலைகள் தாலாட்ட நிமிர்ந்து நிற்கிறது.

90 களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் நேரடியாக பாதிக்கப்பட்டது வெற்றிலைக்கேணி கிராமம். 2002 வரை இந்த துயரநிலை தொடர்ந்தது. இக்காலத்தில் அடியார் சென்று வரமுடியாத நிலையில் ஆலயம் மூடப்பட்டிருந்தது. எனினும், 2002 இல் மீள் திரும்பிய பின் இக் கோயில் முதாதையர் வழிவந்த வயிரமுத்து வீரகத்தி அவர்கள் புனருத்தாரண வேலைகளை முன்னெடுத்தார்.

இந்நிலையில் 2004 ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் ஊரும் பாதிப்புக்குள்ளானது. இக்காலப்பகுதியில், எனது சேவையில் முதல் நியமனமாக வடமராட்சி கிழக்கு பகுதியில் உதவி அரசாங்க அதிபராக பணியாற்றியவன் என்ற ரீதியில் இவ்வூரில் ஏற்பட்ட பாதிப்பை நேரடியாக நானும் கண்டிருந்தேன். பூசைகள் அற்ற நிலையில் இருந்த ஆலயம் மீண்டும் நிமிர்ந்தெழ வேண்டும் என எண்ணிய தர்மகர்த்தா

சபையினராலும் விநாயகர் அடியார்களாலும் பாலஸ்தாபனம் செய்வதற் குரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து ஆரம்ப மாக இருந்த திருப்பணி வேலைகள் மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் தொடங்கிய யுத்தத்தால் தடைப்பட்டுப் போயின.

எனினும், யுத்த நிறைவினைத் தொடர்ந்து 2010 இல் இப்பிதேசத்தில் மீள்குடியேற்றம் இடம் பெற்றதும் ஆலய புனருத்தாரன வேலைகளும் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது தர்மகர்த்தா சபையினர், உறவினர்கள், ஊரார்கள் ஒருங்கிணைந்து பெரும் பொருட்செலவில் இவ் இறைகைங்கரியத்தை தொடர்ந்து முன்னெடுத்து 12.02.2014 இல் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேற திருவருள் கைகூடியிருக்கிறது.

இப்பெரும் பணியை முன்னெடுத்த ஆலய தர்மகர்த்தாசபையினருக் கும் அனைத்து விநாயக அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்புடன் நிகழ்ந்தேற எல்லாம் வல்ல இறை யருளை இறைஞ்சிப் பணிகிறேன்.

இ.த.ஜெயசீலன்
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
பருத்தித்துறை.

# வாழ்த்துரை



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் அமர்ந்து அருள் பாலிக்கின்ற ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் செல்வ விநாயகர் திருவருளமுதம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

அருவம், உருவம், அருவுருவம் என்று கூறப்படும் மூவகைத் திருமேனி களை உடைய இறைவன் மானிட குலத்திற்கு நல்வழி காட்டும் பொருட்டு உருவத் திருமேனியுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற இடமே ஆலயங் களாகும். இவ் ஆலயங்களில் நாளாந்தம் பூசைகளும், வருடாந்த திரு விழாக்களும் நடைபெறுவது வழக்கம். இவைகளுக்கு மேலாக பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெற வேண்டியது சைவ மரபாகும்.

வடமராட்சி கிழக்கு பிரதேசம் இங்கு நடைபெற்ற கொடிய யுத்தத்தி னால் மக்களெல்லாம் இடம்பெயர்ந்து அகதிகளாக வெளியேற இருள் சூழ்ந்த பிரதேசமாக மாறியது. ஆலயங்களும் பூசைகளெதுவுமின்றி கைவிடப்பட்டன. எல்லாம் யுத்தத்தினால் அழிவும் அடைந்தன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டபின் அகதிகளாக வெளியேறிய மக்களை தமது சொந்த மண்ணில் மீளக்குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதன்படி வெற்றிலைக்கேணி மக்களும் மீள்குடி யேற்றப்பட்டு அப்பிரதேசம் சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. மீள்குடியேற்றம், அபிவிருத்தி என்பவற்றில் நானுமொரு பங்காளியாக இருந்ததையிட்டு ஆத்மதிருப்தி அடை கின்றேன்.

இறைவனின் திருவருளின்று எதுவும் நடைபெற முடியாது என்ற அசை யாத நம்பிக்கை கொண்ட வெற்றிலைக்கேணி மக்கள் தாங்கள் வழிபட்டு வந்த அற்புதம் நிறைந்த ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்கின்றனர். இக் கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் இக்கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு வெளி வருகின்ற கும்பாபிஷேக மலர் சிறப்புற அமையவும் எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானின் திருவருள் வேண்டி வாழ்த்துவதுடன், ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானின் திருக்கோவிலைப் புனரமைக்கவும் கும்பாபிஷேகத்தை நடாத்தவும் முன்னின்று திருத் தொண்டாற்றிவருகிற அன்பர்கள், மெய்யடியார்கள் ஊர்மக்கள் அனை வரும் பலவகையான சீரும் சிறப்பும் பெற்று சாந்தி சமாதானத்துடன் வாழவும் ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்து கின்றேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

ஐயாத்தரை ஸ்ரீரங்கேஸ்வரன்
எதிர்க் கட்சித் தலைவர்,
பருத்தித்துறை பிரதேச சபை

# வாழ்த்துச் செய்தி



ஆன்மீகப்பணி சிறக்க வாழ்த்துகின்றேன்

வெற்றிலைக்கேணியில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் செல்வ விநாயகர் ஆலயமானது 1991இற்கு முற்பட்ட காலத்தில் வெற்றிலைக் கேணியில் வாழ்ந்த சைவமக்களின் வாழ்வில் ஆன்மீகத்தைப் பரப்புவதில் பெரும்பங்காற்றி உள்ளது. நாம் கல்விகற்ற வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்கும். மேற்படி ஆலயத் திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வெள்ளிக்கிழமைகளில் வகுப்பு 01 முதல் 10 வரையான மாணவர்கள் வாழ்வில் சிவபுராணம் மற்றும் பஞ்சபுராணம் ஓதுவதற்கு பழக்கப்படுத்தியது மேற்படி ஆலயமாகும் .

எம்மை அறியாமலே எமது பாலர் பருவத்தில் எம்முள் ஆன்மீகத்தை விதைத்த மேற்படி ஆலயத்தில் இன்று புனருத்தாரண கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். மென்மேலும் ஆலயத்தின் ஆன்மீகப்பணி தொடர எனது உளம்கனிந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.சோ.சிவலிங்கம்,
நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.

# வாழ்த்துச் செய்தி



ஆழமாக வளைந்து செல்லும் கடற்கரை ஓரம் அதில் பனை, தென்னை, ஆல், வேம்புகளையும் இயற்கைக் காடுகளையும் கொண்டமைந்த வடமராட்சி கிழக்கின் முள்ளியான் பிரதேசத்தில் அமைந்துள்ள வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் முடிவுற்று வெளிவருகின்ற மஹா கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

1991, 2006 ஆகிய காலப்பகுதியில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளின் போதெல்லாம் முற்றாக அழிந்து போகாமல் தாக்கிப்பிடித்து, இன்று புனரமைக்கப்பட்டு புதிய தோற்றத்துடன் காட்சியளிப்பது எல்லையற்ற இறை ஆட்சியின் வெளிப்பாடாகும்.

இப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுக்கெல்லாம் அருள்பாலிக்கின்ற இவ்வாலயத்தின் கும்பாபிஷேக நாளில் வெளிவருகின்ற செல்வவிநாயகர் திருவருளமுதம் மலர் ஆலயத்தின் சிறப்புக்களையும் வரலாற்றுப் பதிவுகளையும் தாங்கி வர வேண்டுமென ஆசிகூறி நிற்கின்றேன்.

திரு.ச.திரவியராசா
அதிபர்,
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.

# வாழ்த்துரை



ஈழமணித் திருநாட்டின் தலைமுடியாய் அமைந்த யாழ்ப்பாண மாவட்டத் தில் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டுள்ள வடமராட்சியில் இயற்கை அழகையும், பாரம்பரியத்தையும் கொண்டு விளங்கும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பிரசித்தி பெற்ற பிரதேசமாக விளங்கும் வெற்றிலைக்கேணியில் வீற்றிருந்து விக்கினங்களைப் போக்கி யாவருக்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது போற்றுதற்குரியதாகும்.

ஆலயங்கள் எமது வாழ்க்கையில் ஆன்மாக்களை நல்வழிப்படுத்தவும் தூய சிந்தையுடன் நேரிய வழியில் செல்லவும் வழி அமைக்கின்றன. அத்துடன் மன அமைதிக்கும் அன்பு கலந்த வாழ்க்கைக்கும் இன்றியமையாதவையாகவும் அமைகின்றன.

அந்த வகையில் நீண்ட கொடிய யுத்தத்தில் சிக்கித்தவித்து இடம் பெயர்ந்து தற்போது வடமராட்சி கிழக்கில் சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ள அனைத்து அடியவர்களும் மக்களும் தாம் எதிர் நோக்கும் சகல துன்பங்களில் இருந்து விடுபடவும், சமய, சமூக, கலாசார விழுமியங்களை கடைப்பிடிக்கவும் பாதுகாக்கவும், தாம் சார்ந்த தொழில்களில் வெற்றிபெற்று முன்னேற்றம் பெற்று வாழ்ந்திடவும் இன்றைய புனித நன்னாளில் எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்திடுவோம்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

திரு.பா.முரளி,
நிர்வாக அலுவலர்,
பிரதேச செயலகம், கரவெட்டி.



# வாழ்த்துரை

எனது பிறப்பிற்கு முற்பட்ட காலத்தில் இருந்து (ஏறத்தாள 1870ஆம் ஆண்டிலிருந்து) பூட்டனார், பேரனார், தந்தையார் பராமரிப்பில் இருந்துவந்த எங்கள் குல தெய்வமான விநாயகப் பெருமான் ஆரம்பகாலத்தில் சிதம்பரத்திலிருந்து கொண்டுவரப்பட்டு சிறு கொட்டில் அமைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. அதன் பின்னர் எமது மூத்த சகோதரர் தலைமையில் ஆலய கட்டட வளர்ச்சிப் பணிகள் நடை பெற்று மடாலயமாக வளர்ச்சி பெற்றது. இதன் பின்னர் ஆகமமுறைப்படி அமைந்த சிற்ப வேலைகளுடன் கூடிய ஆலயமாக மாறவேண்டும் என்ற எனது எண்ணத்திற்கேற்ப விநாயகப் பெருமானின் அருளாலும் ஆசீர்வாதத்தினாலும், ஊரவர்களின் ஒத்துழைப்புடனும் 1971ஆம் ஆண்டு திருப்பணி வேலைகள் ஆரம்பமாயின. இதனைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டு தைத் திங்கள் கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து நாற்பத்தைந்து நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இறுதியாக சங்காபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நித்தியபூசை (இரண்டு காலப்பூசை), நைமித்தியபூசை, வருடாந்த உற்சவம் என்பன விசேடமாகக் கொண்டாடப்பட்டன.

இதன் பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பூசைகள் நிறுத்தப்பட்டன. மீண்டும் 2010ஆம் ஆண்டு பாலஸ்தாபன விஞ்ஞாபனம் நடைபெற்று ஆலயத்திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. ஆலயத்தைப் புதுப் பொலிவாக்கி இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அதற்கு சக்தி கொடுத்த ஊர் மக்கள் யாவரும் இஷ்ட சித்திகளைப் பெற்று, விநாயகரின் அருள் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். கும்பாபிஷேக சிறப்புமலர் வெளிவருவதையிட்டு நான் மிகுந்த நிறைவுடன் மகிழ்வடைகிறேன்.

வயிரமுத்து. வீரகத்தி
ஆலய தர்மகர்த்தா,
வெற்றிலைக்கேணி, முள்ளியான்.

# மலராசிரியர் உள்ளத்திலிருந்து



ஆலடிப் பிள்ளையார் என ஆன்றோரால் அழைக்கப்பட்ட எம் பெருமான் விக்னேஸ்வரர் செல்வ விநாயகராக கும்பாபிஷேகம் காண இருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அடுத்தடுத்து வந்த இடப்பெயர்வுகள், அழிவுகள் இவ்வாலய வேலைகளைத் தடைப்படுத்திய போதிலும் ஆலய புனருத்தாரணம் என்னும் சீரிய எண்ணம் இவ்வூர் மக்களைவிட்டு அகலவில்லை.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கிணங்க 2010 இல் மீள் குடியேற்றம் இடம்பெற்றதும் அழிக்கப்பட்ட வீடுகள் கட்டப்படுவதற்கு முன்னரே ஆலய தர்ம கர்த்தா அவர்களும் ஊரவர்களும் ஆலய புனருத்தாரண வேலைகளை முன்னெடுத்தனர். திருவருட் சிந்தனை மிக்க அவர்களது செயற்பாட்டிற்கு இறையருளும் துணையாக அமைய முள்ளியான் பிரதேசத்திற்கே அருள் சேர்க்கும் வகையில் வெற்றிலைக்கேணி செல்வ விநாயகர் நிறைந்து நிற்கின்றது.

வரலாற்றுச் சான்றாதாரங்கள் எமது இருப்பை வெளிப்படுத்துவதுடன் அவ் இருப்பை நிலைநிறுத்த தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கான உந்துதலையும் ஏற்படுத்துவன. அவ்வகையில் இவ் ஆலய வரலாற்றையும், மக்கள் சமய நெறிமுறைகளையும் ஆசாரங்களையும் பின்பற்றி வாழ்வதற்கு வழிகாட்டக்கூடிய கட்டுரைகளையும், கதைகளையும், இறை வழிபாட்டிற்குப் பயன்படுத்தக் கூடிய விநாயகர் புராணம் மற்றும் தோத்திரங்களையும் உள்ளடக்கி "ஸ்ரீ செல்வ விநாயகர் திருவருளமுதம்" என்னும் பெயரில் இம்மலர் வெளிவருகின்றது.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிட முடியுமா என்னும் அச்சம் ஏற்பட்ட வேளையில் முடியும் என்கின்ற உறுதிப்பாட்டை உணர்த்திய இறையருள், அவ் அருளின் வழி தொடர்ந்த செயலாற்று கைகள், அதற்கு முழுமையாக ஊக்கம் தந்த ஆலய தர்மகர்த்தா வயிரமுத்து வீரகத்தி, அவர் தம் குடும்பத்தினர், குறிப்பாக திரு.வீரகத்தி. இந்திரலிங்கம் அவர்கள், ஆசியுரைகளை வழங்கி அருளிய ஆன்மீகநெறி வழுவா அருளாளர்கள், வாழ்த்துரைகளை வழங்கிய அறிஞர் பெருமக்கள், ஆக்கங்களைத் தந்துதவிய சமயப் பற்று மிக்கோர், சிறந்த முறையில் இம் மலரினை அச்சிட்டு உதவிய சுப்பிரமணியம் பதிப்பகத்தினர் என யாவரும் நன்றிக்குரியவர்கள்.

இந்நூலானது நாளாந்த சமய வாழ்விற்கு உதவும் வகையில் பலராலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப் பாகும். கல்வி கலைகளிலும் செய்தொழில்களிலும் சிறந்து, இழந்தவற் றுக்கும் மேலாக இறையருளால் எல்லாவற்றையும் பெற்று இப்பிர தேசம் மீண்டும் எழுச்சி பெற இவ்வாலய கும்பாபிஷேகம் அமைய இறையருள் கைகூடுவதாக.

மலராசிரியர்
கலாநிதி (செல்வி)
நி. நல்லையா

# மலரின் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1) | ஆசிச் செய்திகள் | I |
| 2) | வாழ்த்துரைகள் | IV |
| 3) | திருவூஞ்சல் | 01 |
| 4) | திருக்குடமுழுக்கு காணும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் | 04 |
| 5) | சமயவாழ்விற்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பு பற்றி ஒரு சிந்தனை | 10 |
| 6) | தேவாரம் காலத்தின் தேவை | 14 |
| 7) | வீபூதியின் பெருமை | 20 |
| 8) | உண்மையான வழிபாடு | 26 |
| 9) | ஆலய மகத்துவம் | 29 |
| 10) | கணபதியின் சில வடிவங்கள் | 35 |
| 11) | கும்பாபிஷேகம் | 38 |
| 12) | ஆலயமும் ஆன்மீகமும் | 41 |
| 13) | சைவ சமயத்தில் சிவ வழிபாடு | 46 |
| 14) | சிதம்பரம் | 49 |
| 15) | பிள்ளையார் | 54 |
| 16) | வெற்றியைத் தரும் விநாயக சதுர்த்தி விரதம் | 56 |
| 17) | விநாயகருக்குரிய விரதங்கள் | 57 |
| 18) | தோப்புகரணம் போட்டு வழிபடுவோம் | 61 |
| 19) | தீபமுகங்கள் | 63 |
| 20) | சிந்துராசுரனும் கணேசரும் | 68 |
| 21) | அறுகம்புல்லுக் ஈடு ஏது? | 72 |
| 22) | வன்னி இலையால் பெற்ற பெருவாழ்வு | 76 |
| 23) | பிள்ளையார் கதை | 80 |
| 24) | விநாயகர் அகவல் | 96 |
| 24) | தேவாரப் பதிகங்கள் | 99 |



# ஸ்ரீ செல்வ விநாயகர் திருவூஞ்சல்

முடிவரிய ஈழத்திரு நாட்டில் ஓங்கு
முந்து புகழ் வடமராட்சி கிழக்கின் ஓர்பால்
கருதரிய இயற்கை வளம் அனைத்தும் கொண்ட
கவின்மிகு வெற்றிலைக் கேணிப்பதி அமர்ந்த
அரவமணி அரனாரும் உமையும் ஈந்த
அற்புதனாம் ஆனைமுகன் பாதம் போற்றி
பெறலரிய வரங்கள் அரும் பேறு நல்கும்
ஸ்ரீ செல்வ விநாயகர்பாதம் மனத்திற் கொள்வோம்

உம்பர் தருசெம் பவளம் கால்களாக
ஓங்கி ஒளிர் ரத்தினமே விட்டமாக
பொங்கு ஆழி வெண்தரளம் கயிறதாக
போற்றரிய மாணிக்கம் பலகையாக
வம்பவிழு மலர் தூவும் ஊஞ்சன்மீது
வல்லப கணபதியே அல்லல் நீக்க
அன்பு விளை வெற்றிலைக்கேணிப் பதியமர்ந்த
அருள்செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

அன்னை பரமேஸ்வரியும் வடம் தொட்டாட்ட
ஆதிசிவன் அருமறையோன் ஒருபால் ஆட்ட
வண்ணமயில் மீதமர்ந்து முருகன் வாழ்த்த
வானவரும் தானவரும் மலர்கள் தூவ
கண்கவரு தேவமாதர் கவரி வீச
காணரிய காட்சியில் பொன்னுலகம் ஆழ
நன்மைமிகு வெற்றிலைக் கேணிப் பதி அமர்ந்த
நல் செல்வ விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

நர்த்தன விநாயகர் நின் நடனம் காண
நாரதர் கிம்புரரும் பூவலகை நாட
சித்தி புத்தி உடனமர்ந்து சீர்கள் சேர்க்க
சிவனார் உமை பாகனாக நின்று நோக்க
பக்திநெறி அடியவர்கள் பணிந்து போற்ற
பரவுபுகழ் அந்தணர்கள் வேதம் ஓத
வித்தையுயர் வெற்றிலைக்கேணிப் பதியமர்ந்த
வீர செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்

நெய்தல்நில அலையோசை ஒருபால் ஓங்க
நீர்நிறைந்த மருதநிலம் மறுபால் ஓங்க
செந்நெல் விளைகழனிகளும் சிறந்து ஓங்க
சீர்மிகுந்த தென்னை பனை நெடிது ஓங்க
சொல்லுபுகழ் பாலைநிலம் இடை விளங்க
சூழமைந்த ஆழ்கடலின் அலை தாலாட்ட
செல்வமிகு வெற்றிலைக் கேணிப் பதியமர்ந்த
செல்வவிநாயகர் மகிழ்ந்து ஆடீர் ஊஞ்சல்

அறுகம் புல்லில் மாலைசாற்ற இன்னல் நீங்கும்
அருமறையும் ஆகமமும் தழைத்து ஓங்கும்
வெருவுபகை அறநெறியால் வீழ்ந்து மாயும்
வேதியர்கள் ஓதுமறை விண்ணில் ஓங்கும்
வருத்தமிலா வாழ்வு தந்து இகத்தை ஆளும்
வணங்கும் அடியவர் வாழ்வில் நலங்கள் கூட்டும்
பெருமையுறு வெற்றிலைக் கேணிப் பதியமர்ந்த
ஸ்ரீ செல்வ விநாயகரே மகிழ்ந்து ஆடீரூஞ்சல்

மூக்ஷிக வாகனப் பிரியாய் முதலே போற்றி
முக்கனியும் சர்க்கரையும் இசைந்தாய் போற்றி
பூசனைசெய் அடியவர்க்கு அருள்வாய் போற்றி
போற்றுதற்கும் ஏற்றுதற்கும் உரியாய் போற்றி
வாசமலர் அர்ச்சனையில் மகிழ்வாய் போற்றி
வடைகடலை மோதகமும் உவந்தாய் போற்றி
மாசறு வெற்றிலைக் கேணிப் பதியமர்ந்த
வளர் செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்

ஒற்றை மருப்பொடித்த உயர்முதல்வா போற்றி
ஊழ்வினைகள் நீக்கும் அருமருந்தே போற்றி
செற்றமுறு கஜமுகனின் செருக் கறுத்து
சேரசுரர் மமதை களைதிருவே போற்றி
திருவிளங்கு அகவல் தருஔவை வேண்ட
செவ்வியநல் மோட்சமது உவந்தாய் போற்றி
மருவு புகழ் வெற்றிலைக் கேணிப் பதியமர்ந்த
மாதவ செல்வ விநாயகரே ஆடீரூஞ்சல்

ஏகதந்த நாயகரே ஆடீரூஞ்சல்
எழில் பாலச்சந்திராய ஆடீரூஞ்சல்
ேேரம்பாய லம்போதரா ஆடீரூஞ்சல்
தூம கேது வக்ரதுண்டாய ஆடீரூஞ்சல்
கற்பகமே கணநாத ஆடீரூஞ்சல்
கஜமுக கஜானனாய ஆடீரூஞ்சல்
சித்திதரு விநாயகரே ஆடீரூஞ்சல்
ஸ்ரீ செல்வ விநாயகருவந்து ஆடீரூஞ்சல்

வேழ முக விக்னேஸ்வரர் ஆடீரூஞ்சல்
வித்தகனே விழுப்பொருளே ஆடீரூஞ்சல்
பேழை வயிறுடையவரே ஆடீரூஞ்சல்
பிரணவ மெய்ப்பொருள் வடிவே ஆடீரூஞ்சல்
ஏழை துயர் தீர்ப்பவரே ஆடீரூஞ்சல்
ஈரேழ் உலகும் காப்பவரே ஆடீரூஞ்சல்
வேதமுதல் விநாயகரே ஆடீரூஞ்சல்
வெற்றிலைக் கேணிஉறை நாயகரே ஆடீரூஞ்சல்

சைவ நெறி உலகெங்கும் தழைத்து வாழி
சமயவழி அடியவர்கள் தழைத்து வாழி
மெய்நெறியும் அறவாழ்வும் மிகுந்து வாழி
வேதமோது அந்தணர்கள் மிகுந்து வாழி
செந்நெல்தரு உழவர்களும் சிறந்து வாழி
சீருலவு வெற்றிலைக்கேணி ஊரும் வாழி
அல்லல் களைஆதி முதற் பொருளே வாழி
ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் வாழி வாழி

...............



# திருக்குடமுழுக்கு காணும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்

ஈழவளநாட்டின் சிகரமென வட பால் அமைந்த யாழ்ப்பாணக் குடா நாட்டின் பெருமை மிகுந்த வடம ராட்சிப் பிரதேசத்தின் கிழக்குப் பிரதேசத்தில் நீர் வளமும் நில வளமும் கொண்டமைந்து வங்கக் கடலின் வற்றாத ஓசையில் செழிப் படைந்த கிராமம் முள்ளியான் பிர தேசத்தில் அமைந்த வெற்றிலைக் கேணி. இவ் வெற்றிலைக்கேணி கிரா மத்தின் சைவப் பற்றுக்கும் ஆன்மீகச் சிந்தனைக்கும் சான்றாக செல்வம் பெருக்கும் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் திகழ்கின்றது.

இவ்வாலயத்தின் வரலாறு இற் றைக்கு சில ஆண்டுகளுக்கு முற் பட்டதல்ல. ஏறத்தாள 1870ஆம் ஆண் டளவில் போக்குவரத்து வசதிகள் எவையுமற்ற நிலையிலும் இவ்வால யத்தை அமைப்பதற்கான அருட்சிந் தனை தற்போதைய தர்மகர்த்தா அவர்களின் மூதாதையரான விநாய கர் பாராத்தை தம்பதியினருக்கு ஏற்பட்டது. அவர்கள் தமது எண் ணத்தை வண்ணமாக்கும் வகையில் சிதம்பரத்தில் இருந்து விநாயகர் விக் கிரகத்தை வருவித்து தமக்குரிய காணியில் கிளைவிட்டுப் பரந்திருந்த ஆலமரத்தின் அருகே சிறியதொரு கொட்டில் அமைத்து வழிபாடு செய்ய ஆரம்பித்தனர். இவர்களின் மக னான நல்லதம்பி அவர்களுக்கு எம் பெருமான் விநாயகருக்கு பூசை செய் யும் அருட்திறம் கிட்டியது. ஆன்மீக உணர்வு மிக்க இவ்வூர் மக்கள் ஆலய வழிபாடுகளில் பங்கு கொண்டனர்.

நல்லதம்பி அவர்கள் காலமான தைத் தொடர்ந்து அவரின் மனைவி சின்னம்மாவும் பிள்ளைகளான நாகமுத்து மற்றும் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரும் அவர்களது கணவன் மார்களான வயிரமுத்து மற்றும் தம்பி ஐயா ஆகியோரும் ஆலய செயற் பாடுகளை முன்னெடுத்தனர்.

கால ஓட்டத்தில் சிறிய கொட்டி லாக அமைந்த விநாயகர் ஆலயம் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு

மடாலயமாக அமைக்கப்பட்டது. ஆலயத்தின் அருகிலேயே காவல் தெய்வமாகிய வைரவருக்கும் ஆலயம் அமைக்கப்பட்டது. விநாயகப் பெருமானும் வெற்றிலைக்கேணி விக்னேஸ்வரப் பெருமான் எனும் திருநாமத்துடன் அருளாட்சி புரியலானார்.

காலப் போக்கில் தம் மூதாதை வழி ஆலயப் பொறுப்புகளை வயிர முத்து நாகமுத்து தம்பதியினரின் புதல்வர்களான நல்லையா, வீரகத்தி, சுப்பிரமணியம் மற்றும் சதாசிவம் ஆகியோரும் தம்பிஐயா இலட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் புத்திரரான சிதம்பரப்பிள்ளையும் முன்னெடுத்தனர்.

கடல் வளத்தை மட்டுமன்றி விவசாயம் செய்வதற்குப் பொருத்தமான நில வளத்தையும் நீர் வளத்தையும் கொண்டமைந்தது இவ்வாலயம் அமைந்துள்ள பிரதேசம். சங்க இலக்கியங்களில் சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற மருத நிலக் காட்சியை இப் பிரதேசத்தில நேரில் காணக்கூடியதாக இருந்தது. கிளைவிட்டுப் பரந்திருந்த பென்னம் பெரு மருத மரங்களும் தாமரைத் தடாகங்களும் சுற்றி அமைந்த கழிநிலப் பரப்புகளும் அவற்றோடு இணைந்த வயல் நிலங்களும் தோட்ட நிலங்களும் மருத நிலத்திற்கும் நெய்தல் நிலத்திற்கும் இடையில் அமைந்த பாலை நிலமும் அங்கு மணலோடு பரந்து வளர்ந்திருந்த நாவல் முதலான மரங்களும் வீடுகளிலும் தோட்டங்களிலும் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த தென்னை மரங்களும் பார்க்குமிடமெங்கும் பராமரிப்பற்ற இடங்களில் நிறைந்திருந்த பனை மரங்களும் இப்பிரதேசத்தின் இயற்கை எழிலுக்குச் சான்றாகும்.

தளராத உழைப்பை மூலதனமாகக் கொண்ட இவ்வூர் மக்கள் இப் பிரதேசத்தின் இயற்கை வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி தம் வாழ்வை உயர்த்திக் கொண்டனர். பூசைக்கு வேண்டிய அரிசி. தேங்காய் பால் அன்னதானம், மண்டகப்படி முதலானவற்றுக்குத் தேவையான மரக்கறிகள் ஆகியவற்றுக்காக வெளியூருக்குச் செல்ல வேண்டிய நிலை இங்கு ஏற்படவில்லை.

கோயில் தொண்டை வாழ்வியலின் ஒரு அங்கமாக இணைத்துக் கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த இவ்வாலயம் அறச் சிந்தனையும் ஆன்மீகப் பற்றும் கொண்ட சமூகத்தினரை உருவாக்குவதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியது. இவ்வாலயப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் சமய ஈடுபாட்டை உணர்ந்து கொண்ட இந்துபோட். சு.இராசரத்தினம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா

வித்தியாலயத்தை 1957 ஆம் ஆண்டில் இக் கோயிலுக்கு அண்மையில் அமைத்தது. இப்பாடசாலை வரலாற்றில் இவ்வாலயத்தின் பெயரும் இணைக்கப்பட வேண்டும். ஏனெனில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே வெள்ளிக் கிழமை தோறும் காலையில் ஆசிரியர்களது வழிநடத்தலில் மாணவர்கள் அனைவரும் வரிசையாகச் சென்று தேவாரம் இசைத்து சிவபுராணம் பாடி பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வர். அதன் பின்னரே அன்றைய கற்றற் செயற்பாடுகள் ஆரம்பிக்கும். இன்று வரை இந்த நிலை தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றமை சிறப்பித்துச் சொல்லப்பட வேண்டியதாகும்.

மேலும் இவ்வாலயத்தில் போக்குவரத்து வசதிகள் அற்ற போதும் வருடந்தோறும் ஆவணிச் சதுர்த்தியன்று பெருந்திருவிழா கொண்டாடப்படும் திருவிழாவிற்காக ஊரே விழாக்கோலம் பூணும். வானுயர்ந்த சிகரம், ஆலய வாயிலில் உயர்ந்து நிற்க, ஈழத்தில் பிரசித்தி பெற்ற தவில், நாதஸ்வர வித்துவான்களின் மேளக் கச்சேரி, அன்றைய கால "சின்ன மேளம்" என அழைக்கப்பட்டவர்களின் நடன நிகழ்வுகள் என இரவிரவாக நடைபெறும் நிகழ்வுகளைத் தொடர்ந்து அதிகாலை வேளை அலங்கரிக்கப்பட்ட மிகப் பெரிய முத்துச் சப்பரத்தில் எம்பெருமான் விக்கினேஸ்வரரின் வீதி உலாவுடன் திருவிழா நிறைவுபெறும்.

அதுமட்டுமன்றி விநாயகர் ஷஷ்டி பூசைகளும் இவ்வாலயத்தில் சிறப்பாக இடம்பெறும். 21 நாள்களும் விநாயக புராணம் பக்தி பூர்வமாக ஓதப்படும். சிறுவர் முதல் பெரியவர்கள் வரை சைவ மக்கள் அனைவரும் இப் பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வர். கிராமிய நாகரிகத்தின் வெளிப்பாடாக மோதகம், வடை என பிரசாதங்கள் பெருமளவில் படைக்கப் படும்.

தைப்பூசத்தில் அன்று ஊர் மக்கள் தமது வயலில் இருந்து புத்தம் புது நெற்கதிர்களைக் கொண்டு வந்து ஆலயத்தில் அர்ச்சித்து பின் தமது வீட்டு முகப்பில் அடுத்த வருடமும் விளைச்சல் பெருக இறைவனை வேண்டி கட்டுவர். சித்திரா பௌர்ணமியன்று தமது வயல்களில் விளைந்த நெல்லரிசி, தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்ட மரக்கறிகள், தேங்காய்கள் என சுமந்து வரும் பொருட்களைப் பயன்படுத்தி சித்திரைக் கஞ்சி காய்ச்சுதலும் சிறப்பாக இடம் பெறும். வெற்றிலைக்கேணியில் வாழ்ந்த சைவ மக்கள் யாவரையும் ஒரு சமூகக் குழுவாக ஒன்றிணைப்

பதாக இவ்விழாக்கள் அமைந்தன.

விநாயகப் பெருமான் அருளால் இப்பிரதேச மக்களின் வாழ்வு சிறப்புற்றது. இந்நிலையில் மடாலய மாக அமைந்த இவ்வாலயத்தை ஆகம முறையிலமைந்த ஆலயமாக அமைக்க வேண்டும் என்னும் ஆவல் மேலிட திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கும் நோக்கில் 1971ஆம் ஆண்டு பாலஸ்தான விஞ்ஞாபனம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மூலஸ்தானத்திற்கான அடிக்கல் லினை நல்லதம்பியின் பேரப்பிள்ளை களில் மூத்தவரான வயிரமுத்து நல் லையா அவர்கள் நாட்டி வைத்தார்கள்.

சிறிது காலம் தடைப்பட்டிருந்த திருப்பணி வேலைகள் வயிரமுத்து நல்லையா அவர்களின் சகோதரரும் தற்போதைய ஆலய தர்மகர்த்தாவு மான வயிரமுத்து வீரகத்தி அவர்க ளால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அவரது அயராத முயற்சியாலும் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஒத்துழைப்பாலும் இறை அருள் கைகூட திருப்பணி வேலை கள் விரைவாக நடைபெற்றன.

மூலஸ்தானமும் அர்த்த மண்டப மும் பூர்த்தியாகும் வேளையில் தரமகர்த்தாவின் ஒப்புதலுடன் வெற் றிலைக்கேணியைச் சேர்ந்த திரு. சின்னத்துரை செல்லையா அவர்கள் மகாமண்டபத்தினையும் மணிக் கோபுரத்தையும் தமது சகோதரர்கள தும் ஊர் மக்களதும் உதவியுடன் அமைத்தார். இதனைத் தொடர்ந்து தர்மகர்த்தாவான வீரகத்தி அவர் களின் மகன் தர்மலிங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக வெற் றிலைக்கேணியைச் சேர்ந்த வேலுப் பிள்ளை இரத்தினசிங்கம் அவர்களி னால் ஆகம் முறைப்படி அமைய வேண்டிய இடத்தில் பரிவார மூர்த்தி யான வைரவருக்கும் ஆலயம் அமைக் கப்பட்டது. இவ்வாலயத்தின் கால திருப்பணி வேலைகளையும் பிரதம ஆசாரியராக இருந்து நிறைவு செய்த வர் சித்தங்கேணியைச் சேர்ந்த ஸ்தபதி கணேசமூர்த்தி ஆசாரியராவார்.

இவ்விடத்தில் ஆலயப்பணிகளி லும் திருப்பணி வேலைகளிலும் தம்மை ஈடுபடுத்திய முருகுப்பிள்ளை வேலுப்பிள்ளை, ஐயம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை, கணபதிப் பிள்ளை குஞ்சுப்பிள்ளை, செல்லத் துரை வள்ளியம்மை, மூத்ததம்பி தங்கம்மா, செல்லப்பா கணபதிப் பிள்ளை, மூத்ததம்பி சபாரத்தினம், மூத்தம்பி இராசசேகரம் ஆகியோரது பணிகளும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இத்திருப்பணி வேலை களின் போது தர்மகர்த்தா அவர்

களின் துணைவியாரான வீரகத்தி நாகம்மா அவர்கள் கணவரால் மேற் கொள்ளப்டும் திருப்பணி வேலை களுக்காக தம்மையே அர்ப்பணித்துச் செயற்பட்டார். திருப்பணி வேலை களில் ஈடுபடும் ஆசாரியார் உட்பட பணியாளர்கள் அனைவருக்கும் உணவு தயாரித்து தானே ஆலயத்திற் குக் கொண்டு சென்று கொடுப்பார். இப்பணி தற்போதும் ஊர்மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கில் இக்காலப் பகுதியில் சிற்ப வேலைப்பாடுகளு டன் கூடிய இரட்டைப் பஞ்சாங்க மூலஸ்தான தூபி அமைக்கப்பட்டது இவ்வாலயத்தில் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாலய திருப் பணி வேலைகள் பூர்த்தியானமை யைத் தொடர்ந்து சீதாராம சாஸ் திரிகளால் முகூர்த்த நிர்ணயம் செய் யப்பட்டு 1977ஆம் ஆண்டு தைத்திங் களில் கும்பாபிஷேகம் நடைபெற் றது. கும்பாபிஷேகப் பெருவிழாவை மானிப்பாய் இரத்தினக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடாத்தி வைத்தார். விக்கினம் தீர்க்கும் விக்னேஸ்வரப் பெருமான் ஆலயத் திற்கு செல்வ விநாயகர் ஆலயம் என்னும் திருநாமம் சூட்டப் பெற் றது. செல்வ விநாயகர் என்ற பெய ருக்கு ஏற்ப கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஊர் மக்களின் செல்வம் பெருக ஆரம்பித்தது. மடாலயமாக இருந்த போது நடைபெற்ற பூசைகள் விழாக்கள் மேலும் சிறப்பாக நடைபெற்றன.

நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த் தங்கள் காரணமாக 1991 இலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை இவ்வாலய மும் மூடப்பட்டு இருந்தது. பின்னர் சாதாரண சூழல் ஏற்பட்டமையைத் தொடர்ந்து தர்மகர்த்தாவின் வழி காட்டலில் பாலஸ்தாபன விஞ்ஞா பனம் நடைபெற்று பூசைகள் நடை பெறலாயின. மேலும் ஆலயத்திற் கென தர்மகர்த்தா சபை உருவாக்கப் பட்டு யாப்பு விதிகளும் உருவாக்கப் பட்டன. பின்னர் 2004 ஆம் ஆண் டில் ஏற்பட்ட சுனாமி கடல் கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து பூசைகள் தடைப்பட்டன. சிறிது காலத்தில் மீண்டும் பாலஸ்தானம் திருப்பணி வேலைகள் ஆரம்பம். ஆனால் தொடர்ந்து துரத்திய யுத்த சூழ்நிலை காரணமாக பூசைகள் நிறுத்தப்பட் டன.

போர் அனர்த்தம், சுனாமி அனர்த் தம் என்பவற்றின் பாதிப்பிற்குள் ளாகாது இவ்வாலயத்தின் மூலஸ் தானம் உட்பட பிரதான மண்டபங் கள் யாவும் சேதமில்லாமல் இருந் தமை செல்வ விநாயகரின் அற்புதங் களில் மிகப் பெரிய அற்புதமாகும்.

தொடர்ந்து 2010 ஆம் ஆண்டில் மீள்குடியேற்றம் இடம்பெற்றதன் பின் ஆவணி மாத விநாயக சதுர்த்தி யன்று மீண்டும் பாலஸ்தாபன விஞ் ஞாபனம் சிவஸ்ரீ கனக சிவகுமாரக் குருக்கள் தலைமையில் இடம்பெற் றது. திருப்பணி வேலைகளை தள் ளாத வயதிலும் தர்மகர்த்தாவாகிய வயிரமுத்து வீரகத்தி அவர்கள் முன் னின்று ஒழுங்கமைத்தார். தமது மூதாதையர் வழி ஆலயத்தின் திருப் பணி வேலைகளுக்காக தன்னந்தனி யாக தமது வீட்டில் இருந்து சகல வேலைகளையும் மேற்பார்வை செய்து இன்று கும்பாபிஷேகத்தையும் கண்டு களித்திருக்கும் அவரது பணி என்றும் நினைவு கூரப்பட வேண்டி யது.

நகர்ப்புற ஆலயங்கள் போல் நிதி வசதிகளோ ஏனைய வருமானங் களோ இல்லாத போதும் அவரது திண்ணிய எண்ணம் காரணமாக செல்வ விநாயகரின் அருளாட்சி கிடைத்தது. இவ்வாலய திருப்பணி வேலைகள் ரூபா ஐம்பது லட்சத் திற்கு மேலாக நடைபெற்று 12.02. 2014 அன்று கும்பாபிஷேக நிகழ்வை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாலய தர்ம கர்த்தாவினதும் அவர்தம் உறவுகளினதும் பெரும் நிதிப்பங்களிப்புடனும் ஊர்மக்களது நிதிப்பங்களிப்புடனும் திருப்பணி வேலைகள் நிறைவு பெற்றன.

யுத்த அனர்த்தம், சுனாமி அகிய வற்றின் வடுக்கள் இன்னமும் மாறாத நிலையில் உள்ள இப்பிர தேசத்தில் புனருத்தாரணம் பெற்று உயர்ந்து நிற்கும் இவ்வாலயத்தின் இறைவனாகிய செல்வ விநாயகர் அருளால் இழந்து போன இயற்கை வளங்களை இவ்வூர் மீண்டும் பெற வேண்டும் வளம் நிறை பனை மரங்கள், வானுயர்ந்த தென்னஞ் சோலைகள், வீடெங்கும் நிழல் பரப்பும் மாமரங்கள், விளைச்சலை அள்ளித் தரும் வயல் நிலங்கள் என் பவற்றை உள்ளடக்கிய கற்பனைக் கண்ணில் இப்போதும் நிறைந்திருக் கின்ற இயற்கை எழில் நிறைந்த இக் கிராமம் மீண்டும் புறக் கண்களில் தெரிவதற்கு "ஸ்ரீ செல்வவிநாயகர்" பெருமானின் திருக்குடமுழுக்கு வழி வகுக்கும் என்பது திண்ணம்

திரு. வீரகத்தி. இந்திரலிங்கம்.
அதிபர், யா/அல்வாய் ஸ்ரீரங்க வித்தியாசாலை.

# சமய வாழ்விற்கும் சூழலுக்குமிடையிலான தொடர்பு விருத்தி பற்றிய ஒரு சிந்தனை



சமயம் என்பது வழிபாடு மட்டும் சார்ந்ததல்ல. சமயம் என்பது வாழ்வியல் - வாழும் முறை வாழ்வு என்றால் ஒருவன் இவ்வுலகில் தனது இருப்பினை நிலைபெறச் செய்வதற்கு மேற் கொள்ளும் முயற்சிகள், தொழிற்பாடுகளாகும். "நான் வாழ்கிறேன்" என்றால் உண்பது, உடுப்பது, தொழிலாற்றுவது, உறங்குவது, சந்ததிவிருத்தி என்பது மட்டுமானால் இவை எல்லோருக்கும் பொதுவானவையாகும். விலங்குகட்கும் மனிதர்கட்கும் கூட இவை பொருந்தும். இது ஒருவரது அன்றாட வாழ்க்கை - நியதி இயற்கையான வாழ்வு முறை எனலாம். மனிதனை விலங்கு நிலையில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதே சமயவாழ்வுடன் கூடிய பண்பாடு ஆகும். பண்பாடு என்பது நாகரிகமும் கலாசாரமும் இணைந்த ஒரு மனித வாழ்வின் செயற்பாடுகளாகின்றன.

மனிதனும் ஒரு சமூகவிலங்கு(Social animal) என்றே சமூகவியல் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் மனிதனோ பேசத் தெரிந்த மிருகம் புராதன காலத்திலே விலங்குகள் போல ஆடையின்றி - நாணமின்றி - அச்சமின்றி - அறிவுமின்றி - நாகரிகம் பண்பாடுகளின்றி வாழ்ந்த ஆதிமனிதனை நடையுடை பாவனையால் - அன்பால் - பண்பினால் - அறிவால் - முழுமனிதனாக மானிட நிலைக்கு உயர்த்தி சமயவழி வந்த பண்பாடுகளும் நாகரிகத்துடனும் கூடிய வாழ்வியலாகும். இன்றைய உலகில் இந்து சமயப்பண்பாடு, கிறிஸ்தவ மதப் பண்பாடு என்றவாறு இவ்வுலகில் மனிதன் தன்னை நாகரிகமடைந்த அறிவுசால் மனிதனாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டான். அவனது சமயம் சார்ந்த பண்பாடுகள் அரச மரபுகளூடாகவும் வளர்த்தெடுக்கப்பட்டன.

சமயங்கள் இந்த உலகிலே குறிப்பாகக் கீழைநாடுகளில் மனித வாழ்வியல் மேம்பாடடைய பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளன. இதிகாச புராண காலமாகிய கி.பி 4ஆம் நூற்றாண்டு முதல் சுமார் கி.பி 14ஆம் நூற்றாண்டு வரை இந்திய நாட்டிலே இந்து சமயமே ஆட்சிக்கட்டிலிலிருந்து மொகலாயப் படை எடுப்பின் பின்னரே இந்து அரசுகள் வீழ்ச்சியடைத் தொடங்கின. சுமார் 14-15 நூற்றாண்டுகளாக இந்துக்களது வாழ்வியற் பண்பாடுகள் தென்னா

சிய, தென்கிழக்காசிய நாடுகளிலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தின. மேலும் அரசியல் சூழலுடன் இயற்கைச் சூழலும் சமய வாழ்வியல் மேம்பாடுற பெரிதும் பங்களிப்புச் செய்நுள்ளன.

மனிதன் வாழும் உலகமும் அதன் சுற்றுச் சூழலும் உடனுறையும் உறவுகளின் சமுதாய நடைமுறைகளும் கூட ஒருவனது சமயம் சார்ந்த வாழ்க்கை முறைகளைத் தீர்மானிக்கின்றன எனலாம். முதலில் தனிமனிதன் குடும்பம் சுற்றும் சூழல் கிராமம் நகரம் சமூகம் என விரிவடைந்து முன்னேறிக் கொண்டே போகின்றது. சூழலால் மனிதனும் மனிதனால் சூழலும் இணையத் தொடங்கி இயற்கை சார்ந்த வாழ்வியல் பரிணமித்தது காலப்போக்கிலே சூழல் மாற்றமடைகின்றன. ஆரம்பத்தில் சூழல் மாற்றங்கட் கேற்ப மனிதனும் தன்னை அவற்றுடன் இணைத்து சூரியர், சந்திரர், அக்கினி என்றின்னோரன்ன வகையில் இயற்கையை வழிபாடு செய்து அவற்றுடன் இணைத்து இசைவாக்கமடையச் செய்து வாழ்ந்தான். இயற்கையுடன் மனித அறிவு முரண்பட்டதும் பல இயற்கைச் சவால்களைச் சந்தித்தான்.

இயற்கையும் மனித அறிவும் மோதும் போது இயற்கைச் சூழலிடமிருந்தே அதற்கான கற்றல் முறைகளையும் படிப்பினையும் பெற்றான். ஆரம்பத்திலே அவை அறிவாக, ஆற்றலாக, கலகமாக, சிக்கல் நிறைந்த பிரச்சினைகளாகவும் மாறின. அத்தகைய மோதலின் விளைவே ஞானமாக, விஞ்ஞானமாக, மெய்ஞானமாகவும் முன்னேற்றம் கண்டது. எனவே இயற்கைச் சூழலிலே மனிதனுக்குக் கல்வி நிலையங்களாக, கற்றல் உபகரணங்களாக, தொழிற் கருவிகளாகவும் உருவாகின. இயற்கையை மனிதன் தனது செயற்பாடுகள், விஞ்ஞான பரிசோதனைகளால் காயப்படுத்தி சிதைவுறச் செய்த போது அது புயலாகப், பூகம்பமாக, எரிமலையாக, சுனாமியாக எதிர்விளைவுகளை ஏற்படுத்தியது, அதனால் சூழல் மாசடைதல், வளி மாசடைதல், நீர் மாசடைதல் பலமோச மான விளைவுகளையும் சந்தித்துள்ளது.

இயற்கையைப் போற்றினால் இயற்கையால் வாழ்வாய், இயற்கையை அழித்தால் இயற்கையால் அழிவாய் என்ற மெஞ்ஞானிகள் சிந்தனை எவ்வளவு பெரிய உண்மையை அன்றே உணர வைத்தனர். இயற்கை சூழல் சார்ந்த வாழ்வியல் அறிவு பூர்வமான ஆரோக்கிய வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதனை உபநிடதங்களும், கீதையும், தோவார திருமுறைகளும் சூழலுக்கு சமய வாழ்விற்கும் உள்ள தொடர்பு விருத்தியை சுட்டி காட்டி அறிவுறுத்தின. மோதல்கள், பிரச்சனைகள், துன்பங்கள் என்பவற்றால் களைத்து தோற்று போன மனிதனும் சரி இவற்றுடன் போராடி வெற்றியடைந்தவனும் சரி இருவருமே இறுதியில் தன்னைப் பற்றியும் தனது அமைதி, ஆரோக்கியம் பற்றியும், துயரங்களில் இருந்து

விடுபடுதல், வாழ்க்கை போராட்டங்களுக்கு முகம் கொடுத்தல் என்பன போன்ற நடவடிக்கைகளால் எனது மனதையும் அறிவையம் தூண்டி விட்டு தனிமையை நாடி சிந்தனை வயப்பட்டு உளவளத் திறனை விருத்தி செய்து சிக்கல்கட்குத் தீர்வு காண புறப்படுகின்றான்.

இதுவே மனித வாழ்க்கை பயணத்திலே ஆத்மஞான வேட்கையாக சுபீட்சமான உலகை காணும் ஆர்வமாக அக்கறையாக வெளிப்பட்டு ஆழமான சிந்தனையாளன் ஒருவன் விஞ்ஞானியாகவும் ஒருவன், மெய் ஞானியாகவும் ஒருவன், இசைஞானியாகவும் ஒருவன், கலை ஞானியாக ஒருவன், தத்துவஞானியாக, சமூக விஞ்ஞானியாக எனப் பல்வேறு துறைகளில் பிரகாசமடைகின்றனர் இவ்வாறாக மக்களின் கல்வியறிவும் உழைப்பும் மட்டுமன்றி சூழல் தொடர்பு விருத்தியும் சமய வாழ்வுக்கு ஒரு பகுதியாக மனித முன்னேற்றத்தில் பெரும் பங்கு வசிக்கின்றது எனலாம்.

மேலும் சமய வாழ்வு என்றால் என்ன? என்ற சிந்தனை எழும் போது சமயம் என்பது நம்பிக்கையா? எதனை நம்புவது? ஏன் நம்ப வேண்டும்? என்ற வினாக்கள் அறிவியல் உலகில் ஏராளமான குழப்பங்களை தோற்றுவித்தன. நம்பிக்கையின் முதற் படியாக புராதன கால மக்கள் இயற்கை சூழலை தான் முழுமையாக நம்பி வாழ்ந்தனர் ஐம்பூதங்களும் முச்சுடர்களும் மரம், செடி கொடிகள், கற்கள், நதிகள், மலைகள், விலங்குகள், பறவைகள் எனத் தான் வாழும் சூழலில் தனக்கு உதவியாக அமைந்த அத்தனை இயற்கை வளங்களையும் அன்புடன் பாராமரித்து போற்றி பாதுகாத்து வளர்த்து அவற்றின் உதவியால் தானும் முன்னேறி செல்வந்தனானான். இவ்வாறாக நன்றியுடன் பாராமரித்துப் போற்றுவதலானது நாளடைவில் வழிபாடாக பரிணமித்தது.

வழிபாட்டிற்கு இலக்கு அல்லது அடையாளம் ஒன்று தேவைப்பட்ட போது இயற்கையின் அம்சமான கல்லை, மண்ணை, மலையோ, நதியோ ஏதோ ஒன்றினை குறியீடாகக் கொண்டு வழிபாடாற்றத் தொடங்கினான் அத்தகைய செயற்பாடுகள் நாளடைவில் அவரவர் வசதிக்கேற்ப யாகம், வேள்வி, சடங்குகள், கிரியைகள், விரதங்கள், விழாக்கள் என பல்கிதப் பெருகின தமக்கு நல்லவைகள் நடக்கின்ற போதெல்லாம் இறையருள் என வணங்கி சந்தோச மிகுதியால் ஆடல், பாடல், விழாக்களை நடத்துதல் என இவைகள் கல்வியும் அறிவும் பொருளாதார வசதியும் பெருகப் பெருக சிறிய நிகழ்வுகள் யாவும் வளர்ந்து கற்கள் கடவுளாகவும், கோயிலாகவும், பிற வாகனமாகவும் மாறும் போது பொருளாதார புகழ் அந்தஸ்துப் போட்டிகளில் கலைகள், கட்டிடங்கள், சிற்பம், ஓவியங்கள் என மனிதன் தனது வாழ்வியல் நிகழ்வுகளை ஆலய கலை களாக்கி ஆண்டவனாக்கி வழிபடும் நிலைக்கு வாழ்க்

கைத் தரத்தை உயர்த்திக் கொண்டான். இவ்வாறு சமய வாழ்வு பெரிதும் ஆக்கிரமித்துக் கொண்டது.

இவ்வாறாக வளர்ச்சி கண்ட தெய்வங்கள், வழிபாடுகள், கிரியைகள் யாவும் மரபுகளாக சம்பிரதாயங்களாக தொன்மங்களாகத் தொல பொருட்களாக மனித வாழ்விலே தொடர்சியாக நிலை பெற்றன. மேலும் சமுதாயத்தையே மாற்றி அமைத்த பெரியோர், சான்றோர், ஞானியர், போர் வீரர், ஆட்சியாளர் என்போர்கடகும் நினைவு தூபிகள், மண்டபங்கள், வீரக்கல் முதலியன அமைத்துச் சிறப்பித்தும் வழிபாட்டு நெறிகளுள் ஒன்றானது. இத்தகைய வழிபாட்டு முறைகள், மரபுகள் ஒழுங்குபடுத்தம் முறைமைகள் பிற்காலம் உயர் நெறியாளர்களால் தோற்றுவிக்கப்பட்டு அவை ஒழுங்கமைக்கப்பட்ட போது இலக்கியங்கள், ஆவணங்கள், தொல்லியற் சின்னங்கள், சாஸ்திரங்கள் சம்திர தாயங்களாக வலுப் பெற்றன. சூழலுடன் வாழ்வு தொடர்புபடும் போது சமயச் சின்னங்களும் தொடர்பு விருத்தியில் முக்கிய பங்கு வகித்தன. அதனால் அத்தகைய அடையாளங்கள் அந்தந்த நாட்டிற்கும் இன, மத, மொழி வாழ்க்கைச் சூழல் விருத்திற்கட்கேற்ப ஒவ்வொர் பெயரால் அழைக்கப்பட்டன. இவ்வாறு வரலாற்று காலத்திற்கு முன்பு இருந்த நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாடுகள் இந்து சமய மரபுகளாகத் தொன்மங்களாகவும் காலப் போக்கில் அறிவு வளர்ச்சியினை வகுத்து அவற்றை கடைப்பிடிப்பதில் ஏற்படட சிக்கல்கள், குழப்பங்கள், தவறுகளை, குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத் தோன்றிய பெரியவர்கள், சான்றோர், ஞானியர், நாயன்மார், சிற்றர்கள் என்றின்னோரன்னவராகவும் ஐரோப்பிய நாடுகளில் யூதர்களை அடுத்து கிறிஸ்துவால் கிறிஸ்தவர்களும் அரபு நாடுகளில் அல்லாவால் இஸ்லாமியர்களும் சீனா இலங்கை போன்ற நாடுகளில் பௌத்த கோட் பாடுகளாலும் மக்கள் வாழ்வு மாற்ற மடைந்து ஏற்றமடைந்து வளர்ச்சி கண்டது.

அத்தகையதொரு தொன்மையான வரலாற்றுச் சூழலில் சிவனை வழிபட்ட மக்கள் சைவர் எனவும் சைவ சமயம் என்பதும் சைவ மக்கள் வழிபாடு நெறியானது. "நெறி நின்றார் நீடு வாழ்வார்" என பிற்கால அறிஞரும் போற்றினர். இத்தகைய சைவ நெறி வேதாகமங்கள் தேவாரத் திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்களால் மேலும் பலப்படுத்தப்பட்ட நிறுவனமானது இன்றைய கால கட்டங்களிலும் சைவ நெறியானது சமுதாய சூழல் தொடர்பு விருத்தியில் சமூகசேவை மையங்களாகவும் வளர்ந்தது. இத்தகைய தொடர்பு விருத்தி மையங்களில் சைவ ஆலயங்கள், சைவ பாடசாலைகள், சைவ சமய நிறுவனங் கள், தொண்டர் அமைப்புக்கள் முக்கியம் பெற்றன.

பேராசிரியர்
கலைவாணி இராமநாதன்
*(M.A., Ph.D.)*
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்



# தேவாரம் காலத்தின் தேவை

## சைவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கி.பி ஆறாம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி வீழ்ச்சியுற்று பல்லவர் ஆட்சி தொடங்கியது. பல்லவர் ஆட்சியின் தொடக்கத்தில் வைஸ்ணவம் தழைத்தாலும் இரண்டாம் நரசிம்மவர்மன் காலம் *(கி.பி 691-728)* முதல் சைவம் முக்கியத்துவம் பெற்றது.

கி.பி ஏழாம் நூற்றாண்டில் சமயப்புரட்சியின் காரணமாக பிறசமயங்கள் வலுவிழந்தன. சைவமும் வைணவமும் எழுச்சி பெற்றன. புத்தமும் சமணமும் தங்களுடைய மதக் கருத்துக்களை வெறும் உரைநடைகளாகவும், சொற்றொடர்களாகவும், கட்டளைகளாகவும் மட்டுமே கூறின. சைவ வைணவ இலக்கியங்களோ சமயக் கருத்துக்களை தமிழ்ப் பண்ணுடன் பொருந்திய இசைப் பாடல்களாய் வெளிப்படுத்தின.

சோழர்காலத்தில் கோயில்கள் பல கட்டப்பட்டன. கோயில்களில் தேவாரம் பாடுவதற்கு அரசர்கள் பொருளுதவி அளித்தனர். தேவாரம் தினமும் பாடுவதை கண்காணிக்க தேவாரநாயகம் என்ற உயர் அதிகாரி நியமிக்கப்பட்டார். மக்களின் தீவிர பக்தியின் காரணமாக சைவம் தழைத்தோங்கியது. மன்னர்களால் கட்டுவிக்கப்பட்ட கோயில்களில் தேவாரம் ஓதுதல், ஆராதனை செய்தல், விழாக்கள் நடாத்துதல் ஆகியவற்றிற்கு மன்னர்கள் நன்கொடை அளித்தனர்.

## தேவாரம் - சிறப்பு

மூவர் தேவாரம் மக்களிடையே எளிமையான மொழிகளிலே சென்று அவர்களிடையே சைவசமயக் கருத்துக்களைச் சேர்க்கலாயின. தேவாரங்களின் எளிமையும், இனிமையும், இறைதன்மையும் பழகு தமிழில் பண்ணோடு அமைந்துள்ளன. இந்த தமிழ்ப் பண்கள் தேவாரப் பாடல்களை மக்களிடையே எளிதில் கொண்டு சேர்த்தன.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பவர் தன்மை நாணியே"

என்ற பாடலில் இறைவனின் எளிமை பற்றி நாவுக்கரசர் எடுத்துக்கூறி அத்தகைய எளிமையான இறைவன் எளிதில் பக்தர்களிடம் வசப்படுவான் என்று கூறியுள்ளார். மேலும் உறவு என்னும் கோலினை நட்டு பக்தியுணர்வு என்ற கயிற்றினால் அவனை நாம் முழுவதும் உணர முற்படும் போது பாலில் மறைந்துள்ள வெண்ணெய் போன்றும் விறகில் மறைந்துள்ள தீயினைப் போன்றும் எளிதில் வெளிப்படுவான் என்பதை பின்வரும் தேவாரத்தின் மூலம் உணர்ததுகின்றார்.

"விறகிற் றீயினன் பாலில் படுநொய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

**தேவாரங்களில் மனவளக்கலை**

மனதினை திடமாக, வளமாக வைத்துக் கொண்டால் பொன்னார் மேனியனான புண்ணியன் அருள் நமக்கு கிடைக்கும் என்பது தேவாரக் கருத்தாகும்.

சமணர்களின் சொற்களுக்கிணங்க மகேந்திரவர்ம பல்லவன் திருநாவுக்கரசரை நீற்றறையில் இடும்படி உத்தரவிடுகிறான். ஆனால் தாம் கொண்ட மனவளத்தின் காரணமாகவும் இறையருளின் காரணமாகவும் அதன் வெம்மையை உணராது

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்று சிவபெருமானின் அருட்திறம் உரைப்பவராய் உள்ளார். இத்தகைய ஒருமனத்திண்மை மனதை பக்தி நெறியில் செலுத்தும் போது மட்டுமே பெறமுடியும்.

ஒரு படைப்பு எளிமை உரு கொண்டுமக்களை சென்றடையும் போதுதான் வெற்றியடைகிறது. இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை பிரதிபலிக்க வேண்டும். தேவாரமுதலிகள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதும், இலக்கிய அடிப்படைத் தன்மையானஅறம்,பொருள், இன்பம், வீடு என்பவை பற்றியும் விளக்கக் கூடியதான மூவர் தேவாரங்கள் மக்களிடையே இறையுணர்வை எளிமையாய் சென்றுணர்த்தின.

மனம் ஒரு தோட்டத்தைப் போன்றது. தோட்டத்தை செப்பனிட்டு முட்களை அகற்றி நல்லபயிர்களை அறுவடை செய்வது போல நம் மனம் என்னும் தோட்டத்திலுள்ள காமம், கோபம், பேராசை, பொறாமை, அகந்தை, கபடம் என்ற முட்களை நீக்கி நல்ல எண்ணம் என்னும் தண்ணீரை ஊற்ற வேண்டும்.

மனத்தூய்மையும் அதனால் உண்டாகும் மன அமைதியுமே மனநலத்தைக் கொடுக்கும். மனத்தூய்மை என்பதை வள்ளுவர் முதன்மை அறமாகக் கருதுகின்றார். மனம் சுத்தப்படும் போது அது சுமை குறைந்து கபடமற்றதாகிறது. தூயமனதில் தீயகுணங்கள் குடிபுகுவதில்லை. அது அமைதியின் இருப்பிடதுமாகத் திகழ்கிறது. எங்கே அமைதி இருக்கிறதோ அங்கே சாந்தி நிலவும். பிறர் நலனில் அக்கறை கொண்டு நாம் ஒதுக்கும் நேரங்கள் நம் மனநலத்திற்கு அமைதி கொடுக்கும். தேவாரங்கள் மக்களுக்கு இந்த மனதின் நிலையைத் தான் போதிக்கின்றன.

### இறைவனின் எளிமைத் தன்மை

சறபுபத்திர மார்க்கம் கொண்டு வழிபடச் செய்த திருஞானசம்பந்தருக்கு இறைவன் ஞானப்பால் அளித்து அருள் செய்தார். இவா எம்பெருமானை தனது மூன்றாவது அகவையிலேயே தோடுடைய செவியன்............ என்று துதிக்கிறார்.

தாசமாாக்கம் கொண்டு வழிபட்ட திருநாவுக்கரசர்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

என்று பதிகம் பாடி சிவனருளை விளக்குகிறார் ஆட்கொண்ட சிவபெருமானின் கருணைத் திறம் கண்ட நாவுக்கரசர் தம்மை நல்வழிப்படுத்துவதற்குக் காரணமாயமைந்த சூலை நோய்க்கு நன்றி தெரிவிக்கின்றார்.

தம்பிரான் தோழர் என்றழைக்கப்படும் நம்பியாரூரர் "பித்தனே" என்று சிவ பெருமானை அழைத்த போது முப்பிறவி வரத்தினால் ஆட்கொண்டார் எம் பெருமான்.

அடியவர்களுக்கு இத்தனை எளியனாய்த் தோன்றும் பொன்னார் மேனியனை அடைய நினைக்கும் மாந்தர்களுக்கு தேவாரப் பாடல்களின் எளிமை மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ளன. இறைவன் அனைவருக்கும் எளியன் என்கிறது தேவாரம்.

**தேவாரங்களில் இசைக் கூறுகள்**

இசை என்பது மனதினை ஒருநிலைப்படுத்தும் தேவாரம் சைவ சமய நுட்பங்களை விளக்கமாகக் கூறும், கூட்டு வழிபாட்டு உணர்வை எழுப்பும். இசையோடு மொழியையும் சமயத்தையும் மக்களிடம் பரப்பும் சாதனமாக இது விளங்குகிறது. தேவாரத்தின் இசைக் கூறுகள் இணைந்த பண்களே இப் படைப்பினை மக்கள் மத்தியில் எளிதில் கொண்டு சென்றன என்றால் மிகையாகாது.

மனதை ஒருநிலைப்படுத்துவதும் மனதை பக்குவப்படுத்துவதுமான சிறப்புப் பண்பு இசைக்குரியதாகும்.அத்தகைய இசைப் பாடல்களின் துணை கொண்டு சைவசமயத்தை வளர்த்ததோடு தமிழையும் வளர்த்தனர் சைவர்கள். மனிதனை ஆட்படுத்தும் தன்மை இசைக்கு உண்டு. எடுத்துக்காட்டாக திரைப் படங்களின் இசைப்பாடல்கள் இளைஞர்களை ஆட்படுத்துகின்றன. ஆனால் அவை ஒழுக்கநெறிகளிற்கு அப்பாற்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. இவற்றை மாற்றியமைத்து நல்ல இசையினை நல்ல கருத்துகளுடன் அமை தியான சூழலில் கூறும் போது அது எளிதில் மனதில் பதியும்.

**தேவாரம் - காலத்தின் அவசியம்**

இன்றய காலகட்டத்தில் மக்கள் பரபரப்பாகவும் இயந்திரத்தனமாகவும் வாழ்கின்றனர். மனிதநேயப் பண்பினை இழந்துள்ளனர். இதன் காரண மாக மனஅழுத்தம், மனஇறுக்கம், கருத்து வேறுபாடு என்று வாழ்க்கையில் ஓர் இறுக்கம் நிலவுகின்றது. இந்த இயந்திர மனதினை மாற்றி அமைதிக்கு வழிகோல பயிற்சிகள் சில தேவைப்படுகிறது.

தேவாரங்களைக் கற்றல் என்பது மாணவர்களுக்கு வெறுமனமே மனனம் செய்வதாக இருக்காமல் அவற்றின் பொருள் உணர்ந்து இறையருளைப் பெறும் வழிபாடு என்பதை நினைவில் நிறுத்தி பண்ணோடு பாட வேண்டும். இசைவழி மூவர் தேவாரங்கள் போதிக்கப்படுவது என்பது மாணாக்கர் மன தில் மட்டுமின்றி மற்றையோர் மனதிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

வளர்ந்த வரும் கணினியுகத்தில் குறுந்தட்டுக்கள், இசைத்தட்டுக்கள் கணினி வழிக் கல்வி போன்றவை கொண்ட தேவார இசையினை மக்களி டையே பரவச் செய்யலாம். போலிகளைக் கண்டு ஏமாறும் மக்கள் மனதில் உண்மை பக்தி என்றால் என்ன என்பதை தேவாரங்களின் வழி தெளிவுறுத்தி இளைய சமுதாயத்தினரை நல்வழிப்படுத்தலாம். பல்லவர் காலத்தில் தோன் றிய இத் தேவாரங்கள் எவ்வாறு தமிழகத்து மக்களுக்கும் தமிழுக்கும் புத்துணர்ச்சியை அளித்தனவோ அதே போன்று இத்தேவாரங்களின் பயிற்சி என்பது மாறிவரும் சமுதாயத்திற்கு புத்துணர்வையும், மக்கள் மனதில் ஏற் படும் வெறுமை உணர்ச்சிக்கு வடிகாலாகவும் அமையும் என்பதில் சந்தேகம்மில்லை. இறைவனின் உண்மைத் தன்மையை விளக்கும் தேவா ரத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் முலம் இறை தத்துவத்தின் உண் மையை பரவச் செய்யலாம்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன சிவபெரு மான் நிகழ்த்தும் சிறப்பான ஐந்தொழில்கள் என்பர். இவையாவும் தேவார முதலிகள் வாழ்வில் நிகழ்ந்தன. அவர்கள் அன்பும் அருளும் சிவனரு ளோடு இணைந்து வெளியிட்டன. இறந்தவர் பிழைத்தெழுந்தனர். நோயுற்றவர் நலம் பெற்றனர். வறிஞர் செல்வராயினர். தடையற்ற திருமணங் கள் நிகழ்ந்தேறின. ஊமைகள் பேசினர். பார்வை இழந்தோர் கண்ணொளி பெற்றனர். விதி வழி இல்லை எனறு கூறப்பட்டவர்களுக்கு மகப்பேறுகள் வாய்ந்தன. இத்தகைய நூற்றுக்கனக்கான அற்புத நிகழ்வுகளை பெரிய புராணம் பேசியது. இத்தகைய தேவாரப் பதிகங்களை நம்பிக்கையோடு ஓதி நலம் பெற்றவர்கள் பலர். எந்தெந்த தேவாரப் பதிகங்கள் எந்த அல்லலை அறுத்து நற்பயன் நல்கும் என்பதை பட்டியற் படுத்திக் காட்டுகிறோம்.

| விடயம் | ஓதவேண்டிய தேவாரம் |
|---|---|
| தில்லைச்சிற்றம்பல திருவருளைப் பெற | கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே |
| இம்மை, மறுமையில் பூரண இன்பம் பெற்று வாழ | துஞ்சலும் துஞ்சல் அல்லாத போழ்தினும் |
| தடையற்ற திருமணங்கள் நிகழ்ந்தேற | அயில் ஆரம் அம்பு அதனால் புரம் மூன்று எய்து |
| குழந்தைச் செல்வம் பெற | கண் காட்டும் நுதலானும், கனல் |
| வேண்டிய செல்வ வளம் வேண்டியவாறு கிடைக்க | இடரினும் தளரினும் எனது உறு நோய் |
| இல்லறவாழ்வு நல்லற வாழ்வாக அமைய - | மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் |
| உண்ண உணவும் உடுக்க உடையும் வாழ்நாள் முழுவதும் கிடைக்க | தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் |
| நல்லோர் உறவு கைகூட | நிரைகழலரவஞ் சிலம்பெலியலம்பு |
| அல்லல் அகலவும் வாழ்க்கை ஒளிபெறவும் | மீளா அடிமை உமக்கே |
| உடல் உறுப்பு உறுதி பெற | தலையே நீ வணங்காய் |
| நம் உடல் உறுப்புக்களின் மேல் வரும் நோய்களின் கடுமையிலிருந்து விடுபட | நத்தாாபடை ஞானம்பசு |
| தீராத வயிற்று நோய் நீங்க | கூற்றாயினவாறு விலக் ககிலீர் |
| வெப்புநோய், சுரநோய் நீங்க | மந்திரமாவது நீறு |
| கண்கள் ஒளி பெற | ஆலந்தான் உகந்து |
| நவக்கிரகங்களின் ஆட்சியிலிருந்து விடுபெற | வேயுறு தோளி பங்கன் |

*தினமும் தேவாரப் பதிகங்களை ஓதி, இறையருள் பெறுவோம். நலமாக வாழ்வோம் முத்திக்கு வழியமைப்போம்*

திருமதி.பா.பாலசிங்கம்
**B.A, Dip in Edu, M.A**
சைவசமய ஆசிரியஆலோசகர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்.



# விபூதியின் பெருமை

சிவபெருமானை வழிபடும் சைவர்களுக்கு சிவச் சின்னமாகவும் முக்கியமாகவும் அமைவது விபூதி. இவ்விபூதியானது பஸ்மம், ரக்ஷை, திருநீறு, என்று பல பெயர்களால் போற்றப்படுகின்றது. விபூதி என்பதற்கு மொழியியலின்படி பல்வேறு அர்த்தங்கள் உண்டு. விபூதியானது இறையருள் பெற் றது. உயர்விலும் உயர்வானது. முழுமையானது. எங்கும் நிறைந் திருப்பது. உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவது. வணங்கத்தக்கது. செழுமை நிறைந்தது. செல்வங்களைத் தரக்கூடியது. சித்திகளைத் தருவது. வேண்டும் வரங்களைத் தருவது. அலங்கரிப்பது.

சிவபெருமானின் திருமேனி முழுவதும் அலங்கரிக்கக் கூடிய ஒரே பொருள் விபூதி மட்டுமே. பொன்னார் மேனியனின் திரு மேனியில் மேவியிருப்பதால் விபூதி பொன்னிற மாக தங்கத் துகள்களாக மின்னுகின்றதாம் (பஸ்மோத்தூளித விக்ர"ாய நம - ஸ்ரீ சிவாஷ்டோத்தரம்).

விபூதி காட்டும் தத்துவங்கள் எண்ணற்றவை. இறந்தபின் அனைவரும் சாம்பலாகத்தான் வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. ஆகையால் இறைவன் முன் அனைவரும் சமன் என்பதையும் சுட்டுகின்றது. உலகம் அக்கினியால் தூய்மையடைவது போல விபூதியால் ஆன்மாக்கள் தூய்மையடைகின்றன.

வேதங்களும் உபநிடதங்களும் புராணங்களும் தமிழ்த் திருமுறைகளும் விபூதியின் மகிமையைப் போற்றிப் பறைசாற்றுகின்றன. ஒரு சமயம் வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் ஆகிய மூன்று அரக்கர்கள் பறக்கும் தன்மை கொண்ட பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளைக் கொண்டு தேவர்களை வருத்தினர்.

அரக்கர்களின் தொல்லை தாங்காத தேவர்கள் பிரம்மா விஷ்ணுவிடம் முறையிட்டனர். அவர்களை அழித்து சாம்பலாக்க சிவபெருமானால் மட்டுமே முடியும் என்பதால்

தேவர்கள் குறை தீர்ப்பதற்காக சிவனை நோக்கிப் பிரார்த்தனை செய்தனர்.

பிரமா தனது மனத்திற்குப் பிடித்தமானதும் அவர் தோற்றுவித்ததும் ஆகிய மானச சரோவர் என்னுமிடத்திலும், மஹாவிஷ்ணு தான் பள்ளி கொண்டிருக்கும் பாற்கடலில் சேரும் விரஜா என்னும் நதியின் கரையிலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவமிருந்து தியானம் செய்தனர்.

யாகத்தின் பஸ்மம் (சாம்பல்) போல் அரக்கர்கள் அழிய பிரார்த்தனை செய்தனர். மகாவிஷ்ணு சிறப்பான மந்திரங்களால் யாகம் செய்தார். அது வேதங்களில் விபூதியைப் போற்றுகின்ற மகாநாராயண உபநிடத் என்னும் மந்திரமாக அமைந்தது. பொதுவாக சிவாலயங்களில் விபூதியை அபிஷேகம் செய்யும்போது இந்த மந்திரங்களைத் தான் சொல்வது மரபு. (ஆத்மாமே சுத்யந்தாம் ஜ்யோதிரம் விரஜா விபாப்மா பூயாஸம் ஸ்வாா)

அந்த மந்திரமானது உடல், மனது, வாக்கு, ஆத்மா, அந்தராத்மா என அனைத்தையும் தியாகம் செய்தால் நமது ஜீவனை சிவபெருமான் தன் உடலில் சாம்பல் போல் பூசிக் கொள்வார் என்கின்றது.

பிரமா, விஷ்ணு இருவரின் தவத்திற்கு இணங்கி சிவபெருமான் மூன்று அரக்கர்களையும் தம் மந்தகாசப்புன்னகையால்மட்டுமே எரித்து சாம்பலாக்கினார், தேவர்கள் மகிழ்ந்தனர்.

(ஒரு உபரி தகவல் - முப்புரங்களை எரித்த பொழுது அக்கோட்டைகளின் ஒரு பாகம் மட்டும் முழுவதும் எரியாமல் (வேகாமல்) பூமியில் விழுந்தது. இந்த இடம் வேகா கொல்லை என்று அழைக்கப்படுகிறது. இவ்விடம் தமிழகக் கடலூர் மாவட்டம் நெய்வேலிக்கு அருகாமையில் உள்ளது. இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் எடுக்கப்படும் மண் செங்கல் அமைக்க உதவினாலும் இந்த ஊர் மண் மட்டும் செங்கல் சுடுவதற்குப் பயன்படாது. வேகாத மண் கொண்ட நிலம் என்பதால் வோகாகொல்லை என்று அழைக்கப்படுகின்றது. இவ்வூரில் அருமையான சிவஸ்தலம் உள்ளது).

சிவபெருமான் உடல் முழுவதும் பரவியிருக்கும் விபூதியை சிவ சின்னமாக, புனிதமான பொருளாக சைவர்கள் மதிக்கின்றார்கள்.

விபூதி தயாரிக்கும் முறையை சாஸ்திரங்கள் அற்புதமாக விளக்கியுள்ளன. காராம் பசுவின் சாணத்தை

நிலத்தில் விழுமுன் பிடித்து அதன் கோமயத்தால் ஈரமாக்கி, உருண்டைகள் பிடித்து காய வைக்க வேண்டும். அதை திரிபுர சம்ஹார காலம் என்று வர்ணிக்கக் கூடிய கார்த்திகை மாத பௌர்ணமியும் கிருத்திகை நட்சத்திரமும் இணைந்த கார்த்திகைத் தீபத் திருநாளில் எரியூட்ட வேண்டும். (சில ஆன்மீகர்கள் அன்று ஏற்றப்படும் சொக்கப் பானையில்தான் எரிக்கப்பட வேண்டும் என்பர்).

அது திறந்த வெளியில் தானாகவே ஆற வேண்டும். மார்கழி மாதம் முழுவதும் பொழியும் பனியில் அந்த சாண சாம்பல் சற்றே நிறம் மாறிக் கொண்டிருக்கும். தை மாதம் முழுவதும் அச்சாம்பலை கிளறிக் கொண்டேயிருக்க வேண்டும். பனி பெய்யப் பெய்ய சாம்பலின் கரிய நிறம் மாறி வெளிறும்.

மாசி மாதத்தின் மகா சிவராத்திரியின் காலை நேரத்தில் அச் சாம்பலை எடுத்து வஸ்திர காயம் செய்ய வேண்டும். (வஸ்திர காயம் - ஒரு பானையின் வாயில் தூய்மையான துணியைக் கட்டி சாம்பலை எடுத்து துணியின் மேல் கையால் தேய்க்க தேய்க்க மென்மையான துகழ்கள் பூசிக் கொள்ளத்தகுந்த விபூதியாக பானையினுள் சேரும்) அதை சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்த பிறகு சிவ பக்தர்கள் தரிக்க வேண்டும்.

மேலே சொன்ன முறை மிக மேன்மையான முறை. மற்றும் சில முறைகளும் உள்ளன. (சாந்திக பஸ்மம், காமத பஸ்மம், பௌஷ்டிக பஸ்மம்) பரம சிவனின் ஐந்து முகங்களில் இருந்தும் தோன்றிய நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்ச பூதங்களின் தன்மையை விபூதி கொண்டிருக்கிறது. விபூதியை அனைத்து நிலையில் இருப்பவர்களும் பூசிக் கொள்ளலாம் என்று ஸூத ஸம்ஹிதை வலியுறுத்துகிறது.( பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்)

சிவாலயங்களில் விபூதியை பிரசாதமாக வலது உள்ளங்கையில் மட்டுமேதான் வாங்க வேண்டும் (உள்ளங்கை பிரமம் அல்லது விக்ஷ்ணு பாகமாகவே கருதப்படுகின்றது. பிரமா, விஷ்ணு தவமிருந்து பெற்றதால் அவர்களின் பாகமாகிய உள்ளங்கையில்தான் பெற வேண்டும்)

ஆண்கள் விபூதியை திரிபுண்டரமாகவும் ( விபூதியை தண்ணீரில் குழைத்து நெற்றியில் மூன்று கிடைக் கோடுகளாகவும்), உத்தூளனமாகவும் ( தண்ணீரில்லாமல் வெறும்

விபூதியை) அணிந்து கொள்ளலாம்.

பெண்கள் - தண்ணீர் குழைக்கா மல் மட்டுமே இட்டுக் கொள்ளல் வேண்டும். (உத்தூளனமாக) என்று சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. பெண்கள் - ஆட்காட்டி விரல் அல் லது மோதிர விரலால் விபூதியை எடுத்து நெற்றியில் ஒற்றைக் கோடாக மட்டுமே அணிந்து கொள்ளல் வேண்டும்( சிவ தீட்சை பெற்ற பெண்கள் மூன்று கோடுகளாக அணியலாம்)

விபூதி பூசிக் கொள்ளும் போது சிவ பஞ்சாட்சர மந்திரத்தையோ அல்லது சிவ சிவ என்றோ சொல்லிக் கொண்டேதான் தரிக்க வேண்டும். அண்கள் விபூதியை தண்ணீரில் குழைத்து ஆட்காட்டி விரல், நடு விரல் மற்றும் மோதிர விரல் கொண்டு மூன்று கிடைக் கோடுகளாக நெற்றி யிலும் மார்பிலும் தொப்புளுக்கு மேலும் முழங்கால்கள் இரண்டிலும் இரு தோள்களிலும் இரு முழங்கை களிலும் மணிக் கட்டுக்கள் இரண்டி லும் இரு விலாப் புறங்களிலும் கழுத் திலும் தரிக்க வேண்டும் (இரு காது களிலும் சிலர் மேல் முதுகிலும் பின் கழுத்திலும் தரிப்பார்கள்)

காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் பூஜை காலங் களிலும் நிச்சயம் விபூதி தரிக்க வேண்டும். பஸ்மாபிஷேகம் - பல் வேறு தீட்டுக்களை அகற்ற வல்லது. குளிக்கும் நீரில் விபூதியைத் தூவி விட்டு அந்த விபூதி கலந்த தண்ணீ ரில் தலை முழுக எவ்விதமான தீட் டுக்களும் அகன்று விடும். பயம் நீங்கவும் ஜுரம் நீங்கவும் உடல் உபா தைகள் நீங்கவும் விபூதி பயன்பட் டிருக்கின்றது.

விபூதி இட்டுக் கொண்டிருப்ப வரை சிவ அம்சமாகவே கருதி வழி படும் வழக்கம் உண்டு. விபூதியின் புண்ணியத்தையும் அதன் மேன்மை யையும் பல்வேறு புராணங்களிலும் திருமுறைகளில் பல்வேறு இடங்களி லும் குறிப்பிடப்பட்டுள்ளது. பன் னிரு திருமுறைகளில் குறிப்பிடப் படும் சில சம்பவங்களை மட்டும் இங்கே காண்போம்.

சூலை( தாங்காத வயிற்று வலி) நோயால் துடிதுடித்த அப்பர் சுவாமி கள் தமது தமக்கையார் கையால் விபூதி பெற்றவுடன் வலி நீங்கப் பெற்று சைவத் திறகு பெரும் தொண்டாற்றினார்.

சமண சமயத்தைச் சார்ந்திருந்த கூன் பாண்டியன் என்னும் மன்னன் மதுரையில் அரசாண்டு கொண்டிருந் தான். அவனுக்கு தீராத வெப்பு நோய் இருந்தது. அதை நீக்க அவன் மனைவி மங்கையர்க்கரசியார் சிவபெரு மானை வேண்டினார். அவர் கன

வில் சிவன் வந்து திருஞான சம்பந் தரைக் கண்டு வந்தால் நோய் நீங்கும் என்றார். மங்கையர்க்கரசியாரும் அதன்படியே திருஞானசம்பந்தரைத் தரிசித்து தன் குறையைச் சொல்ல அவர் "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகம் பாடி விபூதியை கூன் பாண்டியனின் உடலில் பூசியவுடன் பாண்டியனின் நோய் நீங்கியது. கூன் பாண்டியன் சைவத் தொண்டாற்றினான்.

சிவ சிந்தனையில் சிறந்து விளங் கிய சேரமான் பெருமான், அரசு தாங்கி, ஒரு சமயம் பட்டத்து யானை மீது அமர்ந்து நகர் வலம் வருகின் றார். அப்பொழுது துணிகளை வெளுக்கும் தொழிலாளர் உழமண் என்னும் வெண்ணிற மண்ணை கூடையில் சுமந்து வர நீரில் நனைந்த அம்மண் அவர்களின் மேனி முழு வதும் வழிந்து விபூதி பூசியது போல் தோற்றம் தரச் செய்தது.

பட்டத்து யானையில் இருந்து சலவைத் தொழிலாளியின் உடல் முழுவதும் திருநீறு பூசியிருப்பதைக் கண்ட சேரமான் பெருமான் யானை யில் இருந்து உடனிறங்கி, அவர் பெரும் சிவத் தொண்டர் போலும் என்று எண்ணி, சலவைத் தொழி லாளியை வணங்கினார்.

அரசன் தன்னைக் கண்டு வணங் கியதால் அச்சமுற்ற சலவைத் தொழி லாளி தன் நிலையை உணர்த்து, வெள்ளை உழமண் விபூதியை நினைவு படுத்தியதாலேயே அவரை வணங்க முற்பட்டதை சேரமான் பெருமாள் விளக்கி பரிசுகள் கொடுத்து மகிழ்ந்தான்.

சிவ பக்தியில் சிறந்த ஒரு புகழ் சோழ மன்னன் தனக்குக் கப்பம் கட்டாத மன்னன் மீது படையெடுத்து செல்ல ஆணையிட படைகளும் எதிரி நாட்டை வென்று தோல்வி கண்ட வீரர்களின் தலையைக் கொண்டு வந்து சோழனிடம் வெற்றிப் பரிசாக அளிக்க அவற்றைப் பார்த்துக் கொண்டு வந்த மன்னன் அந்த வீரர்களின் தலைகளுள் ஒரு தலை மட்டும் குடுமி கொண்டு சிவ சின்னமாகிய விபூதி அணிந்திருப்பது கண்டு அதிர்ந்து ஒரு சிவனடியாரைக் கொல்ல கார ணமாகி விட்டோமே என்று மனம் நொந்து அக் கினியை மூட்டி அதனுள் விழுந்தான்.

சிவ பெருமானிடம் அதீத பக்தி கொண்ட ஏனாதி நாதனார் என்பவர் படைகளுக்கு வாள்ப் பயிற்சி அளிப் பவர். அவருடன் பலமுறை போராடி தோல்வியுற்ற ஒருவன் அவரை வீழ்த்த ஒரு உபாயம் செய்தான்

அவன் ஏனாதி நாதரை தனிமை

யில் சமர் செய்ய அழைத்தான். அச் சமயம் இவன் சிவ சின்னமாகிய விபூதியைத் தரித்துக் கொண்டு அதை கேடயத்தால் மறைத்துக் கொண்டு போரிடுவதற்காக ஏனாதி நாதர் அருகில் வந்து கேடயத்தை நீக்க ஏனாதி நாதர் எதிரியாய் இருப்பவன் அதாவது தன்னைக் கொல்ல வந்த வன் திருநீறு அணிந்திருப்பதைக் கண்டு அவனை சிவ அம்சமாகவே கொண்டு சண்டை செய்யாமல் பணிந்து மடிந்து சிவலோகம் அடைந்தார்.

மெய்ப்பொருள் என்னும் அரசன் சிவ பக்தி நிரம்பி தனது அரசை நீதி முறை தவறாது ஆட்சி செய்து வந்தார். சிவ தத்துவங்களில் மெய் யான உண்மைகளை மக்களுக்கு அறிவிப்பதில் தேர்ந்தவராக இருந்த தால் மெய்ப்பொருள் என்று போற் றப்பட்டார்.

இவரின் எதிரி தேசத்து அரசன் தமது வலிமையால் இவரை வெல்ல முடியாது என்று எண்ணி சிவ சின்னமாகிய விபூதி தரித்து ஓலைச் சுவடிகளுடன் சிவனடியார் வேடத் தில் வந்து அரசனிடம் ஆகம உட் பொருள் உணர்த்த வந்தேன் எனக் கூறினான்

மெய்ப்பொருள் அதைக் கேட்க ஆவலாக கண்மூடி அமர அச்சமயம் ஓலைச் சுவடிகளில் ஒழித்து வைத் திருந்த கத்தியை எடுத்து மெய்ப் பொருளை குத்தினான்.

சத்தம் கேட்டு வந்த மெய்க் காப் பாளன் எதிரியை வெட்ட கையை ஓங்க ரத்தம் சிந்திக் கொண்டு மர ணத்தின் தறுவாயில் இருந்த போதும் மெய்ப் பொருள் இவர் எதிரியாக இருந்தாலும் சிவனடியார் கோலத் தில் இருப்பதால் இவரும் சிவாம் சமே, ஆகவே இவருக்கு எவ்வித தொல்லையும் இல்லாமல் எல்லை வரை பத்திரமாகக் கொண்டு சென்று விடக் கட்டளை இட்டான். அவ் வண்ணமே மெய்க்காப்பாளன் செய் ததைக் கூற மெய்ப்பொருள் அதன் பிறகு உயிரை விட்டு சிவபதம் அடைந் தார்.

விபூதி நோய்களை நீக்கும் அருமருந்தாகவும் சிவ தொண்டிற்கு வழிகாட்டியாகவும் சிவ சிந்தனை மேலிடுவதற்கு உதவும் சாதனமாக வும் விளங்குகிறது. விபூதிரைச்வர்யம் என்ற சொல் விபூதி ஐஸ்வர்யங் களைத் தரவல்லது என்னும் அர்த்தம் கொண்டது.

"விபூதி அணிவோம் விதியை வெல்வோம்"

நி. த. நடராஜ தீட்சிதர்
சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலயம்
தமிழ்நாடு



# உண்மையான வழிபாடு

எல்லா ஜீவாத்மாக்களதும் இறுதி இலட்சியம் முத்தியாகும். இதனை ஆறுமுகநாவலர் பின்வருமாறு கூறுவார் "எமக்கு இச்சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே ஆகும்." எனக் கூறுவதிலிருந்து இவ் உண்மை தெளிவாகப் புலப்படுகிறது. நாம் அனைவரும் பரமாத்மாவின் சொரூபங்கள். நாம் இறுதியில் சேர வேண்டிய இடமும் இதுவே ஆகும். இந்நிலையில் ஆணவ இருளில் அழுந்திக் கிடக்கும் ஆத்மாவாகிய எம்மீது கொண்ட இறைவனின் பேரருள் கருணையினால், மாயையிலிருந்து தோன்றிய உலகத்தில் தனு, கரண, புவன போகங்கள் படைக் கப்பட்டு கன்ம வினைகளிற்கு ஏற்ப இவ்வுலகத்தில் பிறந்து உழல்கின்றோம். இச்செயற்பாடுகளின் வழியில் ஆன்மா உய்தி பெற வேண்டி வழி காட்டி நிற்பதே வழிபாடாகும். அதாவது இறைவனை அடைவதற்கான வழியை காட்டி நிற்பதே வழிபாடாகும்.

வழிபாடு என்பதில் உண்மைத் தன்மையை தவிர வேறுமாக்கம் எதுவுமே இருக்க முடியாது என்பது நிதர்சனமான உண்மையாகும். ஆனால் இன்று வழிபாட்டின் நோக்கம் திசை மாறிக் கொண்டிருக்கிறது. அதன் உண்மைத் தன்மை அற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. இதனை சீர்திருத்த வேண்டியது சமயப் பெரியார்கள் எல்லோரது கடமையாகும். இல்லாவிடில் வழிபாட்டின் நோக்கமே மாறிவிடும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வழிபாடுபற்றி சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வரத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் பின்வருமாறு கூறுகின்றார் "மனத்தூய்மை இன்றி ஆலயத்திற்கு செல்லும் ஒருவன் சிறுத்தை உடல் போல் தன் உடல் முழுவதும் நீறு பூசி திலகம் தீட்டி திரியினும் அவன் சிவபெருமானிடத்தில் இருந்து வெகுதூரம் விலகியுள்ளவனே ஆகிறான்" என்கிறார். எனவே வழிபாட்டில் இடம்

பெற வேண்டிய பிரதான அம்சம் மனத்தூய்மையே ஆகும்.

மனத்தூய்மையின்றி ஆலயத்திற்கு செல்லும் ஒருவன் குளிக்கப் போய் சேறு பூசியவன் ஆகிறான். ஏற்கனவே செய்யப்பட்ட பாவங்களை நீக்க கோயிலுக்குச் செல்லும் ஒருவன் மனத்தூய்மை இன்றி கோயிலுக்குச் செல்லும் பொழுது முன்னர் இருந்த நிலையை விட இன்னும் இழிந்த நிலைக்கு தள்ளப்படுகின்றான் எனவும் சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று சுவாமி விபுலானந்தர் கூறுவதும் இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. எனவே இறைவழிபாட்டில் இடம் பெற வேண்டிய பிரதான அம்சம் மனத்தூய்மை என்பதாகும். மனத்தூய்மை இன்றிய வழிபாடு பயனற்றதே ஆகும்.

வழிபாட்டில் அடுத்து இடம்பெற வேண்டியது பக்தியாகும். "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி " என திருஞானசம்பந்தர் கூறுவதும்,"மெய்தான் அரும்பி விதிர்விதித்து" என மாணிக்கவாசகர் கூறுவதும் பக்தியாளானிற்கு இருக்கவேண்டிய முக்கிய பண்புகளாகும். இறைவனிடம் பக்தன் ஒருவன் வைத்திருக்கும் சுயநலமற்ற மாசற்ற தெய்வீக அன்பே பக்தி ஆகும். நாயன்மார்கள், அருளாளர்கள், ஞானிகள் போன்றோர் வைத்திருந்த அன்பு இதுவாகும். இவ் அன்பை இவர்கள் பெற்றதாலேயே உலகில் அனைவரும் சாதிக்க முடியாத தெய்வீக சாதனையை சாதிக்க முடிந்தது. அதன் அறுவடையே பக்தி இலக்கியங்களாகும். வழிபாட்டில் பிரதான இடத்தைப் பெறுவது நம்பிக்கை ஆகும். நம்பிக்கைக்கும் உண்மைக்கும் பெருமளவு வித்தியாசம் இல்லை.அம்மா என்பது உண்மை எனின் அப்பா என்பது நம்பிக்கை ஆகும். ஒவ்வொருவரிடத்திலும் தெய்வ நம்பிக்கை கட்டி எழுப்பப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். "திக்கற்றவனுக்கு தெய்வம் துணை" "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" போன்ற அனுபவ மொழிகள் நம்பிக்கை அடிப்படையிலே கட்டி எழுப்பப்பட்டது. கடவுள் வழிபாட்டின் அடிப்படை அம்சம் இதுவாகும். இறையருள் பெற்ற அருளாளரது வாழ்கைச் சம்பவங்கள் இதை எமக்கு உணர்த்துகின்றன.

மூன்று வயது குழந்தை ஆகிய திருஞானசம்பந்தர் குளத்தில் மூழ்கிய தந்தையைக் காணாது அழுத போது இறைவனும் இறைவியும் தோன்றி பால் கொடுத்ததும் அதனூடாக சம்பந்தர் ஞானத்தைப் பெற்றதும் யாவரும் அறிந்ததே. அவ்வாறே திருச்சிராப்பள்ளி இறைவனுக்குப் பூமலை கட்டிக் கொடுக்

கும் மூதாட்டி வெள்ளப் பெருக் கெடுப்பால் வீட்டிற்கு வர முடியா மல் மகளின் பிரசவ வேதனையை நோக்கி கவலையடைந்த போது இறை வன் மூதாட்டி வடிவம் தாங்கி மகளின் பிரசவத்தைப் பார்த்த சம்வமும் செம்மனச்செல்விக்கு அணை கட்ட யாருமில்லாது இறைவனை வேண் டிய போது சிவனே கூலியாளாக வந்து அணைகட்டிக் கொடுத்த சம்பவமும் எமக்கு உணர்த்தி நிற்கும் பாடம் யாதெனில், நாம் மனமுருகி இறை வனை பக்தியோடு வழிபாடு செய் தால் இறைவன் நிச்சயம் அருள் புரிவார் என்பதாகும். இத்தகைய தெய்வீக சம்பவங்கள் இறைநம்பிக் கைக்கு வலுவூட்டுவனவாக அமைந் துள்ளன.

எனவே நாம் இறைவனிடம் எதை வேண்டிப் பிரார்த்தித்தாலும் எமக்கு நன்மை தருவதாக அமைந்தால் இறைவன் நிட்சயம் அதனை நிறை வேற்றி வைப்பார். "அழுதால் உன் னைப் பெறலாமே" என்ற மாணிக் கவாசகர் கியம் நம்பிக்கையை வலுவூட்டு வதாக அமைந்துள்ளது. நாம் வேண்டுவது நிறை வேற வில்லை அது இறைவனின் மேலுள்ள தவறல்ல வழிபாட்டி லுள்ள குறைபாடே ஆகும். இறை வனிடம் கண்ணீர் மல்கி கசிந்துருகி பிரார்த்தனை செய்தால் நிச்சயம் அப்பிரார்த்தனை நிறைவேற்றப் படும்.

எனவே சைவர்களாகிய நாம் போலியானவைகளைப் புறந்தள்ளி விட்டு உண்மை வழிபாட்டில் ஈடு பட்டு இறை அருள் பெறுவோம்.

திருமதி.பா.அழகுதாசன்
B.A(Hons), MED
ஆசிரியர்,
உரும்பிராய் இந்துக்கல்லூரி.



# ஆலய மகத்துவம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

என நாவேந்தராம் திருநாவுக்கரசு நாயனார் நான்காம் திருமுறையில் மக்கள் பிறவி மாண்புடையதாக வேண்டுமானால் அம்பலத்தே ஆடுபவன் ஆடல் காணவேண்டுமென மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். மானிடப் பிறவி மாட்சிமைப்பட வேண்டுமாயின் சிந்தனையும், வந்தனையும் வேண்டற்பாலதாகும். மனிதன் என்று சிந்திக்கத் தெடங்கினானோ அன்றே இறைவனை வந்திக்கவும் தொடங்கி விட்டான். தன் உயிர்த் தேவைக்காக அறிவு,இச்சை, செயல் முன்றையும் போற்றினான். அறிவினால் பொருளீட்டி, இச்சையினால் இச்சையின்பம் நுகர்ந்து செயலினால் அறம் புரிந்து வைத்துள் வாழ்வாங்கு வாழுதல் தனது உயர்ந்த கடனெனக் கண்டான். இந்த வகையில் செம்மையாக வாழ்ந்தோர் செயற்பொருளாம் இறைவனைக் கண்டனர். தாம் பெற்ற இன்பம் மற்றவர் பெற வழிகாட்டினர். கடவுட் கொள்கையின் பயன் கடவுளைக் காண வேண்டும். இறைவன் இருக்கிறார் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. காண்பதற்குரிய வழிகளிலே நின்று இறைவனைக் காண வேண்டும்.

பார்ப்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படந்ததோர் படரொளிப் பரமாகியவன் இறைவன். இவனுக்குரிய நிலைகள் இரண்டு. ஒன்று சொரூபநிலை. அடுத்தது தடத்தநிலை. அநாதிமுத்த சித்துருவாகிய இறைவன் ஒன்றிலும் தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்கும் நிலை சொரூப

நிலை அல்லது சிறப்பியல்பு எனப்படும். இரண்டாம் நிலையில் ஆன்மாக் களாகிய எம்மிடத்தே உள்ள பெருங்கருணையினால் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து வாழ்வித்து முத்தியின்பம் கொடுக்க விரும்பி சொரூ பநிலையில் நின்று பல படிகள் இறங்கி தடத்த திருமேனி தாங்குகின்றான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று சொல்லப்படு கின்ற பஞ்சகிருத்தியத்தை இயற்றி ஆன்மாக்களை ஆட்கொள்கின்றான். இவ் வாறு உலகியற் செயற்பாட்டினை நிலைநிறுத்தும் போது அவனுக்குப் பல் வேறு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. அருவம், உருவம், அருவுருவம் என்று கூறப்படுகின்ற மூவகைத் திருமேனிகளைத் தாங்கி முறையே சிவம், சக்தி, நாதம், விந்து, பிரமா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன் (சிவலிங்கம்) என்னும் நவபேதங்களை எடுக்கின்றான். இவ்வாறான இறைவன் சிறப்பாக எழுந்தருளி அருள் புரியும் இடங்கள் இரண்டு. ஒன்று கற்கோயில். மற்றது மனக் கோயில். கற்கோயில் இறைவனை புறக்கண்ணால் கண்டு லயப்படுகினறோம். மனக்கோயிலில் இருக்கும் இறைவனை அகக் கண்ணால் கண்டு அகமகிழ் கின்றோம். புறக்காட்சியும், அகக்காட்சியும் ஒன்றுபட்டால்த்தான் வாழ்வின் உண்மைப்பயனைப் பெறமுடியும் இதனை மணிவாசகப் பெருமான்.

"சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்து மென்
சிந்தையுள்ளும் உறைவான்"
எனப் போற்றுகின்றார்.

புறக்காட்சியில் எம்மை வழிப்படுத்த வந்தவர் நாவுக்கரசர். அவர் திருவங்கமாலையில்

"கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ"

எனத் தொடங்கி திருவங்கமாலை முடிவிலே

"தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என முடிவு செய்கிறார். புறத்திலே தரசித்த பெருமானை அகத்திலேயும் இருத்தி தரிசிப்பது வேண்டற்பாலது. புறக்காட்சி சிறப்படைந்தால் தான்

அகக்காட்சி சிறக்கமுடியும். இதனை மனதிலிருத்தியே உலகெங்கும் பலபல ஆலயங்கள் தோன்றின. பசுவினுடைய உடலெங்கும் ஓடுகின்ற குருதிதான் பாலாக மாறுகின்றது. பசுவின் செவியில் பிடித்தால் பாலினைப் பெற முடியாது. குறிப்பிட்ட ஸ்தானமாகிய பசுவின் மடியிலே அசைத்த மாத்திரத்தே தான் பால் சுரக்கின்றது. எனவே உலகமெங்கும் நீக்கமற நிறைந்த இறைவன் ஆலயங்களிலே சிறப்பாக அருள் புரிகின்றான். ஆலயங்களிலே தயிரில் நெய் போலவும், ஏனைய இடங்களில் பாலில் நெய் போலவும் இறைவன் விளங்குகின்றார்.

சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்தில் மெய்கண்டதேவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"செம்மலர் நோற்றாள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ அன்பரொடு மருவி
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

அதாவது செந்தாமரை போல விளங்குகின்ற இறைவனின் திருவடிகளை நினைந்து அவனருள் பெறவிடாது ஆன்மாக்களைப் பீடித்து நிற்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி அயராது அன்பை இறைவன் மேல் செலுத்துகின்ற மெய்யடியாரொடும் கூடி மலபந்தம் நீங்க அன்பு மிகுந்த அவரது திருவேடத்தையும் சிவாலத்தையும் சிவனெனக் கண்டு வழிபட்டு வாழும் இயல்பு படைத்தவரே சீவன்முத்தராவார் என்பது சகலாகம பண்டிதர் அருணந்திசிவாச்சாரியாரின் விளக்கமாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது தமிழ்ப் பெரு மூதாட்டி ஔவை வாக்கு. ஆலயம் என்பது ஆ+லயம் எனப் பிரிவதால் ஆன்மாலயப்படும் இடமே ஆலயம் எனப் பொருள்படும். கோயில் என்பது யாவற்றிற்கும் மேலான இறைவனின் இருப்பிடம் எனப் பொருள்படுகின்றது. அமைதியையும், தூய்மையையும் வெளிப்படுத்தும் பக்தி நிலையங்களாக இவை விளங்குகின்றன. இவற்றைச் சார்ந்து வாழ்வதற்காக நினைக்கமட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் இறைவனால் எமக்கு அளிக்கப்பட்டுள்ளன. இறைவனை வணங்குதலே உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் முக்கியமாகும். ஆலய தரிசனம் செய்வது கிடைத்தற்கரிய மானிடப் பிறவியின் மாண்புறு சிறப்பாகும். பொது இடங்களில் இறைதரிசனம் பெறும் பக்குவம் ஞானியர்களுக்கே உரியது.

"தீயினுள் தென்றல் நீ பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ
வேதத்து முதல் நீ பூதத்துள் ஐந்து நீ
வெஞ்சுடர் ஒளியும் நீ செஞ்சுடர் அளியும் நீ
அனைத்தும் நீ அனைத்தினும் பொருளும் நீ"

என்ற சங்கப் புலவர் பாவிலே இறைவனின் வியாபகம் விளக்கப்படுகின றது. காணும் பொருட்கள் அனைத்திலும் இறைவனைக் காணும் திறனுடை யோர் ஒரு சிலரே. ஏனையோருக்கு ஆலயங்களே இறைநினைப்பை ஊட்டு கின்றன. ஆலயங்களில் காணப்படும் விக்கிரகங்களும் இறைமுர்த்தங்களும் இறை உணர்வை ஊட்டுவதோடு அருளை அள்ளி வழங்குகின்றன.

"திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவான் ஆங்கே"

என்ற வாக்கின் படி தனித்து நின்று உருகுவதிலும் பார்க்க அன்பர்களுடன் கூடிநிற்கும் போது உருக்கம் மிகுந்து தெய்வீகக் காட்சியில் திளைக்க வைக்கின்றது. பண்டைய தமிழ் மக்கள் வாழ்க்கையில் ஆலயங்களே முதலிடம் பெற்றிருக்கின்றன. மற்றும் அநாதைகள், அடியார்கள், நோயாளர்கள் ஆகியோருக்கு ஆறுதலலிக் கும் நிலையங்களாகவும் கலை வளர்ச்சிக்குரிய தாபனங்களாகவும் அவை விளங்கின.

ஆலய அமைப்பு முறைபற்றி எடுத்து நோக்குவோம். ஆலயங்கள் மானுட உடம்பைப் போலவே அமைக்கப்பட்டுள்ளன. கர்ப்பகிருகம், அர்த்தமண் டபம், மகாமண்டபம், ஸ்தம்பமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என ஆறு மண்டபங்கள் அமைந்துள்ளன. இவை முதலே உடலின் கண்ணுள்ளே முலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களையும் சுட்டி நிற்கும்.

ஆலயத்தை நெருங்கும் வேளை முதலில் தெரிவது கோபுரம். இது தூலலிங் கம் எனவும் அழைக்கப்படும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற நோக்கில் சகலரும் வழிபாடியற்றக்கூடிய வகையில் உயரமாக அமைக்கப்படு கிறது. கோபுரத்தில் அண்ட சராசரங்கள் அனைத்தையும் இறைவனின் வீர தீரச் செயல்களையும் காணமுடியும். கோபுர வாயில்கள் ஒன்றின் மேல் ஒன் றாக ஒற்றப்பட அமைந்திருக்கும். வாயில்கள் மூன்றான இருந்தால் நனவு, கனவு, சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளையும் வாயில்கள் ஐந்தாக

அமையும் இடத்து மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளையும் குறிக்கின்றது. வாயில்கள் பலவானாலும் நாம் உட்செல்வது நிலமட்டத்தில் அமைந்த வாயில் வழியாகவே.

கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் கொடித்தம்பம் தென்படுகின்றது. படுத்திருந்த மனிதன் முதுகினை நிமித்தி எழும்வேளை முள்ளந்தண்டு எலும்பு எவ்வாறு அமையுமோ அதேபோல் கொடித்தம்பம் காணப்படு கின்றது. எமது முள்ளந்தண்டு எலும்பின் அடிப்பாகம் குண்டலினி சக்தியின் இருப்பிடம். அதற்கு சிறிது மேலாக கணபதியின் இருப்பிடமான மூலாதாரம் நாலிதழ்க்கமல வடிவில் அமைந்துள்ளது. கொடிமரத்தின் அடியில் இருக்கும் கணபதி எமது மூலாதாரத்தின் அருவ நிலைதனில் இருக்கும் கணபதியைக் குறிக்கும். அவரையே மூலாதாரக் கணபதி என்கின்றோம். கொடிமரத்தில் கொடிச்சீலையும் தற்பைக்கயிறும் சுற்றப்படுகிறது கொடிமரத்தை ஆதார மாகக் கொண்டு சீலை இருப்பதைப் போல பதியை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா விளங்குகின்றது. பாசமானது சிவத்தைச் சாராது ஆன்மாவையே சாரும் தன்மை வாய்ந்தது. இதனையே கொடிச்சீலையுடன் சேர்ந்த தருப்பைக் கயிறு சுட்டுகின்றது.

கொடித்தம்பத்தை அடுத்து பத்திர லிங்கமாம் பலிபீடம் காணப்படுகின்றது. இவ்விடத்தில் ஆன்மாவைப் பீடித்திருக்கும் பாசம் நீங்குகின்றது. பாசம் நீங் கிய பின் ஆன்மா பக்குவம் அடைந்த நிலையில் காணப்படும் என்பதனை உணர்த்தி நந்தி வடிவம் அமைக்கப்பட்டு உள்ளது. இது பக்குவம் வாய்ந்த ஆன்மா பதியினை சென்றடையும் என்ற தத்தவத்தினை உணர்த்தி நிற்கின்றது எனவே ஆன்மாவின் குறிக்கோள் பதியினை அடைதலே என்ற உண்மை யினை நாம் தெட்டத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

கருவறையின் வெளிப்புற இடப்பக்கத்தில் அமைந்துள்ள கோமுகையை அடுத்து சண்டேஸ்வரர் சந்நிதி அமைந்துள்ளது. இது பக்குவம் வாய்ந்த ஆன் மாவாகவும் இறைவனால் உண்டகலமும், உடுப்பனவும் சூட்டிப் பெரு வாழ்வு கொடுத்த உண்மையினை புலப்படுத்துகின்றது.

ஆலயங்களில் நல்ல முறையில் கட்டிடங்களும் விக்கிரங்களும் அமைந்தால் மட்டும் போதாது. காலத்துக்குக் காலம் குடமுழுக்காட்டி நித்திய நைமித்திய கிரியைகளைச் செய்து விக்கிரங்களுக்ககு தெய்வீக சக்தி ஊட்டுதல் வேண்டும். மின் விசிறியோடு மின்சார இணைப்புச் சேர்ந்தால்த்தான் காற்றின் அசைவை உணர முடியும். இதே போன்று மந்திரம், மஞ்சனம், தூபம், தீபம் முதலியவற்றால் தான் விக்கிரங்களில் தெய்வீக சக்தி நிலவுகின்றது.

ஆலயங்களில் நித்திய பூசைகளில் ஏற்படும் குறைபாட்டினை நிவர்த்தி செய்யவும் மக்களை வாழ் வியலில் பெருமையடையச் செய்யவும் மகோற் சவம் எனப்படும் உயர் திரு விழா நடாத்தப்படுகின்றது. விழா நாட்களின் போது அடியவர்களுக்கு சாம் பவ தீட்சையும் அளிக்கப்படுகின்றது. சிறந்த ஆன்மீகச் சூழ்நிலையை உரு வாக்கி உள்ளத் தெளிவை விழாக்கள் எடுத்தியம்புகின்றன.

ஆலயங்களில் வீதிவலம்வருதல், அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் எனக் கூறப்படும் முறைகளில் வீழ்ந்து வணங்குதல். சிரசில் குட்டி வணங் குதல், தோப்புக்கரணம் போடுதல், அங்கப்பிரதட்சணம் செய்தல் நமது வழி பாட்டு முறைகளில் சிலவாகும்.

இவற்றை ஒழுங்கான முறையிற் கடைப்பிடித்து வழிபடும் போது இவை மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை நாடிச் செல்ல உதவுவதோடு நல்ல உடற்பயிர்ச்சிகளாகவும் அமைந்து உடல் நலத்திற்கும் உதவுகின்றன. உடலும் மனமும் ஒத்துழைத்து இறையருளைப் பெற துணைபுரிகின்றன. இங்கு நடைபெறும் கிரியைகளும் கூட நமது மன வளர்ச்சியில் படிப்படியான முதிர்ச்சியை ஏற்படுத்தி ஆன்மவிடுதலைக்கு நம்மை அமைக்கப் போகின்றன என்பது நன்கு சிந்தித்தால் உணரப்படும். எனவே ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

M.R.ஜெயலெட்சுமி
ஓய்வு பெற்ற ஆசிரியஆலோசகர்,
தீவக கல்வி வலயம்



# கணபதியின் சில வடிவங்கள்

விநாயகரை 32 வடிவங்களில் அலங்கரிக்கலாம். இந்த அமைப்பில் வணங்குவதால் மாறுபட்ட பலன் கள் நமக்குக் கிடைக்கும்.அவற்றன் சில வடிவங்கள். அவற்றுள் சில வடிவங்கள்.

**பாலகணபதி**

மா,பலா, வாழை ஆகிய மூன்று பழங்களையும் கரும்பையும் தம் கரங்களில் ஏந்தி சூரியோதய காலத் துச் சிவப்பு வண்ணமேனியுடன் பிரகாசத்துடன் பாலகனைப் போன்ற உருவமுள்ளவர். இவரை வழிபடுவ தால் தோஷங்கள் நீங்கும்.

**தருண கணபதி**

பாசம், அங்குசம், அப்பம், விளாம் பழம், நாவற்பழம், முறிந்த ஒற்றைத் தந்தம், நெற்கதிர், கரும்பு ஆகியவற் றைத் தம் எட்டுககைகளில் ஏந்தி, சூரியோதய கால ஆகாயத்தின் செந் நிற மேனியுடைய இளைஞனாகக் காட்சி தருபவர். இவரை வழிபடுவ தால் முகக்கலை உண்டாகும்.

**பக்தி கணபதி**

தேங்காய், மாங்காய். வாழைப் பழம், வெல்லத்தினாலான பாயசம் நிரம்பிய சிறுகுடம் ஆகியவற்றை தம் நான்னு கைகளில் ஏந்தி நிலா ஒளியை ஒத்தவண்ணம் வெண்மைநிற மேனி யுடன் காட்சியளிப்பாவர் இவரை வழி படுவதால் இறை வழிபாடு உபா சனை நன்கு அமையும்.

**வீர கணபதி**

தனது பதினாறு கரங்களில் ஒன் றில் வேதாளத்தையும், மற்ற கரங் களில் ஆயுதங்களும் ஏந்தி, ரவுத்ரா காரமாக வீராவேசத்தில் செந்நிற மேனியுடன் விளங்கும் ரூபத்தை உடையவர். இவரை வழிபடுவதால் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும்

**சக்தி கணபதி**

பச்சை நிறமேனியுடைய சக்தியு டன் காட்சியளிப்பவர். பாசம், அங்கு சம் ஏந்தியிருப்பவர். பயத்தை நீக்குப வர். செந்தூர வண்ணம் கொண்டவர். இவரை வழிபடுவதால் உடல் ஆரோக்கியம் ஏற்படும்

**துவிஜ கணபதி**

இரண்டு யானை முகங்களுடன் இடது கையில் சுவடீ, அட்சயமாலையும், தண்டமும், கமண்டலமும் ஏந்தியவர். வெண்ணிற மேனி கொண்டவர். இவரை வழிபடுவதால் கடன் தொல்லை நீங்கும்.

**சித்தி கணபதி**

பழுத்த மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, பாசம், அங்குசம் ஆகியவற்றை ஏந்தி ஆற்றலைக் குறிக்கும். சித்தி சமேதரராகவும் பசும்பொன் நிறமேனியனவரான இவருக்கு பிங்கள கணபதி என்பன பெயர் வந்தது. இவரை வழிபடுவதால் சகல காரியமும் சித்தியாகும்.

**சிஷ்ட கணபதி**

வீணை, அட்சயமாலை, குவளை மலர், மாதுளம்பழம், நெற்கதிர், பாசம் ஆகியவற்றை எந்தியுள்ளார் கருநீல வண்ணமேனியுடையவர். இவரை வழிபடுவதால் வாழ்க்கையில் உயர் வான பதவிகளைப் பெறலாம்.

**விக்ன கணபதி**

சங்கு, கரும்பு, வில், அம்பு, மலர், கோடாரி, பாசம், அங்குசம்,சக்கரம், தந்தம், நெற்கதிர், சரம், ஆகியவற்றை தன் பன்னிரு கைகளில் ஏந்தி ஸ்வர்ண நிறமேனியுடன் பிரகாச மாகவிளங்கு பவர். இவரை வழிபடுவதால் விவசாயம் விருத்தியகும்.

**ஷிப்ர கணபதி**

கற்பகக்கொடி, தந்தம், பாசம், அங்குசம், ஆகியவற்றை தன் நான்கு கரங்களிலும் ரத்தினங்களைப் பதித்த கும்பத்தை தனது துதிக்கையிலும் ஏந்திய செம்பருத்தி மலரை போன்ற சிவந்த மேனியுடைய இவர்

சீக்கிரமாக அருள்புரிபவராகக் கருதப்படுகின்றார். இவரை வழிபடுவதால் கல்வி விருத்தியாகும்.

**ஹேரம்ப கணபதி**

அபய ஹஸ்தங்களுடன் (கரங்கள்), பாசம், அங்குசம், தந்தம், அட்சமாலை, கோடாரி, இரும்பினாலான உலக்கை, மோதகம், பழம் அகியவற்றை ஏந்தி, பத்து கைகளும், ஐந்து முகங்களும் அமைந்து வெண்ணிற மேனியுடன் சிம்ம வாகனத்தில் அமர்ந்து இவர் காட்சிதருகிறார். நேபாள நாட்டில்காணப் படும் இவர், திசைக்கு ஒன்றாக நான்கு முகங்களும் உயரே நோக்கிய ஐந்தாவது முகத்துடனும் விளங்குகிறார். இவரை வழிபடுவதால் விளையாட்டு, வித்தைகளில் புகழ் பெறுவார்கள்.

**லட்சுமி கணபதி**

பச்சைக்கிளி, மாதுளம்பழம், பாசம், அங்குசம், கற்பககொடி, கத்தி ஆகியவற்றை தன் ஆறு கைகளிலும், மாணிக்க கும்பத்தை தன் துதிக்கையிலும் ஏந்தி தன் இருபுறமும் இரு தேவிகளை

அணைத்துக் கொண்டு வெள்ளை மேனியாய் அமர்ந்து அருள்புரிபவர். இவரை வழிபடுவதால் பணம், பொருள் அபிவிருத்தியாகும்.

**மகா கணபதி**

பிறைசூடி, மூன்று கண்களுடன், தாமரைமலர் ஏந்தி தன் சக்தி நாயகியாகிய வல்லபையை அணைத்த வண்ணம் கைகளில் மாதுளம் பழம்,கதை, கரும்பு, சக்கரம், பாசம், நெற்கதிர், நெய்தல், புஷ்பம், தந்தம், கரும்பு, வில், தாமரைமலர் ஆகிய வற்றையும் துதிக்கையில் ரத்தின கலசத்தையும் ஏந்தி சிவப்புநிற மேனியாய் விளங்குபவர். இவரை வழிபடுவதால் தொழில் விருத்தியாகும்.

**சிருஷ்டி கணபதி**

விநாயகர் தன் தந்தத்தை முறித்து வீசியதால் தனது சக்தி ஒடுங்கி சிறு மூஞ்சூறு வடிவத்துடன் ஓடினான் கஜமுகாசுரன். அவன்மீது பாய்ந்து ஏறி அவனை தன் வாகனமாக்கிக் கொண்ட இவர், செந்நிற மேனியுடன், பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், ஏந்தி கற்பக விருட்சத்தின் கீழ் காட்சி தருகிறார். இவரால் விவகாரம், வியாஜ்ஜியம் வெற்றியாகும்.

**நிருத்த கணபதி**

மஞ்சள் மேனியுடன் பாசம், அங்குசம், கோடரி, தந்தம் ஆகிய வற்றை ஐந்து கைகளில் ஏந்திய மோதகம் இருக்கும் துதிக் கையை உயர்த்தி ஒற்றைக் காலில் நிருத்த கணபதியாக காட்சி தருகிறார். இவரை வழிபடுவதால் சங்கீதம் சாஸ்திரங்களில் சிறப்ப பெறுவார்கள்.

**ஊர்த்துவ கணபதி**

பொன்னிற மேனியுடைய இவர் எட்டு கைகள் கொண்டவர். தேவியை தனது இடதுபுறம் அணைத்துக் கொண்டு வீற்றிருக்கிறார். இவரை வழிபடுவதால் இல்வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

திரு.சோ.சிவலிங்கம்.
நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
நல்லூர்.



# கும்பாபிஷேகம்

கும்பாபிஷேக விழா என்பது ஆலயங்களில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகத்திலே கும்பாபிஷேகம் என்று அழைப்பர். கும்பாபிஷேகம் 4 வகைப்படும் அவையாவன:

ஆவர்த்தனம்
அனாவர்த்தனம்
புனராவர்த்தனம்
அந்தரிதம்

ஆன்மாக்கள் ஆகிய நாம் தனுவாகிய சரீரத்தைக் கொண்டு சிவசாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவு ஏற்பட்டு குதிப்புண்ணியமாகிய கும்பாபிஷேகத்திற்குப் பங்குபற்றித் தரிசித்தல் எமது கடமையாகும். ஒவ்வொரு கிரியைகளையும் தரிசித்துப் பங்குபற்றுவதற்கு பெரும் பயன் உண்டு.

கோயில்களை பழைய சிறப்புடன் இருக்கச்செய்தல் ஆகிய கும்பாபிஷேகம் மிகச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

செய்வோர், செய்விப்போர், வழிபடுவோர் அனைவரும் நன்மை பெறுவர். மக்கள் நாள்தோறும் செய்துவரும் வழிபாட்டில் ஏற்படும் தவறுகள் மஹோற்சவத்தில் ஏற்படும் தவறுகள் கும்பாபிஷேகத்தில் தீரும் எனவே கும்பாபிஷேகத்தை "பெரும் சாந்தி" எனவும் "குடமுழுக்கு" எனவும் சொல்வர்.

சைவக் கிரியைகள் எல்லாம் மந்திரங்கள், கிரியைகள், பாவனைகள் என்பவற்றால் செய்யப்படுகின்றன. இவைகள் கும்பாபிஷேகத்தில் இன்றியமையாதவை. கும்பாபிஷேகத்தில் வைக்கப்படும் கும்பங்கள் சர்வசக்தி விஸ்வரூபமான சர்வ தீர்த்தங்களுடைய விஸ்வரூபமாகும்.

கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் கிரியைகள் தனபூஜை, அனுக்ஞை, பிரேவேசபலி, வாஸ்துசாந்தி, ம்ருதத் சங்கிரணம், ஆச்சாரிய பூசை, அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம், பூதசுத்தி, முதலியவையாகும்.

தனபூஜை என்பது புண்ணியு வரத்தால் பெறப்படும் திரவியங்களை சிவார்ப்பணம் செய்து கும்பாபிஷேகத்திற்கு பயன்படுத்துதல்.

அனுக்ஞை என்பது உத்தரவு பெறுதல் என்பதாகும். நல் வழியில்

பெறப்பட்ட திரவியங்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வதற்கு இறைவனிடம் அனுமதி கேட்டல் ஆகும். துர்தேவதைகளை பூஜித்து பலிகொடுத்து வேறு இடத்திற்குச் செல்லவும் இறைவனை இருத்தவேண்டியுள்ளது எனவும் அவர்களைத் திருப்திப்படுத்தல் ஆகும்.

வாஸ்து சாந்தி என்து பூமிக்கு அதிபதியான பிரமனை பூஜித்து வாஸ்து புருஷனின் உபாதை இல்லாதிருக்க அப்புருசனை காவல் புரியும் தேவதைகளுக்குச் செய்யும் பூசை.

ம்ருத்த சங்கிரணம் என்பது மண்ணெடுத்தல் பூமியையும் திக்குப்பாலர்களையும் வணங்கி அனுமதி பெற்றுக் கிரியை செய்வதற்கு வேண்டிய மண்ணை வெட்டியெடுத்தல் ஆகும்.

ஆச்சாரிய பூஜை என்பது குருவிற்கு சகல உபசாரங்கள் செய்து இச் சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களை இறை அனுக்கிரத்துக்கு தகுதியாக்க வேண்டும் என்று வழிபடுதல் ஆகும்.

அங்குரார்ப்பணம் என்பது நெல் முதலான தானியங்களை எடுத்து பாலில் ஊறவிட்டு சந்திரனை வணங்கி உலக நன்மையில் பொருட்டு பயிர் வளர்த்தல்.

ரக்ஷ்யா பந்தனம் என்பது எல்லாக் கருமங்களிலும் அசுத்தம் நீங்கி எடுத்த காரியங்களை இடையூறு இன்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் வாகிஸ்வரியின் நாடியில் உண்டானதாகப் பாவித்து நாகராஜனை வழிபாடு செய்வதாகும்.

பூதசுத்தி என்பது ஐம்பூதங்களையும் இவை சம்பந்தமான ஆத்மாக்களையும் சுத்தப்படுத்துதல் ஆகும்.

இக் கிரியையின் பின் கும்பஸ்தாபனம், யாகசாலையில் பிரவேசம் செய்து ஹோமங்கள், பூஜைகள் நடாத்தப்படும். மூர்த்திகளுக்கு தானிய வாசம், ஜலவாசம் இடம்பெற்று அஷ்டபந்தனம் என்ற மருந்து, சாத்தி எண்ணைக்காப்பு, பிரம்பசுத்தி என்பன செய்யப்படுகின்றன.

சகல உபசாரங்களுடன் யாகசாலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கும்பங்களை பூஜைசெய்து குறித்த மூகூர்த்த நாளில் மேளவாத்தியங்கள் முழங்க மந்திர உச்சாடனங்களுடன் வீதிவலம் வந்து அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்படும். அதன் பின் தொடர்ந்து 15 நாட்கள்வரை விசேட அபிஷேகம் செய்து ஈற்றில் சங்காபிஷேகம் செய்து மண்டலபூஜை பூர்த்தியாகும்.

"உரிஞ்சாய வாழ்க்கை அவனுடைய போர்க்கும் இருஞ்சாகிவர்கள்
எடுத்துரைப்ப நாட்டில் கிருஞ்சோலை சூழந்த கபாலிச் தான்ற
பெருஞ்சாந்தி காணாதே போதியே பூம்பாவாய்

என்ற திருஞ்ஞானசம்பந்தரின் வாக்குக்கேற்ப சிறப்பினை உடைய கும்பாபிஷேகத்தினை தரிசித்து பங்குபற்றுவதன் மூலம் சிவபோக நித்யானந்த

மோட்சமும் சுபீட்சங்களும் பெறுவர்கள் என்பது தெளிவாகும்.

இத்தகைய சிறப்பு புண்ணிய பலம் கொண்ட கும்பாபிஷேகம் வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நிகழ்த்துவதால் கிராம மக்கள் சகல சம்மந்தங்களும் பெறுவாராக மேலும் இம் மஹா கும்பாபிஷேகத்திருவிழாவில் ஈழத்திலே வாழ் சகல மக்களும் கண்டம் நீங்கி அமைதியான, சந்தோஷமான வாழ்க்கையை வாழ வேண்டும் என ஸ்ரீ செல்வவிநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றேன்.

"சத்தியமும் கடவுளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்"

வீரகத்தி ஜெயலிங்கம்,
அவுஸ்திரேலியா



# ஆலயமும் ஆன்மீகமும்

*திருவாக்கும் செய்கருமம் கைகூடுஞ் செஞ்சொற்*
*பெருவாக்கும்பீடும் பெருக்கு - முருவாக்கு*
*மாதலால் வானொருமானை முகத்தானைக்*
*காதலாற் கூம்புவார்தங்கை*

என்று விநாயகப் பெருமானை வேண்டிக் கொண்டு. ஆலயம் என்பது ஆன்மாவிற்கு அருள் கூட்டும் இடம் என்றும், ஆன்மாக்களின் வழிபாட்டு ஏற்று அருள்பாலிக்கும் இடம் என்றும் ஆன்மா இறைவனோடு இரண்டறக்கலக்கும் இடம் என்றும். ஆலயத்தை "ஆ" + "லயம்" "ஆ" என்பது ஆன்மாவும் "லயம்" என்பது ஒடுங்குதல் என்றும் பலவாறு பொருள் கூறுகின்றன. சமய நூல்கள்,

ஆன்மீகம் என்று அடுத்து ஒரு சொல் தலைப்பில் வருவதால் ஆலயம் என்பது ஆன்மாக்களுக்கு அருவம். உருவம் அருஉருவம் என்று மூன்றுவகை திருமேனிகளின் வடிவமாக குரு, லிங்க சங்கமமாக அருள்புரிய எழுந்கருளிய இடமே ஆலயம் என்று நூல்கள் கூறுகின்றன.

*(சித்தாந்த நூல்கள்)*

மானிடராக பிறக்க - மாதவம் செய்ய வேண்டும் ஜயா" என்று சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார். அரிய இப்பிறவை ஆன்மாக்களுக்கு கொடுத்து பிறவிப் பெருங்கடலில் நீந்தி பிறப்பறுக்து பேசீன்ப வீடாகிய முத்தியடைய வேண்டும் என்ற நோக்கோடு இறைவனால் இப்பூவுலகம் படைக்கப்பட்டது. பூமியிலே ஜீவ கோடி ஜீவராசிகளும் படைக்கப்பட்ட உண்மையை இறைவனின் ஐந் தொழில் உண்மை உலகிற்கு கூறி நிற்கின்றது.

ஆலயங்கள் கூறும் ஆன்மீக உண்மைகளை

சீவனை சிவத்தினொன்றாய்ச் சேர்க்கும்
சிந்தாந்தத் தோர்க்கும்
சீவனை பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத் தோர்க்கும்
பாவனை இரண்டு மொன்றே
பரமஞானத் தோர்க்கும்
மேவிய கரும காண்டம்
விளம்பிடிற் பேதமாமே

என்று சிவபுண்ணியத் தெளிவு எனும் சித்தாந்த நூல் ஆன்மாவானது ஞானயோகம், கர்மயோகம், பத்தியோகம் என்ற வழிகளில் பக்தி செய்து இறைவனை அடையலாம் என்ற வழியை கூறிநிற்கிறது.

ஆலயங்கள் ஆகமமுறையில் கட்டப்பட்டுள்ளன, தூரத்தே வரும் போது ஆன்மாக்களுக்கு தெரிவது தூலலிங்கமாகிய கோபுரம், இக் கோபுரத்திலே முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்து தத்துவ முறையிலே சாத்திர முறையிலே இறைவனை வழிபட்ட வரலாற்று சிறப்பை அளப்பெரிய உண்மையினை. புராண இதிகாசங்களும் காப்பியங்களும், சாத்திரங்களும், தோத்திரங களும், மந்திரங்களும், தந்திரங்களும், வேதங்களும், ஆகமங்களும் விளக்குகின்ற மாயமாய் அதாவது ஊனக்கண்ணோடு பிறந்து பூமியில் வாழும் மானிடர்க்கு ஞானம் கைகூடும் வரையும் மாயத் தோற்றமாய் மறைந்துள்ளது. இறைவனின் மறைகூறும் பொருளை கோபுரம் உலகிற்கு எடுத்து கூறுகின்றது.

ஆண்டான் அடிமையில்லை அனைவருக்கும் சொந்தமாம்
மாண்டார் மீள்வதில்லை மாய்வதே உடல் என்று கீதையின் பாதையிலே கீர்த்தனைகள் தினந்துதிபாட மேதையரும் மேன்மையுறும் ஆலயங்களே என்று ஆன்மாக்களுக்கு ஆன்மீக சிந்தனைகளை ஆலயங்கள் கூறும் உண்மையை மேற்கூறப்பட்ட உபதேசத்தில் காணலாம்.

சங்ககாலம், சங்கமருவிய காலத்திலே தோன்றிய இலக்கிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை தொல்காப்பியம் போன்ற இன்னோரன்ன பல நூல்களிலும் ஐம்பொறி, புலன்களால் ஓதியும் உணர்ந்தும் தெளிவு பெற ஆன்மீக சிந்தனைகள் ஆலயங்கள் ஆன்மாவிற்கு எடுத்து இயம்புவதை

காணக்கூடியதாக உள்ளது.

ஆலயங்களிலே ஆற்றப்படுகின்ற பூசை முறைகளை பார்க்கும் போது இறைவனை எழுந்தருளச் செய்து அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தூபம், தீபம் அர்ச்சனை, ஆசி, வாழ்த்து, என்று விதிமுறையாக செய்து வேத பாராயணங்கள் வேள்விகள், யாகங்கள் மந்திரம், தியானம் என்றவாறு "கற்றாங் கரியோம்பி" செய்யப்படுகின்ற அனைத்து தெய்வ சங்கர்ப்பத்திலும் இறைவனில் மெய்யியல் தெய்வீகம் ஆன்மாவிற்கு எடுத்துக் கூறப்படுகின்றது. அதிகாலையில் ஒலிக்கின்ற காண்டாமணியின் ஓசை ஊழிக்கு முதல்வனாக இருக்கும் ஓங்கார ரூபனை உலகிற்கு விளக்குகின்றது.

சித்தாந்த சாத்திரங்களில் தேவர்கள் இறைவனின் தரிசனம் காண வரஇருப்பதை இங்கே காவல் பணியில் உள்ள கணங்களுக்கு தெரியப் படுத்தவும் கணங்கள், தேவர்கள் வருகைக்கு வழிவிடவும் ஓம் என்ற பிரணவ மந்திரம் பஞ்சபூதங்களில் கலக்கவும் மணி ஒலிக்கப்படுகின்றதாக கூறப்படுகின்றது.

ஆலயங்கள் ஆன்மாவிற்கு திரி, கரண, சுந்தியோடு ஆலயங்களில் ஆலயங்களில் ஆசாரா சீலராக இருந்து ஆன்மா திரிகரண சுத்தியோடு ஆலயங்களில் ஆசாரசீலராக இருந்து பூசையைப் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் ஐம் புலன்களால் இறைவனின் அருளமுதத்தைப் பருகி மெய்ஞான வழிநின்று.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்றதுணை"

என்று குறள்காட்டும் வழியில் அறம் பொருள் இன்பம் சேர்த்து தானம் தவம் செய்து அளப்பரிய இறைவனின் அருளைப் பெற்று பிறவி என்ற பிறப்பை நீக்க வேண்டும் என்று வழிகாட்டி நிற்கின்றது.

இறைவனின் அருளை பெறாவிட்டால் இந்த பிறவி என்ற பெருங்கடலை நீந்த முடியாது என்பதையும் ஆன்மாவிற்கு ஆலயங்கள் எடுத்து கூறுகின்றன. ஆலயங்களில் ஆற்றப்படும் ஆன்மீக சொற்பொழிவுகள் புராண இதிகாச கதைகள், தேவாரா பாராயணங்கள், இசை நடன அரங்க நிகழ்வுகள், கதாப்பிரசங்கங்கள் போன்றவை ஆன்மாக்களுக்கு சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்ததை அடைய வேண்டும் என்றும் இவ்வுடல் நிலையற்றது என்பதையும் புரிய வைக்கிறது.

தேடிக்கண்டு கொண்டேன் - திரு
மாலோடு நான்முகனும்
தேடி தேடொணாத் தேவனை என் உள்ளே
தேடிக்கண்டு கொண்டேன்

என்று நாவுக்கரசர் கூறுவது போல ஆன்மாக்கள் மலபரிபாகம் நீக்கப் பெற்று இறைவனாகிய பேரொளியை வழிபாட்டின் மூலம் அகத்திலே கான லாம். சித்தம் எல்லாம் சிவமயம் என்று நோக்கும் மனச்சிந்தையை எமக்கு உணரவைப்பதும் இறைவனே என்று சமயம் கூறுகின்றது.

ஆலயங்களிலே செய்யப்படுகின்ற பெரு விழாக்கள் என்று கூறப்படும் மகோற்சவத்தில் கொடிஏற்றம், தேர், தீர்த்தம், எனவரும் திருவிழாக்களில் இறைவனின் ஐந்தொழில் மகத்துவம் கூறப்படுகின்றது.

"உய்வார்கள் உய்யும் வகையெலாம் உய்தெழுதோம் எய்யாமற்
காப்பாய் எமை ஏலோரம் பாவாய்"

என்று மணிவாசகர் பெருமான் கூறுகிறார் அதாவது தனு, கரண, புவ, போகங்களை இறைவன் படைத்து அவற்றை ஆன்மாக்கள் அனுபவித்து ஈற் றில் பிறவிப் பெருங்கடலை பிறப்பை அழித்து எம்மை காப்பாற்றுபவரும் இறைவன் என்று கூறப்படுகின்றது.

தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வளங்காதெனின்

ஆன்மாக்கள் எடுத்த மானுடப் பிறவியிலே அறன் வழி பொருள் சேர்த்து வாழ்ந்து தானம், தவம்,(விரதம்) என்பன செய்து இறைவனைப் போற்றி வாழவேண்டும் என்று ஆலயங்கள் ஆன்மாக்களுக்கு ஆன்மீகம் சொல்கின் றன. களவு, கொலை, கொள்ளை என்பன செய்யாது நல்ல ஒழுக்கம் விழு மியங்கள் கொண்ட சமுதாயத்தாரோடு சேர்ந்து ஆலயங்கள் கூறும் ஆன்மிக இறையின்பத்தை தேடி அனுபவித்து வாழவேண்டும் என்று கூறப்படுகிறது.

"நிலை பெறுமாறென் உதியே நெஞ்நீவா"

என்று அப்பர் சுவாமிகள் தேவார வரிகள் கூற்றில் இருந்து எம் நெஞ்சமே ஒவ்வொரு நாளும் அரன் உறைவும் ஆலயம் சென்று அளப்பரிய கைங்கரியம் செய்து அரனைப் பாடிப்பாடி அக மகிழ்ந்து அரிய மானிடப் பிறவியின் பயனால் பிறப்பறுத்து முத்தி அடைய வேண்டும் என்று

ஆலயங்களிலே நடர்த்தப்படும் பண்ணிசை பாராயண வகுப்புகள் அறநெறிவகுப்புகள் அரங்க செயற்பாட்டிற்கான இசை வகுப்புகளிலும் தெய வீகம் தன்மை கூறும் கதைகள் பாட்டுக்கள் பயிற்றப்படுகின்னறன. இவற் றால் பயின்று பலன் பெறும் இளம் சமுதாயமும் ஆன்மிக சிந்தனைகளை அறிந்து வாழ்க்கையில் நெறிகெட்டு போகாமல் வழிகாட்டி நிற்கின்றன.

அருகிவரும் கலை அம்சங்கள் இறை இயல்களும் விஞ்ஞான விந்தையான உலகில் பெருகி வரும் சமய மாற்றங்களால் சமுதாயத்தில் சைவமும் சைவதத துவங்களும் அழிந்து போகாமல் காப்பது ஆலயங்களுக்கும் ஆலயம் சார்ந்த சமூகத்தோருக்கும் ஆலய பரிபாலனசபையின்ருக்கும் பெரிய கடமைப்பாடா கும். இன்னும் ஒன்று எம் சமூகம் கால ஓட்டத்தில் பல இன்னல் இடர்களை எதிர் நோக்கியது வெள்ளிடை மலை, இந்த நேரத்திலும் இனிவரும் நேரங்களி லும் ஆலயங்கள் ஆன்மீக சிந்தனைகளை வளர்த்து ஆன்மாக்களுக்கு நல்ல பாதையைக் காட்டும், காட்ட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

ஆலயங்கள் காட்டும் அன்புநெறியும் சைவமும் தமிழும் நிலைக்க வேண்டிக் கொள்கிறேன்

திருமதி - பாஸ்கரன் மகாலட்சுமி
ஆசிரியர்



# சைவ சமயத்தில் சிவ வழிபாடு

அகரத்தை முதலாக உடையன எழுத்துக்கள் அனைத்துயிர்களும் உலகங்களும்இறைவனை முதலாக உடையன. காரணம் இல்லையேல் காரியம் நிகழ்வதில்லை. அகிலமனைத்தும் உண்டாவதற்கு காரணமாகிய படைப்பாற்றல் ஒன்று இருப்பது உறுதிப்படுகின்றது. அதற்கு ஆற்றல் குறைவில் நிறைவாக விளங்குதல் வேண்டும். அல்லது முதன்மையாக முழுமையாக செம்மையாக இருத்தல் வேண்டும். செம்மையுடையவன் சிவன் செம்மை யென்னும் பெயர் வண்ணம். வரவு, செயல் ஆகிய மூன்றையும் ஒருங்கே உணர்த்தும் பொது பொருளாகும். எனவே சிவபெருமானை முழுமுதற் கடவுள் என முன்னோர் அழைத்தனர்.

எல்லாம் வல்லவன் எங்கும் நிறைந்தவர் என்றும் உள்ளவனாகிய இறைவனுக்குப் சிற்றறிவுடைய நாம் செய்யும் வழிபாடு வேண்டுமோ? அவர்தான் "வேண்டுதல் வேண்டாமை இல்லாதவனாயிற்றே" எல்லாமாய் இல்லாதுமாய் இருந்ததனை இருந்த படி இருந்து காட்டிச் சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்" என்பார் பரஞ் சோதியார், "அவனடி சோர்ந்தாருக்கு யாண்டும் இடும்பை இல" என்பார் வள்ளுவர். சிவனை வழிபட்டால் வினைகளும் மாய கின்றன. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பது தமிழ் மறை பொருள் சேர் புகழ் புரிதலே விழிபாடாகும்.

வெண்ணிற ஆடையில் தன்னியல்பாகவே அழுக்கு படிகின்றது. ஆடை தூய்மை பெற அதனை உவர் மண்ணீரில் நனைக்கின்றோம். அப்பொழுது முன்னிருந்த அழுக்குடன் மண்ணின் அழுக்கும் சேர்கின்றது. இரு வகை அழுக்கையும் போக்க நீராவியில் வேக வைக்கின்றோம். பின்னர் தண்ணீரில் நனைத்துக் கல்லில்

தோய்க்கின்றோம் இப்பொழுது ஆடை தன்னியல்பாக தூய்மை பெறுகின்றது. இவ் வண்ணம் உயிர் களை ஆணவமலம், மாயமலம் ஆகிய இருவகை மாசுக்கள் பிணிக்கின்றன. பிணிவுள்ள உயிர்கள் விடுபட வழி பாடு ஒன்றே சிறந்த மருந்தாகும்.

சிவ வழிபாடு மன்னுயிர்க ளுக்கு மட்டும் உரியதன்று மண்ண வரும் விண்ணவரும் சிவ வழிபாட் டால் கடைத்தேறியுள்ளனர். முழு முதற்கடவுளாம் சிவபெருமானை அம்பிகை வழிபட்ட இடம் திருவா னைக்கா,பிள்ளையார் வழிபட்ட இடம் திருச் செங்காட்டங்குடி, முருக வேள் வழிபட்ட இடம் திருச்சேஞ்ஞு லூர், பிரமன் வழிபட்ட தலம் சீர் காழி, திருமாள் இராமனாக வழி பட்ட இடம் இராமேஸ்வரம்.

வழிபாடு இயற்றுவேர் யாவராயி னும் யாதாயினும் ஒரு பொருளால் இறைவனை வழிபடுதல் மரபாகும். சாக்கியர் கல்லாலும், நாவரசர் சொல் லாலும், சம்பந்தர் தமிழாலும், சுந்த ரர் பாட்டாலும், பாணபத்திரர் இசை யாலும், மாணிக்கவாசகர் வாசகத்தா லும், குசேலர் அவலாலும், குகன் மீனாலும், கண்ணப்பர் ஊனாலும், வந்தி பிட்டாலும், சபரி கனியாலும், கஜேந்திரன் மலராலும் வழிபட்டு உய் யப் பெற்ற காட்சியை சமய உலகம் நன்கு அறியும்.

உலகில் உயிர்கள் உடம் பொடு பொருந்துகின்ற பொழுது படைப் பாற்றல் முகிழ்கின்றது. வாழ்வுக்கு தேவையான பொருள்களையும் பொருள்களை உணர்வுவழித் துயப் பதற்கான இன்பங்களையும் (தனு, கரண, புவன, போகம்) இறைவன் படைத் துள்ளான். இவ்வாறு படைக் கப் பெற்ற உயிர்கள் துய்ப்பதற்குரிய உலகினையும் உலகியற் பொருட்க ளையும் நிலை நிறுத்தல் காத்தல் எனப்படும். உயிர்கள் தமக்கென வரையறுக்கப் பெற்ற கால எல்லை கடந்தவுடன், விசைமுடுக்கப் பெற்ற கடிகாரம் கால எல்லை முடிந்த பின்னர் அடங்கிவிடுதல் போல, அவை களையும் அவை துயக்கும் போகப் பொருள்களையும் தமக்குள் ஒடுக்கு தல் அழித்தலாகும்.

ஆன்மாக்கள் இருவினைப் பயனாகிய மாயையில் ஆழ்த்துதல் மறைத்தல் எனப்படும். அவ்வினைப் பயன்களாகிய பசுக்களாகிய உயிர் களை விடுவித்தல் அருளுதல் எனப் படும். இதனை "ஆக்குவாய் காப் பாய் ஆழிப்பாய் அருள்தருவாய்" என்று சிவபுராணம் பேசுகின்றது. இவ் ஐந்து தொழில்கள் இறைவனது அகிலா விளையாட்டு என்பார் கம்பர்.

தாயிற் சிறந்த தாயாவான தத்துவ னாக விளங்கும் எங்கள் சிவனை உலகப் பரம் பொருளை தினமும் வைகறைத் துயிலெழுந்து நீராடி, விலவம், மருக்கொழுந்து, மல்லிகை, முல்லை, மந்தாரம், செவ்வந்தி, தாமரை ஆகிய மலர் களைக் கொண்டு பூசித்து வருதல் வேண்டும். ஈர ஆடையுடன் வழி பாட்டில் ஈடுபட லாகாது.

"நமசிவாய" என்னும் திருவைந் தெழுத்தைச் சிந்தையில் நிறைத்துத் திருநீற்றை நீரில் குழைத்து வடக்கு கிழக்கு முகமாக அமர்ந்த வண்ணம் தலை, நெற்றி, மார்பு, தொப்பூள், புயங் கள், முழங்கைகள், முன்கைகள், முழந்தாள்கள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களில் முக்குறியாகவும் வளையாமலும் இடையறாமலும் ஒன்றை ஒன்று திண்டாமலும் மிக அகலாகமலும் தரித்தல் வேண்டும். எவ்வகையா னும் திருநீறு நிலத்தில் சிந்தவோ கையிலிருக்கும் திருநீற்றை இறை வன் திருமுன் அமர்ந்து திருவிளக்கை வாயால் ஊதவோ கூடாது என்பன விளக்கேற்றி பூமாலை சூட்டி யாதா யினும் பழபோ? நினைவுக்குரியன பின்னர் நெற்றியில் இனிய பண் டமோ படைத்து, நாறும் சந்தன மிட்டு அதன் மேல பராசக்தியின் புகையும், கற்புர ஒளியும் காட்டித் துதித்து அடையாளமாகக் குங்குமத் திலகம் இடல், வணங்கும் முறை யாக வேண்டும்.

தம்பிஐயா பாலசிங்கம்,
வெற்றிலைக்கேணி.



# சிதம்பரம்

சிதம்பரம் ஸ்ரீ சித் + அம்பரம்
சித் - அறிவு, ஞானம்
அம்பரம் - பரவெளி, ஆகாசம்
சிதம்பரம் - ஞானாகாசம்

ஆகாயத்தின் மையப்புள்ளி தான் சிதம்பரம் கோயில் கோயில் என்ற பதத்திற்கு முழு அதிகார பூர்வமான தும் பொருத்தமானது எது என்றால்? சிதம்பரம் கோயில் மட்டுமே

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம் மூன்றும் ஆலயத்தின் மிக முக்கியமான துமாகும். அதன் படி தில்லை என்ற சிதம்பரத்தில்

மூர்த்தி - நடராஜர்
தலம் - சிற்றம்பலம்
தல்லை ஆலமரம் விருட்சம்
தீர்த்தம் - சிவகங்கை

## சிவகங்கை

எந்த ஆலயத்திற்கு சென்றாலும் முதலில் தீர்த்தமாடிய பின்பு தான் ஸ்சுவாமியை தரிசித்து வணங்கி அருளாசி பெறவேண்டும். இது ஆலய வழிபாட்டு முறையும் ஆகும். எனவே முதலில் சிவகங்கையில் தீர்த்தமாடி பின்பு சித்சபையில் ஆனந்த தாண்டவ தரிசனம் தரும் ஆடல்வலானை தரிசிப்போம்

## தீர்த்த சிறப்பு

ஹிரண்யவர்மன் சிவகங்கை யில் நீராடி தான் நோய் நீங்கப் பெற்று சுகமடைந்தான் தாண்டவ தரிசனம் கண்டதும் சிவகங்கையில் மூழ்கிய போது தான் சிவகங்கையில் நீராடல் சர்வரோக நிவர்த்தி தரும். சகல பாவங்களும் விலகி புண்ணியம் உண்டாகும். இகபர சுகமளிக்கும் மனிதர் யாவரும் தம் வாழ்வில் ஒரே முறையேனும் சிவகங்கையில் நீராட வேண்டும் சிவகங்கையில் நீராடல் கல்வி, செல்வம், புகழ், தேஜஸ் அனைத்தும் தரவல்லது இன்னும் அனந்த கோடி ரகசியங்கள் உள்ளது சிவகங்கையில்

விரட்சம் - தில்லை, ஆலமரம்

உங்கள் வாழ்வில் ஒரு மாற்றம் கண்டிப்பாக கிடைக்கும் 100% உண்மை உறுதியாக

* ஒருமுறை நீராடிப் பாருங்கள்

சிதம்பரத்தில் சிற்பசபை, கனக சபை, நடனசபை, தேவசபை, ராஜ சபை, என ஐந்து சபைகள் உள்ளன.

## சிற்றம்பலம், ஞான சபை

சிதம்பரம்கோயில்கட்டிட அமைப்பு யாவும் தத்துவ அடிப்படையில்

அமைந்தவை வாஸ்து ஆகம விதிகள் பிறழாது நெறிப்பட அமைந்த கோயில் மரத்தால் அமைந்து தொன்மையை பறைசாற்று கின்றது. சிற்சபை மேல் 21600 பொன் ஓடுகள் 72000 ஆணிகள் அடிக்கப் பட்டுள்ளன.

ஒரு மனிதனின் நாடி நரம்புகளின் எண்ணிக்கை 72000 அவன் ஒரு நாளைக்கு விடும் சுவாச காற்றின் எண்ணிக்கை 21600 ஒரு நிலத்திற்கு 15 சுவாசங்கள் வீதம் மேல் உள்ள 9 கலசங்கள் 9 சக்திகள், நவரத்தினங் கள், நவக்கிரகங்கள் அறியவற்றை குறிக்கும் 9 வெளிவாசல்கள் மனித னின் 9 துவாரங்களை குறிக்கும் 224 பலகை அமைப்புக்கள் 224 உலகங் களை 64 சந்தனகை மரங்கள் ஆய கலைகள் 64ஐக் குறிக்கும்.

சதாசிவ பீட 4 தங்க தூண்களும் 4 வேதங்களை குறிக்கும் அடுத்து சதாசிவ பீட 6 தூண்களும் 6 சாஸ் திரங்களைக் குறிக்கும். ருத்ரபீட ரக சியம் பார்த்திடும் 96 பல கணிகள் 96 தத்துவங்களை குறிக்கும். விஷ்ணு பீடத் தின் கதவுகள் அவித்தையை யும் இரசியத்திரை மாயையும் குறிக் கும் ஐந்து தூண்களும் ஐம்பொறி களை குறிக்கும் இங்கு நடராஜப் பெரு மானின் திருமுடியிலுள்ள சந்திரனின்று உண்டான ஸ்படிகலிங்க மும் மாணிக்க மயமான இரத்தின சபா தியும் சுவர்ண ஆகர்க்ஷண பைரவரும், நித்திய உத்ஸவர் முதலானவர்களும் எழுந் தருளியிருக்கின்றனர்.

இச் சிற்றம்பலத்தின் உள்ளே செல்வதற்கு ஐந்து படிகள் இருக்கின் றன. இவற்றிற்கு பஞ்சாட்சரபடிகள் என்று பெயர். இப்படிகள் இரு புறமும் யானை உருவங்கள் இருக் கின்றன. சிற்சபையில் நிகழும் ஆனந்த நடனத்தை சிவகாம சுந்தரிப்யார் இடைவிடாமல் கண்டு களிப்பது. ஆன்மாக்களின் பிறவிப் பிணியைப் போக்குவதற்கே என்று குமரகுருபர சுவாமிகள் பகர்கின்றார்.

ஆடல்வல லான் ஆடல்புரியும் இடம் சிற்றம் பலம் இதையே தான் சிற்சபை என்று அழைக்கப்படு கின்றது. நடராஜர் இச் சபையில் திரு நடனம் புரிந்து ஐந்து தொழில்களை யும் நிகழ்த்துகின்றார். எம் பெருமா னின் ஐந்து தொழில் களாவன ஆக்கல், அழித்தல், காத் தல், மறைத் தல், அருளல் என்பன வாகும். ஆடல்வலலானின் ஆட்டம் நின் றால் இப் பிரபஞ்ச இயக்கமே நின்று விடும்.

சிற்சபையின் பொன் ஓடுகள் வேய்ந்த வேந்தன் இரண்ய வர்மன். இவனுக் குப் பின் ஆதித்த சோழன் மகன் முதற் பராந்தக சோழன் பொன் வேய்ந் தான். முற்காலங்களில் ஆலய வழி பாடு பராமரிப்பு, ஆலயம் தொழு தல், புதிதாக ஆலயம் கட்டுவித்தல் போன்ற தெய்வீக காரியங்களில் நாட்டு அரசர்கள் கருத்தை செலுத் துவதில் சிரத்தை கொண்டிருந்தனர். சிறப்பாக ஆட்சி செய்து நாட்டையும் மக்களையும் நல்ல முறையில் ஆட்சி செய்தனர். இயற்கை பேருதவியாக இருந்தது. இறையருளால் தான் எல் லாம் நடக்கும் என்ற கருத்தில் அம்

மன்னர்கள் நம்பிக்கை வைத்திருந்த னர்.

மேலும் அந்த காலங்களில் எல்லா நாட்டு மன்னர்களும் சிறந்த பக்தி மான்களாக இருந்தார்கள் என்பதற்கு இப்போதைய கோபுர கோயில்களே பறைசாற்றுகின்றன. இப்போதெல்லாம் எந்த கோயிலை இடிதால் என்ன தொழிற்சாலை கட்டலாம் ரோடு போடலாம் என்ற சிந்தனையில் மன்னர்கள்?

**கனகசபை**

சிற்றம்பலத்திற்கு முன் உள்ளது (எதிரம்பலம்) பொன்னம்பலம் என்ற கனகசபை. நடராஜர் மஹா அபிஷேகங்கள் நடக்கும் இடம் இதுவேயாகும். இங்கு ஸ்படிகலிங்கத்திற்கு தினசரி ஆறுகாலப் பூஜையும் பகல் இரண்டாம் காலத்தில் ரத்தின சபாபதிக்கு அபிஷேக வழிபாடுகளும் நடைபெறும்.

பொன்னம்பலத்ததின் முகப்பை ஆதித்த சோழன் கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வந்த மாற்றுயர்ந்த பொன்னால் வேய்ந்தான் என்று சேக்கிழார் சுவாமிகள் கூறியுள்ளார்.

கனகசபையின் 18 தூண்கள் 18 புராணங்கள் குறிக்கிறது. கனகசபையின் ஐந்து தளவரிசைக் கற்கள் பஞ்ச பூதங்களின் தத்துவத்தை குறிக்கும்.

கனகசபையில் நின்று தான் சிதம்பர ரகசியத்தை பக்தர்கள் தரிசிப்பார்கள். மேலும் ஆடல்வல்லானின் ஆட்டத்தை கனகசபையின் மூலமே தரிசிக்க முடியும்.

**நடனசபை**

சிதம்பரத்திற்கு "நிருத்த க்ஷேத்திரம்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஆடல்வலலான் ஊர்த்தவ தாண்டவம் செய்தருளிய இடம் இது ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் நடனப் போட்டி நடக்கும் போது ஸ்வாமி தமது காது குண்டலம் கீழேவிழ அதை தனது வலது கால் விரல்களால் எடுத்து காதில் மாட்டுமாறு காலை மேலே தூக்கி நடனம் ஆடிடவே அம்பாள் காலைத்தூக்கி ஆட முடியாமல் போகவே ஸ்வாமி ஆடலில் வெற்றி பெற்றார். இத்தகு தெய்வ திரு நடன சிறப்பு பெற்ற இடம் தான் நடன சபை என்ற திருத்த சபை ஆகும். ஸ்வாமி இங்கு ஆடிய தாண்டவத்திற்கு ஊர்த்துவ தாண்டவம் என்று பெயர்.

ஸ்வாமிக்கு தென்பகுதியில் ஸ்ரீசரபேஸ்வரர் எழுந்தருளியருக்கிறார். இவருக்கு அபிஷேக ஆராதனைகள், அர்ச்சனைகள் செய்து வழிபாடு செய்ய சகல கண்டாதி தோஷங்களும் விலகியோடும் ராகு காலத்தில் நெய்தீபம் ஏற்றல் சிறந்த பலன் களைப் பெற்று தரும். "பிரபஞ்ச நாயகன் டான்ஸ் போட்ட இடம் தாம் நடனசபை" ஆம்இங்குள்ள ஒவ்வொரு தூண்களில் நடன கலையில் ஒவ்வொரு அம்சங்கள் மிக நுணுக்கமாக பொறிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

**தேவசபை (பேரம்பலம்)**

நிறை வெண் கொடி மாடம்
நெற்றி நேர்தீண்டப்
பிறை வந் திறைகாக்கும் பேரம்பலம்
என்கிறார்.

திருஞானசம்பந்தர் பேரம்பலத்தில் ஐந்து மூர்த்திகளும் எழுந்தருளியிருக்கின்றனர். இங்கு தான் மாதந்தோறும் திருவாதிரை நட்சத்திரத்தன்று சோமாஸ் கந்தருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் இங்கு தான் பொது தீட்சதர்கள் ஆலயப் பணிகள், வழிபாடுகள் குறித்து சபை கூட்டுவர்.

இப் பேரம்பலத்தை கூத்தனான காலிங்கராயன் விக்கிர சோழன் செம்பினால் வேய்ந்தான். இப் பேரம்பலத்திற்கு மூன்றாம் குலோதுங்க சோழன் திருப்பணி செய்தான்.

ராஜசபை

ஆயிரம் கால் மண்டபம் ராஜசபை என்றழைக்கப்படுகிறது. இங்கு 999 தூண்கள் மட்டுமே உள்ளது. மீதமான ஒன்று நடராஜப் பெருமானின் ஊன்றிய கால் ஆக மொத்தம் 1000 கால் மண்டபம் ராஜசபையாக விளங்குகிறது. இது 5வது சபையாகும். இங்கு தான் ஆனி (மிதுனம்), மார்கழி (தனுசு) மாதங்களில் நடைபெறும் ஒன்பதாம் திருநாள்களில் நடராஜப் பெருமான் திருத்தேரில் எழுந்தருளி நான்கு வீதிகளில் உலா வந்த பின்னர் இரவில் இந்த ஆயிரங்கால் மண்டபத்தில் வீற்றிருந்து விடியற் காலையில் அபிஷேகம் நடைபெற்று, பத்தாம் நாள் பிற்பகலில் பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்குத் திருக்காட்சியளித்து, பெருமான் முன்னதாகவும் பெருமாட்டி பின்னதாகவும் மாறி மாறி நடனம் செய்து கொண்டு சித் சபைக்கு செல்வர்.

ராஜசபையில் தான் எல்லா வகையான இதிகாச புராணங்கள் அனைத்தும் அரங்கேற்றம் செய்யப்பட்டன இன்றும் பல காரியங்கள் ராஜசபையில் தான் அரங்கேற்றம் செய்யப்படுகின்றன. கம்பராமாயணம் இங்குதான் அரங்கேற்றம் செய்யப் பெற்றது. இங்கு செய்யும் காரியம் அபிவிருத்தை தரும். ஆடல்வல்லானின் அருளாசியில் சைவ சமய குரவர் நால்வருள் மாணிக்கவாசக சுவாமிகள் 1000 கால் மண்டபத்திலேயே ஈழத்துப் புத்த மன்னன் மகளாகிய ஊமை பெண்ணைப் பேச வைத்தருளினார். புத்தர்களை வாதத்தில் வென்று புகழாரம் சூட்டினார். அநபாய சோழனின் அமைச்சரான சேக்கிழார் சுவாமிகள், நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பான பெரியபுராணத்தை இயற்றுவதற்கு இங்கு வந்து சபாநாயகனரைக் கண்டு வணங்க அப் பெருமான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தருள் செய்ய இவ் வாயிரங்கால் மண்டபத்திலேயே இருந்து அரங்கேற்றம் செய்தருளினார். இவ்வாறு பல வகையான அருளற்புதங்கள் நிகழ்ந்த இடம் தான் ராஜசபை

ஸ்ரீ நடராஜப் பெருமான் பிரமாவின் தலைகளை மாலையாக அணிந்திருந்தார் அம்மாலையில்

முப்பத்திரண்டு தலைகள் உள்ளன. பெருமான் ஆனந்த தாண்டவம் ஆடும் போது திருமுடியிலுள்ள சந்திரனிடமிருந்து அமிர்த தாரைகள் மாலையில் உள்ள பிரமாவின் தலைகளின் மீது விழ அத் தலைகள் அமிர்தத்தினுடைய சக்தியால் உயிர் பெற்று பாடத் தொடங்கின. இதிலிருந்து தான் இசை உண்டாயிற்று என்று என்று சங்கீத சாஸ்திரம் கூறுகின்றது. ஆதலால் சங்கீத இசை பயிலும் இசை கலைஞர்களும் நாட்டியம் பயிலும் நாட்டியக் கலைஞர்களும் முதலில் இந்த ஆயிரங்கால் மணடபத்தில் அரங்கேற்றம் கலையில் சிறப்புற்று விளங்க வேண்டும் என ராஜசபையில் தான் அரங்கேற்றம் செய்ய வேண்டும்.

சோழ மன்னர்கள் முடிசூட்டு விழாவை ராஜசபையாகிய ஆயிரங்கால் மண்டபத்தில் தான் முடி சூட்டப்பட வேண்டிய மன்னனுக்கு பஞ்சாட்சர படியில் அபிஷேகமும் ராஜசபையில் முடிசூட்டு விழாவும் நடைபெறும் தில்லைவாழ் அந்தணர்களால் முடிசூட்டப்படும். இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லை நகரில் முடிசூட்டப் பெற்ற செய்தியைத் திருமாணிக்குழி கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இவ்வாறு பல விசேஷ நிகழ்சசிகள் நிகழுமிடமாக தெய்வீக சிறப்பு பெற்று விளங்குகிறது. அன்றும் இன்றும் என்றும்

**சிதம்பர இரகசியம்**

சிதம்பரம் என்றாலே ரகசியம் என்ற வார்த்தையும் உடன் சேர்ந்து கொள்கிறது. போன இந்த இரகசியத்தின் அர்த்தம், அனேகம்பேருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை

திருவாரூரில் மண்ணாக, திருவண்ணாமலையில் நெருப்பாக திருவானைக்காவலில் நீராக, திருக்காளத்தியில் காற்றாக, வழிபடும் இறைவனை சிதம்பரத்தில் ஆகாய உருவில் வழிபடுவது தான் அந்த ரகசியம்.

ஆலயத்தின் அந்த சபையில் ஸ்ரீ நடராஜ பெருமான் நடனக் கோலத்தில் காட்சி தருகிறார் அவருக்கு இடப்பக்கம் சிவகாம சுந்தரி அம்பாள் விற்றிருக்கிறார்.

வலது பக்கம் திரைபோடப்பட்ட நிலையில் சிறுவாயில் உள்ளது நடராஜருக்கு ஆரத்தி காட்டப்படும் போது அந்த திரை அகற்றப்படும் அப்போது அந்த இடத்தில் இருவுருவம் எதுவும் தெரியாமல் தங்கத்தினால் ஆன விஸ்வதள மாலைகள் தொடங்கிவிடப்பட்ட நிலையில் தெரியும் இதற்கு அர்த்தம் தந்து இறைவன் அருள் வடிவில் (ஆகாய உருவில்) உள்ளார். என்பது தான் இதைப்பார்த்து தரிசித்து பிரார்த்தனை செய்தால் வேண்டியது வேண்டிய படியே கிடைக்கும் 100%

வீரகத்தி ராஜலிங்கம்
கனடா



# பிள்ளையார்

படைப்புக்கள் அனைத்தும் ஓம் என்னும் பிரணவத்தை ஆதாரமாகக் கொண்டே நிகழ்கின்றன. அவை அனைத்தும் தொடக்கம், நிலைபேறு, முடிவு எனும் மூன்று நிலைகளைக் கொண்டன. படைப்பு அதாவது தொடக்க நிலைக்கு பிரமன் எனும் தேவரையும் நிலைபேறு அல்லது காத்தல் தொழிலுக்கு விஷ்ணு எனும் தேவரையும் முடிவு அல்லது அழித்தல் தொழிலுக்கு உருத்திரன் எனும் தேவரையும் பெறுப்பாக இருப்பதாக சனாதன தர்மம் என்று அழைக்கப்படும் இந்துமதம் காட்டுகிறது. இந்த மூன்று தொழில்களும் முறையே Generation, Opretion, Destruction என அழைக்கப்படும். இவற்றின் முதல் எழுத்துக்களான G,O,D மூன்றின் இணைவால் ஏற்பட்டதே ஆங்கிலத்தில் கடவுளைக் குறிக்கும் GOD என்பதாகும்.

ஓம் எனும் பிரணவமே அனைத்திற்கும் மூலம் இந்த மூலமந்திரத்திற்கு கொடுக்கப்பட்ட ஒரு திருவுருவமே விநாயக வடிவம். மிருகத்தின் தலை, தேவரின் உதரம், மனிதனின் பாதம் என்பவற்றைக் கொண்டு அனைத்திலும் அவனே என எடுத்து இயம்புகிறது. மேலும் மனிதன் மிருக நிலையிலிருந்து தெய்வத்திற்கு உயர்ந்த விட வேண்டும். அதுவே மானிடப்பிறவியின் நோக்கம் என்பதையும் சுட்டிநிற்கின்றது.

விநாயகர் கஜானனன், விக்னேஸ்வரன், லம்போதரன் எனப் பல நாமங்களால் அழைக்கப்பட்டாலும் தமிழ் மக்களால் செல்லமாக அழைக்கப்படும் நாமம் "பிள்ளையார்" என்பதாகும். இப்பெயர் யார் பிள்ளை? என வினாவுவது போன்றும் காணப்படுகிறது. இந்த வினாவுக்கு விடையை உபநிடதங்கள் "தத்துவம் அஸி" அதாவது "அது நீயேயாகும்" என்று பகர்கின்றன.

கஜானனன் என்ற நாமம் யானை முகத்தோன் என்று பொருள் படுகின்றது. யானைமுகம் மங்களமானது. நான்கு புஜங்களுடன் தொங்குகின்ற தும்பிக்கையுமாக ஐங்கரன் என்று அழைக்கப்படுகின்றான்.இந்த ஐந்து கரங்களும் பஞ்சகிருத்தியங்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில்களையும் குறிப்பன. யானைக்கு அழகு அதன் தந்தங்கள் இரண்டும் இவற்றில் ஒன்றை உடைத்து பாரதப் பெருங்கதையை எழுதியதாகவும் கஜமுகாசூரனை வதைத்து தேவர்களை காத்ததாகப் புராண இதிகாசங்களில் காட்டப்பட்டுள்ளது. இச்செயல்களாவன

பிறரைக் காக்கத்தியாக உணர்வு வேண்டும் என்பதனை எமக்கு எடுத்தரைப்பன.

மேலும் சுளகு போன்ற காதும் தும்பிக்கையால் மறைக்கப் பட்ட வாயும் எம்மை நிறையக் கேட்க வேண்டுமென்றும் ஆனால் சிந்தித்து குறைவாகப் பேச வேண்டும் என்பதைச் சொல்லாமல்ச் சொல்வன. தியான நிலையைக் காட்டும் அருள் பொழியும் இரு கண்கள் அவற்றின் மேல் நெற்றிக் கண்ணாகிய ஞானம் எனும் கண் இவை இரக்ககுணம் மனிதனுக்க இருக்க வேண்டும் என்பதனையும் ஞானமே ஒருவன் அடைய வேண்டிய இலக்கு என்பதனையும் தெரிவிப்பன. இவற் றிற்கு மேலாக அதன் பிளிறல் சத்தமே ஓங்காரநாதமாக ஒலிப்பதை அவதானிக்கலாம்.

கணபதியை வழிபடாத எந்த ஒரு மதமும் இல்லை எனலாம். வைதீக அவைதீக சமயங்களும் இவற்றில் அடக்கம். ஆனால் கணபதி அன்றி எந்தத் தெய்வத்தையும் வணங்காத ஒரு சமயப் பிரிவு "காணபத்தியம்" என்ற பெயரில் உள்ளது. ஒரிசா மானிலத்தில் காணபத்தர்கள் விநாயக வழிபாட்டை மட்டும் செய்கின்றார்கள். கணபதி பிரம்மச்சாரியாகப் பேசப்படும் போதும் வலவாம்பிகை இடவாம்பிகை என்னும் தேவிகளுடனும் அருள்பாலிக்கும் திருவுருவங்களும் உள்ளன. இது கணபதியை வழிபடுபவருக்கு சித்தி, புத்தியையும் வழங்குவதுடன் அவன் முத்தியையும் எமக்கு அழிக்க வல்லவன் என்பதைக் குறியீடாகக் காட்டவே ஆகும்.

ஔவையைக் கைலைசேர்ந்த வரலாறு நம்பியாண்டார்நம்பிக்கு பள்ளி சொல்லாமலே ஞானம் கைவரப் பண்ணிய செய்தி அவரை நம்பியவர்களை அவர் கடைத்தேற்றும் செய்தியைச் சொல்வன. ஒரு கையிலுள்ள மோதகம் உப்பற்ற வெளிப்புற மாவையும் உட்புறமான சத்துக்கள் நிறைந்ததும் இனிமையும் கொண்ட உள்ளுடன் அல்லது பூரணம் என்ற பகுதியும் கொண்டது. உலகியலான வெளிப்புற மாயையில் மோதுண்ணாமல் உட்புறமாகச் சென்று உண்மையான அறிவுமயமான பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்பதை மறைவாகச் சொல்கிறது. உலகியலில் ஆன்மீகத்தோடு இணைந்த செல்வதே இனிமை பயக்கும். வெளிப்புற மோதல்கள். குடும்பங்கள், நாடுகள் சிதறி சின்னாபின்னப் பட காரணமாவதை நாளும் நாம் காண்கின்றோம். அகமுகமாகத் திருப்பி அமைதி ஆனந்தம் காண முயல்வோமாக விநாயகன் மிக எளிதாக அன்புக்குக் கட்டுப்பட்டு அன்பர்களது வல்வினைகளை வேரோடு களைந்திடுவான். நம்பிக்கை வைத்தால் தும்பிக்கை துணைவரும் கணபதியை தினம்பணிந்து சித்தி, புத்தி, முத்தி, அனைத்தும் பெற்றுய்வோமாக.

"சமஸ்த லோகா சுகினோ பவந்து"

துரைசிங்கம் துஷேந்திரன்.
பருத்தித்துறை.



# வெற்றியைத் தரும் விநாயக சதுர்த்தி விரதம்

ஆவணிமாதம் வரும் சதுர்த்தி திதியை விநாயகர் சதுர்த்தி என்று அழைக் கின்றோம். அன்றைய தினம் நாம் விரதம் இருந்து (ஆனைமுகனை வழி பட்டு) அருகிலிருக்கும் ஆலயங் களுக்குச் சென்று அறுகம்புல் மாலை யிட்டு கண்பதியை வழிபட்டால் பெரும் பொன்னை அள்ளி அவர் பெருமையுடன் நமக்களிப்பார்.

எந்தக்காரியத்தைத் தொடங்கினா லும் விநாயகரை வழிபட்டுத்தான் தொடங்குவது வழக்கம். பிள்ளை யார் சுழிபோட்டு நாம் எழுதும் எழுத் துக்களுக்கு நல்ல பயன் கிடைக்கிறது. எனவேதான் மூல கணபதி என அவரை நாம் வர்ணிக்கின்றோம்.

கணங்களுக்கு எல்லாம் அதிபதி யாவதால் அவரை கணபதி என்று சொல்கின்றோம். எனவே நாம் தேவ கணத்தில் பிறந்தவராக இருந்தாலும் அசுரகணத்தில் பிறந்தவராக இருந் தாலும் மனிதகணத்தில் பிறந்தவராக இருந்தாலும் அனைவரும் வணங்க வேண்டிய தெய்வமாக விளங்குபவர் எம் ஆனைமுகப் பெருமானாகும்.

மஞ்சல் பொடியிலும், சாணத் திலும் விநாயகப் பெருமான் காட்சி தருவார். வீட்டிலும் வழிபாடு செய்ய லாம். விக்கிரம் வைத்திருக்கும் ஆலயத் திற்கும் சென்று வழிபடலாம். தும் பிக்கையை வைத்திருக்கும் அத் தெய் வத்தை முழு நம்பிக்கையோடு வழி பட்டால் இன்பங்கள் அனைத்தும் இல்லம் வந்து துன்பங்கள் தூர விலகி ஓடும். சதுரம் என்றால் நான்கு பக் கங்களை பூர்த்தியாக்கிய அமைப் பாகும். எனவே வாழ்க்கைத் தேவை களைப் பூர்த்தியாக்க நாம் சதுர்த்தி விரதம் மேற்கொள்ள வேண்டும்.

சனி, அவரைப் பிடிக்க வரும் போது இன்று போய் நாளை வா என்று எழுதி வைக்க சொல்லித் தந்தத்தை கையாண்ட தலைவன் விநாயகர் ஆவார். அப்படிப்பட்ட விநாயக ருக்கு உகந்த சதுர்த்தியில் விரதமிருந்து அவரை வழிபட்டால் செல்வச் செழிப்பு மேலோங்கும். தொழில் வளம் பெருகும். மக்கட்பேறு கிட் டும். காரிய வெற்றி உண்டாகும்.

"மூஷிக வாகன மோதக ஹஸ்தா
சாமள கர்ண விளம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே"

திரு. இராசேகரம் தினேஸ்வரன்
இத்தாவில்.



# விநாயகருக்குரிய விரதங்கள்

இந்து சமயத்திலே நல்வாழ்க்கைக் கான அத்திவாரத்தினையும் இறை வனை அடையும் வழியையும் காட்டு பவையாக விரதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் விநாய கரது அருட்பார்வை வேண்டிப் பல விரதங்கள் அனுட்டிக்கப்படுகின்றன அவையாவன:-

1) விநாயகர் சுக்கிர வார விரதம் (வெள்ளிக்கிழமை விரதம்)
2) விநாயக சஷ்டி விரதம்
3) விநாயக சதுாத்தி விரதம்

**(வெள்ளி கிழமை விரதம்)**

**விநாயகர் சுக்கிர வார விரதம்**

விநாயகப் பெருமாளை வேண்டி நினைத்தகாரிய சித்திக்காகவும் தடை நீக்கத்துக்காகவும் வெள்ளிக்கிழமை தோறும் அநுஷ்டிக்கப்படுவது வைகா சிமாத வளர்பிறையில் வரும் முதலாவது வெள்ளிக்கிழமையில் இவ்விரதம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இரவு ஒரு நேரம் பால், பழம் அல் லது பலகாரம் உட்கொள்ளவது நன்று, இயலாதவர்கள் பகல் ஒரு நேர உணவு உண்டு விரதமிருக்கலாம்.

விநாயகர் சஷ்டி விரதம்

கார்த்திகை மாத தேய்பிறை பிர தமை முதல் மார்கழி மாத வளர் பிறை சஷ்டி வரையான இருபத் தொருநாள் விரதம் இது.

முன்பொரு சமயம் மஹாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொன்னதால் தமக் கேற்பட்ட சாபம், விநாயகரை வணங்கி நீங்கப் பெற்றார். இச்சாபம் நீங்கப் பெற்ற தினமாகிய மார்கழி மாத வளர்பிறை சஷ்டி நாளே விநாயக சஷ்டியாகும். இந்நாளை இறுதியாக கொண்ட இருபத் தொருநாள் விர தத்தை பெருங்கதை விரதம் என்பர்.

முதல் இருபது நாளும் பகல் ஒரு பொழுது மட்டும் போசனம் செய்ய வேண்டும். இரவு பால்பழம் அல்லது பலகாரம் உண்ணலாம். தினமும் விநா யகருக்கு இளநீர் கரும்பு, மோதகம் அவல், எள்ளுருண்டை என்பன நிவேதனம் செய்து விநாயகர் சரிதம்

கூறும் பெருங்கதை விநாயகர் புரா ணம் முதலியவற்றை படித்தும் கேட் டும் விநாயகர் அகவல், விநாயக கவ சம் போன்றவற்றைப் பாராயணம் செய் தும் வழிபாடு செய்தல் வேண்டும்.

இறுதி நாள் விசேஷ பூஜை வழி பாடுகள் செய்து உபவாசமிருந்து மறு நாள் பாரணை செய்ய வேண்டும்.

இவ் விரத ஆரம்ப நாளில் இருபத் தோரிழையிலான விரதக் காப்பினை ஆண்கள் வலது கையிலும் பெண் கள் இடது கையிலும் கட்டிக் கொள் வர், இவ் விரதத்துக்கும் ஸ்கந்த ஷஷ்டி விரதத்துக்கும் மட்டும் விரதாரம்பத் தில் பவித்திர மணிந்து சங்கல்பம் செய்யும் போது காப்புக் கட்டும் வழக்கம் உண்டு. இக் காப்பு விரதம் முடிந்த மறுநாள் அதாவது பாரணை யிலன்று காலை பவித்திர விசர்ஜனத் துடன் அவிழ்க்கப்பட வேண்டும்.

கந்தபுரணம், லிங்கபுராணம் ஆகி யவற்றிற் காணப் படும் இவ்விரத மகிமையை பிள்ளையார் கதை என்ற பெயரில் வரத பண்டிதரவர் கள் தனி நூலாக செய் திருக்கின்றார்.

முன்னொரு சமயம் விக்கிரமா தித்த மன்னனின் மனைவியருள் ஒருத்தியான இலக்கண சுந்தரி என் பவள் தான் அநுஷ்டித்து வந்த விநா யக ஷஷ்டி விரதத்தை இடையிலே கைவிட்டு அந்த விரத காப்பையும் அவிழ்து வீசிவிட்டாள் அன்றிலிருந்து அவள் அநேக கஷ்டங்களடைந்து மன்னனினால் விலக்கப்பட்டு காட் டையடைந்தாள். அவள் வீசிய காப்பு ஒரு அவரைக் கொடி மீது விழுந்து அவ் அவரைக் கொடியோ அளவின்றிச் செழித்து வளர்ந்தது. அந்த அவரைக் கொடியிற் கிடந்த விரத காப்பைக் கண்டெடுத்த பணிப்பெண்ணொ ருத்தி தான் அதனைக் கையில் கட்டி விரதம் அநுஷ்டித்தாள். அவ்விரத பல னாக அவளை மன்னன் மணந்து அரண்மனை சேர்ந்தான்.

காட்டில் அலைந்த இலக்கணசுந் தரி அங்கொரு மூதாட்டியின் அறி வுரைப்படி விநாயகஷஷ்டி விரதத்தை மறுபடி தொடங்கி முறைப்படி நோற் றாள். அந்நாளில் காட்டிற்கு வேட்டை யாட வந்த விக்கிரமாதித்த மன்ன னும் களைப்புற்றுத் தண்ணீரருந்த இவளிருந்த குடிலை நாடினான். அங்கு இலக்கணசுந்தரியை கண்டு மறுபடி அவளை மணம் செய்து அழைத்துச் சென்றான்.

இருபத்தொரு வருடம் இவ்விரதம் அநுஷ்டித்த பின் உத்தியானம் செய்யலாம். இயலாதவர்கள் ஏழு வருடமாவது கைக் கொள்ளாலாம்.

**விநாயக சதுர்த்தி**

விநாயக விரதங்களுள் மிக விசேஷமானது இது. இந்துக்கள்

யாரும் விரும்பி அநுஷ்டிக்கும் விரதம். விநாயகர் ஆலயங்களில் பொதுவாகவும் இவ்விரநாளிலே விசேஷ அபிஷேகப் பூஜை வழி பாடுகள் நிகழ்கின்றன. எனினும் இவ்விரதத்தினைப் பூஜை வழிபாடு களுடன் இல்லங்களிலும் கைக் கொள்வது நன்று. விநாயகப் பெரு மான் உற்பவமான தினம் இது என்பர்.

ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த் தித் திதியன்று இவ் விரதம் அநுஷ் டிக்கப்பட வேண்டும். மத்தியானத் தில் சதுர்த்தி நிற்றல் அவசியம்.

கந்தபுராணத்தில் சிறப்பித்து கூறப் படும் இந்த விரதமானது சூதமுனிவ ரால் பஞ்சபாண்டவருக்கு உபதேசிக் கப்பட்ட பெருமையை உடையது. துரியோதனனான கௌரவர்களின் கொடுமையினால் பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்கிறது. காட் டிலே மிகுந்த கஷ்டமும், மனவேத னையும் அடைந்திருக்கும் நிலையில் சூதமுனிவரை ஒரு நாள் சந்திக்கி றார்கள்.

அப்போது தருமர் தமது கஷ் டங்கள் நீங்கிச் சுகமாக வாழ வழி கேட்கிறார். அதற்கு வழியாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதே சிக்கிறார். சூதமுனிவர் அது மட்டு மல்லாமல் இந்த விரதத்தை முன்பு அனுஷ்டித்துப் பயன் பெற்றவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறார்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதி யையும் சியமந்தமணியையும் பெற் றுக் கொண்டதும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப் பகையை வென்றதும், பகீரதன் கங்கையை பூமிக்கு கொண்டுவந்ததும் இந்த விரத மகிமையினால் தான் என்று விளக்கி னார்.

இதனைக் கேட்ட பாண்டவரும் முறைப்படி விநாயக சதுர்த்தி விர தத்தை காட்டிலேயே அநுஷ்டித்து உரிய காலத்தில் ஆட்சி அதிகாரத் தைப் பெற்றனர். இஷ்ட சித்திகளைப் பெற, நினைத்த காரிய சித்தியை விரும்புவோர் இவ்விரதத்தைக் கைக் கொள்ளளம்.அதிகாலை துயி லெழுந்து நீராடி நித்திய கர்மாநுஷ்டா னங்களை முடித்துக் கொண்டு பிராத் தனை வழிபாடுகள், ஆலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபட வேண்டும். பகல் ஒரு பொழுது உண்ணலாம்.

வீட்டிலே பூஜை வழிபாடுகளு டன் விரிவாக இந்த விரதமிருக்க விரும்புவோர் வீட்டிற்கு ஈசான திக் கில் பசும்சாணியால் மெழுகித் தூய் மையாக்கப்பட்டு வெள்ளை கட்டித் தயார் செய்யப்பட்ட ஓரிடத்தில் அல் லது பூஜை அறையிலே மாவிலை தோரணங்களாலும் சிறிய வாழை

மரம் முதலியவற்றாலும் அலங்கரித்து அங்கு ஐந்து கும்பங்களை முறைப் படி ஸதாபித்து சித்தி கணபதி, வித் தியா கணபதி, மோஷ கணபதி ஆகிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து பூஜைகளை நடத்தலாம்.

விசேஷ நிவேதனங்களாக அறு சுவை உணவும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பனவும் சொல்லப் பட்டிருக்கின்றன. நாவற்பழம், விளாம் பழம், அப்பம், மோதகம், கொழுக்கட்டை ஒவ்வொன்றிலும் இருபத் தொன்று என்ற எண்ணிக்கையில் படைத்து நிதேனம் செய்ய வேண்டும்.

விநாயக சதுர்த்தி பூஜையில் இன் னொரு முக்கிய அம்சம் இருபத் தொரு பத்திரம், இருபத்தொரு புஷ்பம், இருபத்தொரு அறுகம்புல் என்பவற்றினாலும் தனித்தனியாக அர்ச்சனை செய்யலாம்.

அர்ச்சனையின் பின் வேதபாராய ணம், தேவாரபாராயணம், விநாயகர் துதி பாராயணம் என்பவற்றையும் செய்து உத்வாசனம் செய்து அர்ச்ச கருக்குரிய தாம்பூல தட்ஷணை களை வழங்கி விருந்தினர் அடியவர் ஏழைகள் ஆகியோருக்கும் உணவிட்டு அதன் பின் உணவருந்தல் முறை.

பதினோராம் திருமுறையி லுள்ள விநாயகர் துதிப்பாடல்கள், விநாயகர் கவசம், பிள்ளையார் கதை முதலிய வற்றை பாடலாம்.

செல்வகுமார் சோவிகா
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை
பருத்தித்துறை



# தோப்புகரணம் போட்டு வழிபடுவோம்

நமது உள்ளங்காலிருந்து தலை யுச்சி வரை அநேக நரம்புக் கற்றை கள் உள்ளன. நாம் சுறுசுறுப்பாக அடிக் கடி உட்கார்ந்து எழுந்தால் (தோப்புக் கரணத்தால்) அந்த நரம்புக் கற்றை கள் சுருங்கிச் சோர்வடையாமல், இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும் அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால், மனதில் சாந்த மான நினைவு கள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும் போது உடல் அசைவில் சுக்ஷீம்னா என்ற நாடி தட்டி எழுப்பப்படுகிறது. இரு கரங்களில் நெற்றிப் பொட்டுக் களில் குட்டிக் கொள்ளும் ஸக்ஷஸ்ரா ரம் என்ற இடத்திலிருந்து யோகிக ளுக்கு அமிர்தம் சிந்தும், விநாயக உபாஸாதனையின் மூலம் சுக்ஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும் ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடைய முடிகிறது என்பர்.

எந்த தேவதையை வணங்கத் தொடங்கினாலும் முதல் விநாயகரை தியானித்து சுக்லாம் பரதரம் என்ற ஸதுதியை கூறி நெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறு குட்டிக் கொள்வத னால் ப்ரம்மரந்த்ரத்தில் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபசகர் களுக்கு சோம்பல் முதலிய அவ குணங்களை விரட்டி நல்ல மன நிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படு வதே சுக்ஷீம்னா நாடி. இது மனித சரீதத்தில் அடி வயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகின் றது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி ஸஹஸ்ரார மண்ட லம் வரை செலுத்தி சிரசிலிருந்து அமிர்தத்துடன் கலந்த அவ்விடமே அதை நிலைநிறுத்திக் கொண்டால் மனிதன் தன்நிலை மறந்து ப்ரம்மத் துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பான். இந்த நாடியைச் செயற்படுத்துவதற்கு தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அள வில்லாத உக்ஷ்ணத்தை உண்டு பண்ண வேண்டும். அதற்கு மனத்தை ஒரே நிலையில் ஐக்கியப் படுத்தி நெடுங் காலம் ஜபதபங்கள் புரிய வேண்டும். அதிக உஷ்ணமான பொருக்களை உபயோகித்து பூஜை முதலியன புரி தல் மறைமுகமாக யோகத்தீமூட்டு

என்று உணர்த்தவேயாகும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடி கணபதி என்பதாலே நமது ரிஷிகள், சாஸ்திர விற்பணர்கள் அகியோர் தாவர வர்க்கத்திலேயே மிக மிக உஷ்ணமான அறுகம்புல் வெள்ளெருக்கு, வன்னிப்பத்திரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை எனக் கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போடுவதையும் விநாயக வழிபாடு மரபாக அமைத்துள்ளார்கள்.

**குட்டிக் கொள்ளல்**

முனிவர்களுள் முதல்வராகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கி கொண்டு தென் திசை நோக்கி வருவாராய் குடகு மலையில் சிவபூசை செய்து கொண்டு இருந்தார். அப்போது இந்திரன் சீர்காழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது.

நாரத முனிவர் இந்திரனைப் பார்த்து "அகத்தியருடைய கமண்டலத்திலுள்ள காவிரி பெருகுமானால் உன் பூங்கா பொலிவு பெறும் என கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான் விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரியடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கரத்தால் ஓட்டினார். காகம் உந்திப் பறந்தது கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது.

அகத்தியர் காகத்தின் மீது சீறிப் பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனாகி நின்றது அச்சிறுவனை இரு கரங்களாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார் அகத்தியர் அச் சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களை ஓங்கினார். ஐங் கரங்களுடன் விநாயகர் காட்சி தந்தருளினார் அகத்தியர் கண்டு நடுநடுங்கினார்.

"ஓங்காரப் பொருளே" வேத வித்தகனே உன்னைச் சிறியேன் அறியேனாகிக் குட்டுவதற்குக் கையை ஓங்கினேனே என்னே என் சிறுமதி" என்று தன் சென்னியிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரங்களைக் பற்றிக் கருணை புரிந்தார்." "இன்று முதல் நம் திருமுன் பய பக்த்தியுடன் சென்னியில் குட்டிக் கொண்டோர் கூரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள்" என்று வரமளித்தருளினார். இதனால், விநாயகரின் திருமுன் அடியார்கள் சிரத்தில் குட்டிக் கொள்ளும் மரபு உண்டாயிற்று.

பா. சிவஆரணி.
யா/வேம்படி பெண்கள்
உயர்தரப் பாடசாலை
யாழ்ப்பாணம்.



# தீபமுகங்கள்

**தீப முகங்களின் எண்ணிக்கையும், பலன்களும்**

* பொதுவாக குத்துவிளக்கில் ஐந்து முகங்கள் ஏற்றுவதே சாலச் சிறந்தது. குறைந்தது இரண்டு முகங்களாவது ஏற்ற வேண்டும். ஒரு முகம் ஏற்றுவதைத் தவிர்க்கவும்.

**இரண்டு முகம்**

* குடும்ப ஒற்றுமை, தன சேர்க்கை, செல்வாக்கு உண்டாகும்.

**மூன்று முகம்**

* காரிய வெற்றி, தைரிய வீரயம், பராக்கிரமம் உண்டாகும், சகாயம் கிடைத்தல்.

**நான்கு முகம்**

* நிலம், வீடுகள், வாகனம், கன்று காலி, வியாபார அபிவிருத்தி, சகல சுகானுபூதி கள் உண்டாகும்.

**ஐந்து முகம்**

* ஸர்வ சித்தி உண்டாகுதல், அக்ஷ்ட ஐஸ்வர்யம் ஏற்படல் இதன் பலன்கள் அளவிடற்கரியன் எவர் பூஜை அறையில் பஞ்சமுகதீபம் பிரகாசிக்கிறதோ அங்கு அக்ஷ்டலக்க்ஷ்மிகளின் வாசம் நீக்கமற நிறைந்திருக்கும். குறைவில்லாப் பெருவாழ்வு உண்டாகும் இதில் சந்தே கம் இல்லை.

**குறிப்பு :-**

* பசுநெய்யில் தீபம் ஏற்றுதல் மிக உத்தம பலனைத் தரும். வாரம் ஒரு நாளாவது (வெள்ளிக்கிழமை) பசு நெய்யில் பஞ்சமுக தீபம் ஏற்றுதல் நல்லதோர் செழிப்பான வாழ்க்கையை அளிக்கும் இந்தக் கருத்து நிதர்சன உண்மை. நீங்களும் கடைப்பிடித்துப் பாருங்கள் பலன்களைக் கண்கூடாக அனுபவிக்க முடியும்.

* தீபம் ஏற்றுவதற்கு முன்பு விளக்கை மஞ்சள், சந்தனம், குங்குமம் இட்டு, பூ (மலர்) சார்த்தி அழகாக அலங்காரம் செய்வது அவசியம். அதன் பிறகு எண்ணெய் விட்டு திரிநூல் வைத்து பயபக்தியோடு திருநாவுக்கரசரின் தேவாரத் துதிப் பாடலோடு சுபமங்கள தீபம் ஏற்ற வேண்டும். இதுவே தீபம் ஏற்றும் முறையாகும்.

* தீபம் ஏற்றும் பெண்மணி திருமணம் ஆகிய பெண்ணாக இருந்தால் வளையல், மெட்டி, புருவ மத்தியில் குங்குமம் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும்.

* ஒட்டும் பொட்டு அணிதல் கண்டிப்பாக தவிர்த்தல் வேண்டும். இது பல வகையான தீய சக்திகளைக் கிரகித்து உடலின் உள்ளே அனுப்பும். இது மனக் குழப்பம், நினைவாற்றல் குறைவு, தேக பலவீனம் போன்ற தீய பலன்களை ஏற் படுத்தும். மேலும் தரித்திரத்தை உண் டாக்கி விடுவதோடு மட்டுமல்லாமல் கணவன், மனைவிக்

கிடையே கருத்து வேறுபாட்டையும் ஏற்படுத்திவிடும். எனவே இல்லத் தரசிகளும், கன்னிகளும் ஒட்டும் பொட்டைத் தவிர்ப்பது உங்கள் வாழ்க்கை சிறப்புற அமைய வழிவகுக் கும். கன்னிகளுக்கு ஒட்டும் பொட்டு திருமணத்தடையை ஏற்படுத்தும் தீபம் ஏற்றும் பெண்மணி கண்டிப்பாக ஒட் டும் பொட்டை விட்டுவிட வேண்டும். அப்போது தான் பூரண பலனை அடை யலாம்.

* தீபம் ஏற்றிய பின் ஏதேனுமோர் நைவேத்தியம் வைத்து தூபம் காட்ட வேண்டும். தங்களுக்குப் பிடித்த பெண் தெய்வ அகூஷ்டோத்ர நாமாவளி, துதிப் பாடல்கள் பாடிய பின் கற்பூர ஆரத்தி காட்டி பூர்த்தி செய்ய வேண்டும்.

* விளக்குப் பூஜையை கூட்டுப்பிரார்த் தனையாகக் கடைப்பிடித்தல் அமோக பலன்களை, நல்வரன்களை பெற்றுத்த ரும். கூட்டுப் பிரார்த்தனைகளுக்கு சக்தி மிக அதிகம். இதுவே ம"ாசக்தி எனப் படுகிறது.

* வீட்டில் தினமும் காலையிலும் மாலையிலும் கண்டிப்பாக விளக் கேற்ற வேண்டும். பிரம்ம முகூர்த்தம் எனப் படும் அதிகாலை 4 மணிக்கு நித் திரை விட்டெழுந்து பூஜை அறையில் 5.00 மணிக்கும் மாலையில் 5.30 மணிக்கும் விளக்கேற்றுதல் வேண்டும். இங்கு மாலையில் தலைவாசலில், பொழுது சாயும் சந்தியா வேளையில் அகல்தீபம் ஏற்றுதல் வேண்டும். இது வீட்டினுள் தீய சக்திகள் நுழைவதைத் தடுத்து நிறுத்தும் சக்தி பெற்றது. கண்திருகூஷ்டி, போட்டி பொறாமை களால் உண்டா கும் எதிர்வினை சக்தி களைக் கட்டுப் படுத்தும், இது நிதர்சன அறிவியல் உண் மையாகும்.

* எந்த வீட்டில் தினசரி மேலே சொன்ன வாறு தீபம் ஏற்றப்படுகிறதோ அந்த வீட்டில் எந்தக் குறையும் இருக்காது. இது உண்மை.


* பசு மாட்டில் சகல தெய்வங்க ளும் வாசஞ் செய்வது போல பஞ்சமுக தீப குத்துவிளக்கில் மும்மூர்த்திகளும் தங்களது தேவிமார்களுடன் வாசம் செய்கிறார்கள். எனவே மும்மூர்த்தி களும், முப்பெரும் தேவிகளும் உங்கள் வீடுகளில் வாசம் செய்ய வாய்ப்பு கொடுப்பீர்களாக.


உசாத்துணை நூல்: ஆற்றல் தரும் ஆலய தரிசனம்

தொகுப்பு :-


இ. சாகித்தியா
சி. ஹேதுஜா
சி. கோபிஷா
(யா/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)


ஆலயத்தின் முன்னைய தோற்றம்...













# சிந்துராசுரனும் கணேசரும்

பிரமாவினால் படைக்கப்பெற்ற முதல்யுகமான சத்யயுகத்தில் சிந்துராசுரன் என்ற அசுரன் வசித்து வந்தான். அவன் முகுந்த சக்தி படைத்தவனாக இருந்தான். அவன் இறைவனை நோக்கி கடுந்தவம் புரிந்தான், அதனால் அவன் தான் பெற்ற சக்தியைத் தீமை புரிவதற்கும் அழிவுக்காகவும் பயன்படுத்தினான்.

தெய்வங்களால் கூட அவனை ஜெயிக்கமுடியாது என்ற நிலை உருவாகியது. அவன் சாதுக்களையும் முனிவர்களையும் துன்புறுத்திச் சிறையில் அடைத்து வதைத்து வந்தான். இந்தப் பிரபஞ்சத்தில் தன்னுடைய வலிமைக்கு நிகராக யாருமே இல்லை என இறுமாந்து இருந்தான்.

இந்தக் கொடுமைகள் தாங்காமல் சாதுக்களும் முனிவர்களும் பகவான் நாராயணரிடம் சரணடைந்தனர், சிந்துராசுரனின் பிடியிலிருந்து தங்களை விடுவிக்குமாறு வேண்டினர். பகவான் நாராயணான் அவர்களிடம், "பரித்ராணய சாதூனாம் வினாசாய சதுஷ்க்ருதாம்" என்று கூறி அபயம் அளித்தார். அதாவது நன்மையைக் காக்கவும் தீமையை அழிக்கவும் நான் காலந்தோறும் அவதரிக்கின்றேன். ஆகவே சாதுக்கள் அச்சமுறத் தேவையில்லை என்று வாக்களித்தார். சிவ-பார்வதிக்குத் தன் அம்சமான ஒரு குழந்தை பிறந்தது, சிந்துராசுரனை அழிக்குமெனவும் நாராயணர் அருளினார்.

பார்வதி கருவுற்றிருந்த செய்தி சிந்துராசுரனுக்குத் தெரிந்தது அவள் பெற்றெடுக்கும் பிள்ளை அவனைக் கொல்லும் மென்றும் தெரிந்திருந்தான். எனவே அவ்வசுரன் ஒரு சிறு உருவெடுத்து பார்வதியின் கருப்பையில் புகுந்து உருவாகி வந்த குழந்தையின் தலையை நீக்கிவிட்டு மறைந்தான். ஒன்பது மாதம் கழித்துப் பார்வதி ஒரு குழந்தையைப் பெற்றாள். அக் குழந்தை தலையற்று இருந்தது. எனினும் நாராயணன் அம்ச மென்பதால் உயிரோடு இருந்தது. குழந்தை பிறந்த பொழுது பார்வதி தலையற்ற முண்டத்தைக் கண்டு திகைத்து அலறினாள். சிவபெருமான் ஆறுதல் கூறி, கவலையுற வேண்டாம் என்று கூறினார். பின் தன் பூதகணங்களில் ஒருவரான வீர பத்திரனை

அழைத்தார். "நீ பூமிக்கச் சென்று எந்த உயிர் தென் திசையில் தன் தலையைக் கால் மீது வைத்து உறங்கிக் கொண்டிருக்கிறதோ அதைக் கொண்டு வருவாயாக" எனக் கூறி னார். வீரபத்திரர் எவ்வளவு தேடியும் தென் திசையில் கால் மீது தலை வைத்து உறங்கும் ஒரு உயிரைக் காண முடிய வில்லை. ஏனென்றால் தென்திசை எமனுக்குரியது. ஆகவே இவ்விதம் யாரும் உறங்குவதில்லை. எனவே வீரபத்திரர் இறைவனின் ஆணையை நிறைவேற்ற முடியாமல் இறைவனி டம் நடந்தவற்றை கூறி, ஒரே ஒரு யானை மட்டம் தென் திசையில் கால் மீது தலை வைத்துத் தூங்குவ தாகும், அத்தலையைக் கொண்டு வரலாமா? எனவும், சிவபெருமா னின் விருப்பத்தைக் கேட்டார். சிவன் கொண்டு வர ஆணையிட்டதும் யானைத் தலையை வெட்டிக் கொண்ட வந்தார்.சிவன் அத்தலை யைப் பெற்று குழந்தையின் உடம் பில் பொருத்தினார்.

ஆனால் பார்வதி தேவிக்கு மனக் குறை அகலவில்லை. தெய்வீகப் புத் திரன், மனித உடலில் யானைத் தலையுடன் இருப்பதைக் கண்டு உல கமே நகைக்குமே என வருந்தினார். சிவபெருமான் "கவலையுற வேண் டாம் என்று சொல்லி, அந்தத் தெய் வீகக் குழந்தை"வித்யாபதி என அழைக்கப்படும். ஞானத்தையும், அறி வையும் அடியவர்களுக்கு வழங்கும், உலக அறிவாளிகள் அனைவரும் அவரைப் போற்றி வணங்குவர். அவரே விக்னஹர்த்தா அனைத்து இடையூறுகளையும் போக்க வல்ல வர் அனைவரும் எந்தக் காரியத்தைத் தொடங்கும் முன் கணேசரைத் தான் வழிபடுவார்கள்" என்று கூறினார்.

கணேசரும் வளர ஆரம்பித்தார், அவர் எதற்காக அவதரித்தாரோ அந் தக் காரியம் நிறைவேற வேண்டிய நேரம் வந்து விட்டது. அவர் சிந்துரா சுரனிடம் நர்மதை ஆற்றங்கரையிலே போரிடக் கிளம்பினார்.அது நீண்ட உக்கிரமான யுத்தமாக நடந்தது. இறு தியில் பரசு என்ற ஆயுதத்தால் சிந் துராசுரனை சம்ஹாரம் செய்தார். அவனுடைய தலையை கணேசர் துண்டித்ததும் கணேசரின் உடல் பூராகவும் அவனுடைய இரத்தம் தெறித்தது. அதனால் கணேசரின் நிறம் சிவப்பாக ஆனது. இது உண் மைக்கும் நன்மைக்கம் எதிரே - தீமைகள், மாயை இவை ஒன்றுமில் லாமல் ஆகிவிடும் என்பதைக் குறிக்கின்றது. அதனால் நர்மதை ஆற்றின் கரையில் உள்ள செந்நிறக் கற்கள் எல்லாம் கணேசராகவே வழி படப்படுகின்றன.

போர் முடிந்தவுடன், பகவான் கணே சர் ஓய்வெடுத்துக் கொள்வதற்காகக் குளிர்மையான நிழலாக உள்ள, அடர்ந்த பசுமையான புல்தரையில் சிறிது நேரம் தங்கினார். புத்துணர்வு பெற்றவுடன் அந்த அறுகம்புல்லிற்கு ஒரு வரம் அளித்தார். அந்தப் புல் லைக் கொண்டு யாரெல்லாம் அவ ரைப் பூசிக்கின்றாரோ அவர்களுக்கு

அருள் பாலிப்பேன் என்று கூறினார். இனி இந்தக் கதையின் உள்ளார்ந்த முக்கியத்துவத்தைக் காண்போமாக

சிந்துராசுரன் ஓர் அசுரனாக இருந்தாலும் சிறந்த தவத்தின் பயனாக மிகுந்த சக்தியைப் பெற்றிருந்தான். தவம் என்பது என்ன? ஏதேனும் ஒரு குறிக்கோளை வேண்டி இறைவனை நோக்கி ஆழ்ந்த, தொடர்ந்த தன்னை மறந்த தியானம் (மன ஒருமை) செய்வதாகும். சாதுக்களும், யோகிகளும் இறைவனிடம் தீவிரமும், கவனமும், விருப்பமும் எந்த அளவுக்குக் காட்டுகிறார்களோ அந்த அளவு இறையருள் கிட்டும் என்பது உணர்த்தப்படுகிறது. எல்லா சக்திகளும் அறிவும், ஆற்றலும் பெற்ற பின் அவற்றை நல்லவற்றிற்குப் பயன்படுத்துவது தெய்வீகமாகும். தீயவைகளுக்குப் பயன்படுத்தினால் நாமும் அசுரர்களாவோம். நல்லவையும், கெட்டவையும் எண்ணங்களால் ஏற்படுவன.

இரண்டாவதாக சிந்துராசுரன் ஒரு சிறிய உருவெடுத்துப் பார்வதிதேவியின் கருப்பைக்குள் நுழைந்தான். இது வினோதமாக தேவதைகளின் கதையைப் போலத் தோன்றும். எண்ணங்களின் சக்தியும் அதிர்வும், விளைவுகளை ஏற்படுத்தும். மந்திரா (Mantra) என்ற சொல்லிலுள்ள Man என்பது மன அல்லது எண்ணுதல் என்றும் tra என்ற பகுதி ஐம்புலங்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடுதல் என்றும் பொருளாகும். மந்திரா என்பது பல எழுத்துக்களைக் கொண்ட குறிப்பிட்ட பொருள் கொண்ட ஒரு சொல். பேரொளிவாய்ந்த சக்தியின் கூட்டமைப்பேயாகும். அனைத்து சக்திகளும், ஆன்மாக்களுக்கெல்லாம் சிறந்த ஆத்மாவாகிய பரமாத்மாவிடம் இருந்தே வெளிவருகின்றன. இறைவனின் தெய்வீக அருள் ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய அளவுக்கு நம் அனைவர் மீதும் பரவுகின்றது. இந்தச் சக்தியை, அருளை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பது, அவரவர்களின் இதயத் தூய்மையைப் பொறுத்ததே.

பகவான் கிருஷ்ணர், உத்தரையின் கருப்பைக்குள் கருவாக வளர்ந்த கொண்டு இருந்த பரீட்ஷித்தை அசுவத்தாமாவின் கோபக்கனலாகிய அம்பிலிருந்து காப்பாற்ற அச்சக்தியை உபயோகப் படுத்தவில்லையா? இறைவனை மனமார மெய்யுருகி வேண்டினால், தன்னிடமுள்ள அனைத்த சக்திகளையும் அவர் அளிப்பார். சிந்துராசுரன் தன்னால் பெறப்பட்ட சக்தியை இறைவனிடமே உபயோகித்து இறுதியில் தன் அழிவுக்குத் தானே காரணம் ஆனான்.

கணேச பகவானுக்கு யானைத் தலையைத் தந்த சிவபெருமானால் ஒரு மனிதத் தலையைத் தந்தருள முடியாதா? சிவபெருமான் உணர்த்த விரும்பியது, ஒருவரது உருவமோ, செய்கையோ, முகச்சாயலோ எந்தச் சிறப்பையும் தருவதில்லை. அவன் எதை அடைந்தான் என்பதே முக்கியம். மனிதன் தன்னை உடலோடு

ஒருமைப்படுத்திக் காண்பதற்கு அவனுடைய ஆணவம் தான் காரணம். தன்னுள்ளே உறைந்திருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து கொள்வதற்காகவே, இறைவனால் கொடுக்கப்பட்ட சாதனம் உடல். உடலை இயக்கும் மனம் ஐம்புலங்களை அடக்கி ஆள வேண்டும். மாறாக ஐம்புலங்கள் மனதை ஆளவிட்டால் இறைவனை நாம் காண முடியாது. இந்த உடல் அழகாக இருந்தாலும், அழகில்லாமல் இருந்தாலும் உடலைச் சாதனமாகக் கொண்டு உண்மையான தெய்வீகம் அதனுள்ளே இருப்பதை உணர வேண்டும்.

**யானையின் தலை:**

யானை காட்டில் வசிக்கும் அனைத்து மிருகங்களிலும் மிகப் பெரியது. அது மிகவும் புத்திசாலி, நல்ல ஞாபகசக்தி உடையது. அது காட்டின் வழியாக நடந்து சென்றால், பின்னுக்குவரும் அனைத்து மிருகஙகளுக்கும் தடம் அமைத்துக் கொடுக கின்றது. அது போன்று, கணேச பகவானைத் தியானித்தால் அவர் அறிவு, ஞானம், ஞாபகசக்தி ஆகியவற்றை அளித்து, தீய பழக்கங்களும், பாவங்களும் நம்மை அண்டாவண ணம் காப்பாற்றுவார். கணேச பகவானுக்கு நான்கு கரங்கள். அவை சத்யம், தர் மம், சாந்தி, பிரேமை ஆகியவற்றை வழங்குகின்றன. அவருடைய ஒற்றைத் தந்தம் அறிவுக கூர்மையையும், மன ஒருமைப்பாட டையும் குறிக்கும்.

இறைவன் நமக்கு கைகளை வழங்கியது, கொடுப்பதற்குத்தான். பெறுவதற்கு அன்று. ஆனால் நாம் அவற்றைத் தவறாக மாற்றிப் பயன் படுத்துகின்றோம். அவர்கொடுத்த மந்திரம் தா (daa) அதாவது கொடுத்தல். தனம் (செல்வம்) கொடுப்பதற்குப் பதிலாகத் தானம் பெறுகின்றோம். முன்பெல்லாம் மக்கள் தர்மத்திற்காகத்தான் வாழ்ந்தார்கள். இப்பொழுது மக்கள் செல்வத்திற்காகத் தான் வாழ்கின்றார்கள். இறைவன் மனிதனுக்கு சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகிய அனைத்தையும் அளித்திருக்கின்றார். ஆனால் மனிதன் விவேகமின்மையால் தன்னுள்ளே இருக்கின்ற இந்த நான்கையும் உணராமல் வெளியே உள்ள செல்வத்தைத் தேடி அலைகின்றான்.

கணேச பகவானுக்கு மிகப் பெரிய வயிறு உள்ளதாகச் சித்தரிக்கப்பட்டள்ளது. அவருக்கு மற்றுமொரு பெயர் விக்னஹர்த்தா. அதாவது அவரை வழிபடுகின்ற அனைவரது வழிகளில் குறுக்கிடுகின்ற இடையூறுகளை விழுங்கி விடுவது போல் பெரிய வயிறு உள்ளது.

கணேச பகவானின் இரு பக்கங்களலும் இரு பெண்கள் ரித்தி (Riddhi) சித்தி(Siddhi) உள்ளனர். ரித்தி செல்வத்தையும் சித்தி வெற்றியையும் குறிக்கின்றனர். கணேசர் இவ்விரண்டையும் நமக்கு வழங்குகிறார்.

கணேச பகவானது வாகனம் மூஞ் சூறு. கணேசரது உடல்வாகு எங்கே? இந்தச் சிறிய பிராணியின் உடல் வாகு எங்கே? இச் சிறிய பிராணி எவ்வாறு கணேசரைச் சுமந்து செல்ல முடியும் இதனுள் ஓர் தத்துவம் புதைந்து கிடக் கின்றது. இப்பிராணி எவ்வளவு உணவுப் பொருள் கிடைத்தாலும் கொறித்தக் கொண்டே இருக்கும். திருப்தியே அடையாமல். மேலும் மேலும் உணவைத் தேடிக் கொண்டே இருக்கும். ஆனால் அந்த எலி பகவா னிடம் பணிவுடன் பூரண சரணாகதி அடைந்து அமைதி அடைகிறது. எலி எவ்வளவு உண்டாலும் திருப்தியுறா மல், மேலும் மேலும் உணவுக்காக அலைகின்றதோ, அவ்வாறே மனித னும் ஓராசை பூர்த்தி அடைந்தவுடன் மற்றொரு ஆசையால் அலைவான். விருப்பங்கள் நிறைவேற விருப்பங் கள் மேலும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இறைவனது பேரருளை வேண்டி நிற்காமல், அற்ப விருப்பங் களைத் தேடி அலைகின்றான்.

கணேஷா என்ற வார்த்தையை நாம் எவ்வாறு புரிந்த கொள்ள வேண் டும்? கணா என்றால் உயிரினங்கள். ஈஷா என்றால் இறைவன். எனவே அனைத்து உயிரினங்களுக்கும் இறை வன் - கணேஷா. அவருக்கு மற் றொரு பெயர் கஜானனா. கஜா என் றால் யானை. அனனா என்றால் தலை. யானைத் தலையை உடையவர்.

ஒருநாள் பரமேஸ்வரன் தம் இரு மகன்மார்களையும் அழைத்து, யார் இந்தப் பிரபஞ்சத்தை முதலில் சுற்றி வருகின்றார்களோ அவர்களுக்கு ஒரு பரிசு தருவதாக அறிவித்தார். உடனே முருகப்பெருமான் தன் மயில் வாக னத்தில் ஏறி பிரபங்சத்தைச் சுற்றி வரச் சென்றார். ஆனால் (Mahakaaya) பெரிய உடலை உடையவரும் மூஞ் சூறை வாகனமாகக் கொண்டவரு மான கணேசர் உணவு அருந்திக் கொண்டு இருந்தார். ஈசனும் தேவி யும் உலகைச் சுற்றி வா என்று சொன்ன பிறகும், அவர் தன்னிலை யிலிருந்து மாறவில்லை. முருகப் பெருமான் உலகச் சுற்றி முடிக்கும் தறுவாயில், கணேசர் வந்தார். அம்மை அப்பரே பேருலகு என்று பெற்றோ ரைச் சுற்றி விட்டு தானே முதலில் உலகை வலம் வந்தவன் எனக் கூறி, பழம் தர வேண்டினார். "இறைவனே யாவும் படைத்தவரே, நீங்கள் ஒவ் வொரு படைப்பிலும் ஊடுருவி இருப்பவர். ஆகவே உங்களைச் சுற்றி வருவது பிரபஞ்சத்தையே சுற்றி வரு வதற்கு ஒப்பாகாதா?" என்று கேட்டு, அம்மையப்பரின் சரியான தீர்ப்பை கணேசர் பெற்றார்.


ஒருவருடைய விருப்பம் நியாயமாக வும், அனைவருக்கும் நலம் தருவதா யும், ஒரு துன்பமும் தராத வகையி லும் இருந்தால் அவை இறைவ னோடு அவனை இணைக்கும். விநா யகரது பேரருள் நமக்கு கிடைக்கும்.


**B.K.Sayi**
**Kopay**

# ஆலயத்தின் தற்போதய தோற்றம்

















# அறுகம்புல்லுக்கு ஈடு ஏது?

ஐங்கர விநாயகருக்குப் பிரியமான அறுகின் பெருமையைப் பற்றி கவுண் டின்னிய ரிஷி தன் பாரியைக்குச் சொல்லி விட்டு நாள்தோறும் பிள் ளையார் பூஜை செய்து வரும்போது ஒருநாள் அவரது பிரிய பத்தினி ஆசிரியை அவரை நோக்கி, "நாதா மிதிலாபுரி அந்தணான திரிசுரனை விட அளவற்ற அறுகுகளால் ஆனை முகத்தவருக்கு நாம் அருச்சனை செய்து வருகிறோம். அப்படி இருந் தும் நமக்கு மட்டும் இதுவரை நற் பேறு நல்காமலிருப்பதற்கு காரணம் என்ன?" என்று கேட்டாள்.

நினைத்தவுடனேயே எச்செல்வத் தையும் அடையக்கூடிய கவுண்டிய முனிவர் புன்னகை பூத்து இந்த உலகத்தினுள்ளோர் அனைவரும் அந்த அறுகின் அருமை பெருமை களை உணர்ந்து தூய நற்பேறு அடைய வேண்டும் என்று நினைத்துக்கொண்டு, "பத்தினியே நான் உன்னிடம் ஓர் அறுகைத் தருகின்றேன். அதை நீ எடுத்துக் கொண்டு போய் தேவேந்தி ரனிடம் கொடுத்து, அதன் எடைக்கு ஈடான பொன்னைத் தரும்படி கேட்டு வாங்கிவர்" என்று கூறித் தான் கணேச மூர்த்தியை பக்தியுடன் அர்ச்சித்த அறுகுகளில் ஒன்றை எடுத்து ஆசிரியையிடம் கொடுத்தார்.

ஆசிரியை அந்த அறுகம்புல்லை எடுத்துச் சென்று தேவேந்திரனிடம் கொடுத்துத் தான் வந்த காரியத்தைச் சொன்னாள். இந்திரன் அதை அதி சயமாகக் கருதி ரிக்ஷி பத்தினியை கும்பிட்டு, "அம்மா தாயே நீ குபேர னின் அளகாபுரிப் பட்டணத்திற்குச் சென்று இந்த அறுகிற்குச் சமமான பொன்னைக் குபேரனிடம் வாங்கிப் போகலாம்" என்று சொல்லி அவ ளுக்கு துணையாக நூறு தூதர்களை யும் அனுப்பி வைத்தான்.

ரிஷி பத்தினியை கண்டதும் குபே ரன் அவளைப் பக்தியோடு வணங்கி னான். பிறகு அறுகம்புல்லுக்குச் சம மான பொன் பெறவே அவள் முன் ஏராளமான பொற்குவியலை மாமலை போல் குவித்து வைத்து, "தாயே, இவற்றில் உனக்குத் தேவையான அளவு எடுத்துச் செல்லலாம்" என் றார்.

"குபேரனே நான் கொண்டு வந்தி ருக்கும் இந்த அறுகின் எடைக்குச் சமமான பொன்னை மட்டும் தான்

வாங்கி வரும்படி என் கணவர் கூறி யிருக்கிறார். அதனால் இந்த அறுகை ஒரு தாராசில் வைத்து, அதற்கு இணையான பொன்னைத் தர வேண்டும்" என்றாள் ஆசிரியை.

குபரேனும் அதற்கிசைந்து ஒரு தரா சுத்தட்டில் அந்த அறுகை வைத்து, அதன் மற்றொரு தட்டில் ஒரு இம் மியளவு தங்கத்தை வைக்கச் செய் தான். அப்போது அறுகு இருந்த தட் டானது அதிக பாரமுள்ளதாகப் பூமி யில் படிந்தும் தங்கம் வைத்த தட் டானது அதற்குஈடாகாமல்ஆகாயத்தை நோக்கி தூக்கலாகவும் இருந்தது.

அந்த விசித்திரம் வினோதத்தைக் கண்ட குபேரன் தன் வேலையாட் களை பார்த்து, "இந்த அறுகு மிகவும தெய்வீகம் பொருந்தியதாகத் தோன் றுகிறது. இதன் பெருமையை யாராலும் அளவிட்டுக் கூறமுடியாது போலவும் இருக்கிறது. அது மட்டுமல்ல, நம் பொக்கிக்ஷத்தி லுள்ள பொன் முழு தும் போதாமல் என்னையும் தட்டில் ஏற வைக்கும் போலவும் தோன்று கிறத் நமது பொக்கிக்ஷத்திலுள்ள நிதி களில் எவ்வளவு தங்கத்தைக் கொண்டு வைத்தாவது தராசின் இரு தட்டுக் களையும் சமமாக்குங்கள்" என்று கட்டளையிட்டார்.

ஆனால் குபேரனின் கருவூலத்தி லுள்ள பொன்னை எல்லாம் எவ் வளவு எடுத்து வைத்தாலும் அவ்வள வையும் அள்ளி வைத்தாலும் கூட பொன்னுக்குரிய தட்டுதான் மேலும் மேலும் இடங்கொடுத்து மேலோங் கியதே தவிர அறுகம்புல் இருந்த தட்டு சிறிதும் அசையாமல் பூமி மீதே பாரத்தால் தாழ்ந்திருந்தது. குபேரன் பெரும்வியப்பும் திகைப்பும் அடைந்து தன் அளகாபுரி நகரத்தில் இருந்த திரவியங்களையெல்லாம் வரவழைத்து தராசுத் தட்டில் வைத்தான். ஆனால் அறுகம்புல் இருந்த தட்டுதான் இன னும் சிறிது கூட மேலெழும்பாமல் தாழ்ந்து காணப்பட்டது. உடனே குபேரன் போராச்சரியமடைந்தவ னாக தானும் தனது மனைவியோடு தராசை வணங்கி விட்டு அறுகம்புல் இருந்த தட்டிற்கு எதிரான தட்டில் ஈடுபொருளாக ஏறி நின்றான். ஆனால் அப்போதும் அவன் ஏறியிருந்த தட்டு சிறிது கூடத் தாழாமல் உயர்ந்தே காணப்பட்டது. இந்த அற்புதத்தைக் கேள்விப்பட்ட தேவேந்திரன் தனது நகரத்திலுள்ள நிதிகள் அனைத்தை யும் கொண்டு வரச் செய்து அறுகம் புல்லுக்கு ஈடாக தராசுத் தட்டில் குவித்து நிரப்பினான். அப்போதும் ஈடு போதவில்லையாதலால் தானும் அதில் ஏறினான். அதற்கும் அறுகம் புல் உள்ள தட்டு சிறிதும் இறங்காமல் இருந்ததினால் மும்மூர்த்திகளும் அங்கு வருமாறு தேவேந்திரன் தன் மனதில் தியானித்தான்.

அவ்வாறே மும்மூர்த்திகளும் வந்து அறுகம்புல்லுக்கு ஈடாக தரா சுத் தட்டில் ஏறினார்கள். அப்போதும் ஈடுதட்டு சமமாகவில்லை. அறுகு இருந்த தட்டானது முன்னிருந்த வண்ணமே சிறிதும் அசையாமல் இருந்தது.

அதைப் பார்த்த இந்திரன் முதலிய சகல தேவரகளும், அந்த அறுகு தும்பிக்கைப் பெருமானின் திருவடி களில் அர்ச்சனை செய்து மேன்மை பெற்றிருக்கிறது என்பதை ஞான திருஷ்டியினால் தெரிந்து கொண்டு, எல்லோரும் தராசுத் தட்டிலிருந்து கீழே இறங்கினார்கள். உடனே முப்பத்து முக்கோடி தேவர்களும் புடை சூழ்ந்து வரும்படியாக அவர வர்களுடைய வாகனங்களில் ஏறிக் கொண்டு வானவெளியில் பயணம் சென்று ரிக்ஷிபத்தினியோடு கவுண் டின்னிய மகரிக்ஷியின் முன்னால் பூவுலகில் வந்து இறங்கினார்கள்.

இவ்வாறு எல்லாத் தேவர்களும் தம் முன்னால் திரண்டு வந்ததைக் கண்ட முனிவர் திடுக்கிட்டுத் திகைத்து அப்படியே நிலத்தில் விழுந்து அவர் களை வணங்கியெழுந்து இரு கரங் களையும் தலைக்கு மேல் கூப்பி, ஆடிப்பாடி, ஆனந்தக் கண்ணீர் பொழிந்து அவர்களைப் பலமுறை வலம் வந்து தொழுதார். "ஆண்ட வனே அடியார்க்கு அடியனான நான் அருச்சனை அறுகின் அருமைப் பெருமைகளை அறிவதற்கே இவ் வாறு செய்தேன். மன்னித்தருள்க" என்றார். அவரைக் கங்காதரரான சிவபெருமான் நோக்கி, "முனிசி ரேஷ்டரே அறுகம்புல்லுக்கு உள்ள மகிமையை வெளிப்படுத்தவே உங் கள் பத்தினியை ஓர் அறுகுடன் எங் களடம் அனுப்பி வைத்தீர்கள். ஆதி பரம்பொருளாகிய விநாயகப் பெரு மானுக்கு அருச்சிக்கப்பட்ட அறுகம் புல்லுக்கு இந்தப் புவனம் முழுவதும் உள்ள அக்ஷ்ட ஐஸ்வரியங்களுக்கும் ஈடாகாது. அப்படியிருக்க, அறுகம் புற்களை கொண்டு அவரைத் தின மும் பூஜித்து வரும் பக்தர்களில் உமக்கு ஈடான புண்ணிய புருக்ஷர் வேறு யாரும் இல்லை" என்று கூறி விட்டு அவருக்கு வேண்டிய வரங் களையும் கொடுத்து மறைந்தார். மற்ற தேவர்களும் அம்முனிவருக்கும் பல வரங்கள் நல்கினார்கள். அன்று முதல் காமதேனு, கற்பகத்தரு முதலியன வெல் லாம் வந்து அவருக்கும் பணி விடை புரிந்தன. அவருடைய பத்தினி ஆனந்த மடைந்து அறுகம்புல்லால்பிள்ளையாரை அருசித்து பெரும் பேறுகள் பெற்றாள்.

தேவகணங்கள் இவ்வாறாக அறு கம்புல்லின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லி, முனிவர்களையும் அவ் வாறே விநாயகரை ஆராதித்து நற் பயன் அடையும் படிக் கூறிவிட்டு, விமானத்தை விண்ணிலே எழுப்பிச் சென்றனர். அத் தெய்வ விமானத்தில் ஏறிச்சென்ற எருது, கழுதை, புலைச்சி மூவரும் அறுகம்புல்லின் மகிமை யால் பிறவாப்பேறு பெற்று சொர்க் கத்தில் பேரின்பப் பெரும் போகங் களை அனுபவித்தார்கள். இக்கதை யைக் கேட்ட முனிவர்களும் அவ் வாறே அறுகம் புற்களைக் கொண்டு வந்து கணேசமூர்த்தியை அருசித்து வர தேவகணங்கள் விமானங்க ளோடு வந்து தனித் தனி விமானங் களில் அவர்களை விண்ணுலகத் திற்கு அழைத்துச் சென்றனர்.

திருமதி.மாலினி.அஜித்
ஆவுஸ்திரேலியா



# வன்னி இலையால் பெற்ற பெரு வாழ்வு பெற்ற கதை

கிருதவீரியனுடைய தந்தை பிரம்ம தேவனை நோக்கி மேலும் கேட்டான்.

"கர்த்தாவே அறுகம்புல்லினால் கணேசப் பெருமானை அருச்சிப்பதனால் உண்டாகும் பயனைத் தெரிவித்தீர்கள். ஆனால் அறுகம்புல் கிடைக்காத சமயங்களில் எதைக் கொண்டு பிள்ளையார் பூஜையை நடத்துவது அதையும் கூறியருள வேண்டும்" என்றான் பிதிர்தேவன்.

அதற்குப் பிரம்மதேவனும் கூறலானார். "கணேசமூர்த்திக்கு அநேக பூஜைப் பொருள்கள் இருந்தாலும், அறுகம் புல்லுக்கு சமனான மகிமையும் பெருமையும் பெற்றிருப்பது வன்னிப் பத்திரமும், மந்தார மலரும் ஆகும். இவைகளில் வன்னிப் பத்திரம் இல்லாமல் பூஜை செய்தவர்களுக்கு கணபதி கருணை காட்டி வரம் கொடுப்பதில்லை. எந்தப் பூஜை பொருட்கள் இல்லா விட்டாலும் வன்னியிலை ஒன்றினால் பூஜை செய்தால் அறுகினால் அர்ச்சித்ததற்குச் சமமாக கருதி எத்தகைய பயனையும் எளிதில் கொடுப்பார். உதாரணமாக ஒரு கதை சொல்கிறேன் கேள்.

பொருள் வளம் பெருகி ஜீவன்கள் செழித்து வாழ்ந்து எட்டுத் திக்குகளிலும் புகழ் பரப்பும் விதர்ப்பதேசத்தில் ஆதேயம் என்ற நகரம் இருந்தது. அங்கு வீமன் என்னும் ஒரு வேடன் வசித்து வந்தான். அவன் நன்மை என்பதையே அறியாதவனாகவும், தீமையே உருவானவனாகவும் திரிந்து எச் சமயத்திலும் வழிப்போக்கர்களை வழிமறித்துப் பொருள்களை அபகரித்தும் வதைத்தும் மிருகங்களைக் கதறக் கதற வெட்டிக் கொன்றும் அவைகளை விற்றும் காலம் கழித்தும் வந்தான்.

ஒரு நாள் அயலூர் பிராமணர்கள் சிலர் அந்நகரத்துக் கோயிலில் நடந்த திருவிழாவை பார்க்க வந்து திருவிழாவைப் பார்த்து விட்டுத் திரும்பிச் செல்லும் போது அவர்களை கொடூர வேடனான வீமன் தடுத்து நிறுத்தி அவர்களிடமிருந்த பொன் பொருள்கள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு, அவர்களையும் கொன்று போட்டு விட்டான். உடனே அந்தணரை கொலை செய்த பிரம்மஹத்தி தோஷம் அவனைப் பிடித்தது போல கொலை கொள்ளைகளுக்கு சிறிதும் அஞ்சாதவனாகவும்,

பொன்னிற வடிவம் உள்ளவனாக வும், வீரதீரத்தில் மதயானைக்கு நிகரானவனாகவுமுள்ள இராட் சஸன் ஒருவன் வீமனிடமிருந்து கொள்ளை பொருள்களைத் தான் அடைய வேண்டுமென்று கருதியவ னாக, புள்ளி மானை துரத்திக் கொண்டு ஓடினான். அதற்குப் பயந்த வீமன் ஒரு வன்னி மரத்தின் மீது ஏறி மறைந்து கொண்டான். அவன் ஏறிய அதிர்ச்சியில் அந்த மரம் அசைந்து அதி லிருந்து ஓர் இலை மரத்தடி நிழலில் உள்ள பிள்ளையார் விக்கிரத்தின் திருவடிகளில் விழுந்தது.

வீமனைத் தொடர்ந்து அரக்கனும் மரத்தின் மீது ஏறினான். உடனே அம்மரத்தில் இருந்து இன்னொரு இலையும் உதிர்ந்து பிள்ளையார் திருமுடி மீது வந்து விழுந்தது. மரத் தில் ஏறிய அவ்விரு கொடியவர் களோ ஒருவரோடு ஒருவர் கட்டிப் பிடித்து கைகளைப் பற்றி இழுத்து சண்டையிட்ட போது இருவரும் மரத் திலிருந்து தரையில் தவறி விழுந்து மாண்டு மடிந்தார்கள். ஆயினும் அவர்களால் வன்னி மரத்திலிருந்து இலைகள் விநாயகர் மீது விழுந்த தால் அவர்கள் தங்கள் தீவினையுரு வத்திலிருந்து விடுபட்டு தெய்வ உரு வம் அடைந்தனர். விநாயகப் பெரு மானின் கருணா கடாட்சத்தினால் தேவலோகத்திலிருந்து தங்க விமானம் வந்தது. அதில் இரண்டு பேரும் ஏறியமர்ந்து கணேசருல கத்தை அடைந்து பெருவாழ்வு பெற் றார்கள்"

இவர்களின் முன் ஜன்ம வினைப் பயன்களையும் சொல்லுகிறோம் கேள்.

விதர்ப்ப தேசத்தை புண்ணிய கீர்த்தி என்ற ஓர் அரசன் அரசாட்சி செய்து வந்தான். அவன் வீரத்திலும் கொடையிலும் வேதாகம ஞானங் களிலும் வேள்விகளிலும் பகைப புலனை வெல்லுவதிலும் சிறந்து விளங்கினான். அவன் மனைவியின் பெயர் மதனாவதி அவர்கள் எத்த னையோ பேறுகளை பெற்றிருந்தும் புத்திரப்பேறு வாழ்க்கையில் அவ் விருவம் காமனும் ரதியும் போல் கூடிக் குலாவி சகலவிதமான இன் பங்களையும் அனுபவித்து மகிழ்ந்து பிறகு அரச தம்பதிகள் இருவரும் இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர்.

புத்திரன் இல்லாத குறையால் அரசு தம்பதிகளுக்கு செய்ய வேண் டிய இறுதிச் சடங்குகளையெல்லாம் அமைச்சர்களே நிறைவேற்றினார் கள். ஒரு மாதம் கழிந்த பிறகு நாட் டுக்கு வாரிசு இல்லாத காரணத்தி னால் அரசனுடைய சுற்றதாரில் ஒரு வனான துத்திரிட ராஜனுடைய மகன் சாம்பன் என்பவன் பகைவரை வெல்லத் தக்க பலசாலி என்று கருதி அவன் பிறப்பைப் பற்றியும் சிந்திக்கா மல் அவனை அழைத்து வந்து அந் நகருக்கு அரசனாக முடிசூட்டினார் கள். அவன் பிறந்த குடும்பமோ விரும் பத்தக்கதல்ல. அவனுடைய தந்தை யான துத்திரிட ராஜனுக்கும் அவன்

மனைவிக்கும் வெகு காலமாகப் பிள்ளைப் பேறு கருதி எத்தனையோ தான தருமங்களை செய்து வந்தாலும் அவன் கொடிய அரக்கர்களுடன் சகவாசம் கொண்டு கொடுஞ்செயல்கள் புரிந்து வந்ததால் அவனுக்கு புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. அவன் மனைவியோ நீசத்தனமான செயல்களில் ஈடுபட்டுச் சோரம் போய் ஒரு செம்படவனுடன் கள்ளத்தனமாய் கூடிக் குலாவி அதன் மூலம் சாம்பனை பெற்றாள்.

ஆகவே சாம்பன் அரச குலத்தில் பிறந்த இழிமகனாக இருந்தபடியால் அரச பதவிக்குரிய பண்புகள் அவனிடம் இல்லாமல் போனதோடு நல்லறிஞர்களையும் ஒழுக்கசீலர்களையும் கலாநிபுணர்களையும் வெறுத்து தீயவழிகளில் மனம் போல் திரியும் சுபாவமே அவனிடம் வளர்ந்திருந்தது, அதனால் அவன் செங்கோல் முறைமை தவறி சதாகாலமும் மது அருந்துவதும், உயிர்க்கொலை புரிந்து உல்லாசப்படுவதும் பரஸ்திரீகளுடன் கூடிக்குலாவி போகத்திலே மூழ்கிக் கிடப்பதும் பிறர் மனைவியரோடு, பிறர் பொருள்களைக் கவர்வதுமாகவே வாழ்நாளைக் கழித்து வந்தான். தன் இஷ்டத்திற்கு தலையாட்டும் துர்புத்தி என்பவனை மந்திரியாக்கி, ராச்சியப் பொறுப்புக்களையும் அநீதியான அதிகாரங்களையும் அவன் வசம் ஒப்படைத்து விட்டான். துர்புத்தியும் தன் இஷ்டப்படி நடக்காத மதிமிகுந்த மந்திரிகளையும் மற்றும் அறிவிற சிறந்த பலரையும் கண்டித்துத் துன்புறுத்தினான். அரசனோ சதா காலமும் விதவிதமான பெண் இன்பம் அனுபவிப்பதிலேயே காலத்தை கழித்து மோகாந்தகாரத்திலே மூழ்கிக் கிடந்தான். அதனால் நாட்டு மக்கள் சொல்ல முடியாத துன்பத்தை அடைந்தனர்.

ஒரு நாள் கொடுங்கோல் மன்னன் சாம்பன் தன் மந்திரி பிரதானிகளுடன் வனாந்திரத்தில் உல்லாச வேட்டையாடி விட்டுத் திரும்பி வரும் போது வனத்தின் ஓரிடத்திலே வானத்தை அளாவிய ஸ்தூபி யோடும் சுற்றிலும் வீதிளோடும் பிள்ளையார் கோவில் ஒன்று அமைந்திருப்பதைக் கண்டான். அதில் கோயில் கொண்டிருக்கும் கணேச மூர்த்தியின் விக்கிரகம் முன்னொரு காலத்தில் வசிக்ஷ்ட முனிவரால் மிக்க பக்தியோடு பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும். பிறகு தசரத மகாராஜன் அந்த மூர்த்தியை வழிபட்ட பலனால் பிள்ளைப் பேற்றை அடைந்தான். மேலும் அந்தக் கணபதியார் தம்மை வந்து வழிபடும் வானத்தவர் வையகத்தார் அனைவருக்கும் வேண்டிய வரங்களை அளித்து வருவதால் அவருக்கு வரதகணபதி என்ற பெயரும் வழங்கி வந்தது.

அத்தனை மகத்துவம் வாய்ந்த அந்தப் பிள்ளையார் கோயிலில் குழுமியிருந்த பக்தர் கூட்டத்தினிடையே சாம்பனும் தன் பரிவாரத்தினரோடு

ஊடுருவிப் புகுந்து பார்வையிட் டான். அங்கு பிள்ளையார் தரிசனம் செய்ய வந்த பக்தர்களில் சிலர் வரத கணபதிக்கு பொங்கலிட்டும், சிலர் தேங்காய் உடைத்தும், சிலர் அபி ஷேகங்கள் செய்தும், ஆடியும் பாடி யும் ஆனந்தக் கூத்தாடியும் பக்திச் செலுத்துவதைக் கண்டான். அவை யெல்லாம் அவனுக்கு வேடிக்கை யாகத் தோன்றின ஆகவே அவன் காட்டில் வேட்டையாடி வரும் போது மரங்களிலிருந்து பறித்து மக்கள் தலைகளில் சுமந்து வரச் செய்த மாம்பழம் போன்ற கனிவர்க்கங் களையும் விநாயகரின் எதிரே விளை யாட்டாகவே காணிக்கை வைத்து, "நானும் உமக்கு அடியான் என்று கூறிச் சிரித்து விட்டு கோயிலை வலம் வந்து விட்டுச் சென்றான். அதன் பிறகு அவனும் அவனது பரிவாரத்தினரும் பாவ வினைகள் பல புரிந்து காலக் கிரமத்தில் வாழ்வு முடிந்ததும் யம தூதர்கள் அவனையும் மற்றவர்களை யும் பிடித்து அடித்துப் பலவாறாக வும் துன்புறுத்திக் கொண்டே இழுத் துச் சென்று யமதர்மராஜன் முன் னால் கொண்டு போய் நிறுத்தினார் கள் அங்கு சாம்பன் முதலானவர் செய்த பாவ புண்ணியக் கணக்கு களை அச்சபையில் சித்திர குப்தன் எடுத்துச் சொல்லி வரும் போது சாம்பன் முதலானவர் அளவற்ற பாவங்களை பண்ணியிருந்தும் ஒரே ஒரு நாள் ஒரே ஒரு முறை விளை யாட்டாக விநாயகர் ஆலயத்தைச் சுற்றி வந்து தான் கொண்டு வந்த கானகத்து கனிவர்க்கங்களை வைத் தும் பணிந்திருக்கிறார்கள் என்று தெரிவித்தான்.

அச் சிறு புண்ணியத்தை விட சாம் பனாதியர் செய்திருந்த மகா பாவங் கள்களே அதிகமாக இருந்ததால் அவற்றிற்குத் தண்டனையாக நெருப் புக் குண்டம், கிருமிக்குண்டம் முத லான பலவிதமான கொடூரமான நரகங்களிளெல்லாம் தள்ளப்பட்டு அடி, உதை, அனல் சூடு முதலான பொறுக்க முடியாத துன்பங்களை யெல்லாம் அனுபவித்தார்கள். பிறகு காக்கை, தேள் முதலான பிராணிக ளாகப் பற்பல பிறவிகள் எடுத்து, கடைசியாக சாம்பனும், துர்புத்தியும் இப்பிறவியில் வேடனாகவும், அரக கனாகவும் பிறந்தனர். முற்பிறவிகள் ஒன்றில் விநாயகமூர்த்தியை வெறும் வேடிக்கை விளையாட்டாகக் காய் கனி காணிக்கை வைத்துப் பணிந தால் அந்தப் புண்ணியத்தால் வன்னி மரத்தில் ஏற நேர்ந்து மேல் இருந்து வன்னி இலை உதிர்ந்து வரதகணபதி மீது விழ, அதனால் அவ்விருவரும் மாண்ட தேகத்தை விடுத்து தெய்வ விமானம் ஏறி விண்ணுலகம் சென்ற னர்.

இவ்வாறு சொல்லி வந்த பிரம்ம தேவன் வன்னி மரத்தடியில் வீற்றி ருந்த விநாயகரின் மகத்துவத்தைப் பற்றி மேலும் சொல்லத் தொடங்கினார்.

பா.கஜானன்
யா/இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்



## அகத்திய முனிவர் அருளிச் செய்த

# பிள்ளையார் கதை

**காப்பு**

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்- உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

**கதை**

பொன்னிறங் கடுக்கும் புனறரு குடுமித்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
கந்த மும்மதக் கடவுடன் கதையினைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
மந்திர கிரியில் வடபாலாங்கோர்
இந்து தவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடமணிப் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைப் பெறுவரம் புக்கெமக் கருளென
மதர்விழி பாகனை வணங்கிநின் றேத்த
மற்றவர் புரிந்திடு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பொற் சிலை வளைத்துப் புரமெரிப் படுத்த
பரனே யன்பர் பழவினை யறுக்கும்
அரனே மறையவர்க் கருள்புரிந் திடுகென
நச்சுவேல் விழியாய் நங்குடிப் புதல்வர்
இச்சகத் திவர்தமக் கில்லை யென்றலும்
அம்பிகை மனந்தளர்ந் தருவினை யறுக்குந்

தம்பிரான் திருச் சரணம் வணங்கி
நம்பிநோற் றுலைந்தார் நாயேன் பொருட்டால்
எம்பிரா னேயிவர்க் கின்னருள் புரிகென
மறுத்துமை யுரைத்த மாற்றம் பொறாமற்
கறுத்த வுளத்தொடு கௌரியை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழியக்
காதார் விழியாள் கையற வெய்தி
உருக்குநின் னைந்தெழுத் தோதா தொழியாக்
கருக்குழி வீழக் கடவதோ வென்று
திருத்தாள் வணங்கிச் சிற்றடி யேன்பிழை
அருத்தா நீபொறுத் தருளென மொழியத்
தேங்கமழ் சடையோன் சிறிதே முறுவல்செய்
தாங்குறு துணையா யணுகுவம் யாமென
மீதார் செல்வத்து விண்ணோர் பயந்த
மாதாங் கொல்லென மாத ராகி
ஆர்கலி ஞால மழகுடன் றழைப்பச்
சீர்மலி குழலி திருவயி னுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டளவுமை யாடி வளர்ந்தபின்
எய்தா மகிழ்வுபெற் றீன்ற வியல்பினர்
மானிட மறையோற்கு வதுவை சூட்ட
வானுத றன்னை மகிழ்வுடன் கேட்கப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கல்ல
தறத்தகு வதுவைக் கணுகலன் யானென
மற்றவன் றன்னை மணமுற வெய்துதல்
பொற்றொடி மடந்தைநிற் கரிதெனப் புகல
அருந்தவ முயற்சியா லணுகுவன் யானெனத்
திருந்து நல்லறஞ்சீர் பெற வமைத்து
மணிமதுக் கமல மலர்த்தடங் குறுகி
அணிமலர்க் குழலி யருந்தவம் புரிய
அரிவைத னருந்தவ மறிகுவன் யானென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மான் மழு வேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோகி மறையவ னாகிக்
குடைதண் டுடன்கிழக் கோலங் கொண்டு
மடமயி றவம்புரி வாவியிற் குறுகித்

தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கிப்
பண்ணுந் தவமென் பயன்வேண்டி யென்னக்
கொன்றையஞ் சடையனைக் கூடவென் றுரைக்க
நன்றென நகைத்து நான்மறை யாளன்
உடுப்பது கோவண மடுப்பது சுடலை
எடுப்பது மழுமா னேறுவ தெருது
பாம்பு மெலும்பும் பலகலன் மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சகொண் டுழலும் பிஞ்ஞகன் றன்னை
நச்சீநீ செய்தவ நகைதரு நாமுனைக்
கடிமணம் புரியக் கருதிவந் தனம்பசுந்
தொடியணி மடந்தைநிற் கிதுவோ துணிவெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் விலக்க
ஆங்கவ ணாணமுற் றயன்மனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென வணங்கிநின் றேத்திச்
சிந்தர வாணுதற் றெரிவைய ரவர்தாந்
தந்தைதா யிருந்த தமனை குறுகி
வாவிக் கரையில் வந்தொரு மறையவன்
பாவைதன் செய்கையைப் பாற்றினா னென்றலுந்
தாடொழு தடிகளைத் தருதிரிவ் விடையெனத்
தோடலர் கமலத் தொடைமறை முனிவனை
மாடக யாழ்மொழி மங்கையர் கூடி
நீடிய புகழோய் நீயெழுந் தருள்கென
மைம்மலர்க் குழலி வந்தெமை யழைக்கின்
அம்மனை புகுவனென் றந்தணன் கூறப்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கெனச்
சிற்றிடை மடந்தை சீறின ளாகி
மற்றம் மாதர் மதிமுக நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துத லரிதென
மணமிடா தொழியினு மாதவ முனியை

இணையடி தொழுதிட லுலகிய லாமெனத்
தந்தையுந் தாயுந் தாழ்ந்துநின் றுரைப்பச்
சிந்தை கரைந்து சீறுத லொழிந்து

தாய்சொன் மறுத்தல பாவமென் றஞ்சி
நாயகி யதற்கு நன்றென விசைந்தே
ஆயிழை மடந்தை அவனெதிர் சென்று
சேயிதழ்த் தாமரைச் சீறடி பணிந்து
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்த பின்
பொற்பமர் பலகையிற் பொலிவுற விருத்தி
வண்ணப் பரிபுர மலரடி யவற்கங்
கெண்ணெய்க் காப்புடன் இயைந்தன சாத்தி
மஞ்சன மாட்டி மணித்துகில் புனைந்து
விஞ்சிய தவிசின் மேற்பட விருத்தி
ஆடகப் பெருங்கலத் தறுசுவை யடிசில்
சூடகக் கையார் துலங்கப் படைக்க
அந்தண னமுதுசெய் தருளிய பின்னர்ச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழச் சாத்திச்
செவ்வந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
திவ்விய பிறவுந் திருமுடி சாத்தித்
தக்கோ லத்தொடு சாதிக் காயுங்
கர்ப்பூ ரத்தொடு கலந்தவெள் ளடைகாய்
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்து
வள்ளிநுண் ணிடையார் வணங்கி நின்றபின்
ஆங்கவ ரருத்திகண் டகமிக மகிழ்ந்து
பூங்கொடிக் கினியருள் புரிகுவன் யானெனக்
கற்றைச் சடையுங் கங்கையும் மதியமும்
நெற்றியி னயனமும் நீல கண்டமுங்
கரமிரு நான்குங் கன்றுமான் மழுவும்
உரககங் கணமு மொப்பிடற் கரிய
பவள மேனியிற் பாங்குற வணிந்த
தவளவெண் ணீறுந் தயங்குமுந் நூலுங்
கோவண விடையிற் கொடுஞ்சின வேங்கையின்
பூவண மான புலித்தோ லுடையும்

ஏழை யடியா ரெழுபிறப் பறுக்குந்
தாளிடைச் சிலம்புஞ் சதுர்மறைச் சிலம்பும்
மாலயன் றேடியுங் காணா வடிவும்
பாலினன் மொழிக்குப் பரிந்து காட்டலுந்

தாமக் குழலி தனைப்பயந் தவர்கள்

ஏமுற் றார்களி னெழுமடி மகிழ்ந்து
பாவையைப் பெற்றுப் பயன்பெற் றோமெனக்
காவண மிட்டுக் காலுறப் புனைந்து
பஞ்சினும் பட்டினும் பழுதற விதானித்து
மஞ்சுசூழ் கூட மதில்வாயி லெங்கணுந்
தோரண நாட்டித் துகிற்கொடி யெடுத்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துக்
கரும்புங் கமு குங் கதலியும் நிரைத்துக்
குரும்பையந் தனத்தியைக் கோலஞ் செய்து
சங்கர னெங்கள் தார்குழல் தனக்கு
மங்கல நாணிடு மணநா ளின்றெனத்
தங்குவான் முரசு சாற்றென வள்ளுவன்
மங்கல முரசு மறுகுதோற் றுதலும்
மாலயன் முதலிய வானவ ரெல்லாம்
ஆலமர் கடவுள் அணிமணங் காண்பான்
விரும்பிவந் தீண்டி விமலனை யெதிர்ந்தே
அரும்பவிழ் தாமரை அடிவணங் கியபின்
வலம்புரி முதலா மன்னுவாத் தியங்கள்
புலம்பு கடலென வடங்கா தார்ப்பக்
கொங்கலர் தாமரைக் கொடியிடை தனக்கங்
கங்கு ரார்ப்பன வருந்தொழின் முடித்தபின்
வார்சடை யானையும் மடமயி றனையும்
ஓர்தனி யாதனத் துவந்துட னிருத்தி
விதிமுறை சடங்கு விரிஞ்சன் பேணப்
புதியமங் கலநாண் பூட்டி யருமறை
ஆகம நூல்வழி யாகுதி வேட்டபின்
கோகன கக்கொடி கொழுநன் முதலோர்
அரவார் கண்டனுக் கறுகுபா லேந்த
அரிவையு மிறைவனும் ஆகுதி வலம்வந்
துரிய மணவறை யுட்புகுந் தருளி
அரம்பையர் வாழ்த்த அமளியிற் றுயில்கொண்
டுரம்பயில் கதிரோ னுதயஞ் செய்தபின்
விண்ணோர்க் கெல்லாம் விடைகொடுத் தருளிப்
பண்ணேர் மொழிமடப் பாவையை நோக்கி
ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுகப்

போதுக வென்று போகிய அந்நாள்
இளமதி யணிசடை செந்தைதன் னருளால்
வளமுடன் வழியின் மலைச்சா ரலிலோர்
களிறும் பிடியுங் கலந்தது காணா
ஒளிர்மதிச் சடையோன் உமைமுகம் நோக்கி
ஓர்வழி யன்றிமற் றோர்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி யாயென
வாரார் முலையாள் மற்றுமுண் டோவென
மெல்லிய லுமையவள் விரும்பினள் பார்த்தே
அல்லிசேர் குழலா ளரன்முகம் பார
இவ்வகை யாக வேண்டு மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகளி றாகவும்
மதர்விழி யுமைபிடி வடிவமாகவுங்
கூடிய கலவியிற்குவலயம் விளங்க
நீடிய வானோர் நெடுநிலை போற்றத்
தங்குவெண் ணீறுந் தருமமுந் தழைப்பத்
திங்கள் மும்மழை யெங்கணும் பெருக
முண்டக மலர்போன் முழுதுஞ் சிவந்த
தண்டையுஞ் சதங்கையு மலம்பு தாளிணையுங்
குண்டவண் டியுந்தண்டரள மா லையு
மண்டொளி தழைத்த புண்டர நுதலு
முடிவுகண் டறியா முப்பரி நூலுஞ்
சுடர்விடுங் கனகத் தோளொரு நான்குஞ்
சோதிவண் டரளத் தொடைபுனை கழுத்தும்
பூதலம் புரக்கும் பொற்கரி முகமும்
தவளக் கிம்புரி தருமருப் பிரண்டும்
பவளத் தொளிவாய்ப் பைந்துவ ரிதழும்
இமையா முக்கணும் இருதழை செவியும்
அமையா நிலவுமிழ் அவிர்சடை முடியும்
அந்தி வண்ணமும் அங்குச பாசமும்
உந்திச் சுழிமேல் உதரபந் தனமுடன்
ஐங்கரக் கரிமுகன் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்தோன் புதல்வனை நோக்கி
வானோர் மண்ணோர் வந்து வழிபட
ஆனோர் வல்வினை யாசற வகற்றித்
தண்டுள வோனயன் சதமகன் முதலோர்க்கு

அந்நாள் தன்னில் அசுரர்வந் தடைந்து
பொன்னா டரசுசெய் புரந்தன் முதல
இமையவர் தங்கட் கிடரே செய்ய
இமையவர் தலைவனு மிலேகரு மாலும்
மதுமல ரயனோடு வந்தெம் பிரான்றன்
பதிதனி லணுகிப் பரிந்துநின் றேத்தித்
தம்பி ரானைத் தாளினை வணங்கி
எம்பி ரானே யெங்குறை முடியெனச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கடல்பரு கயில்வேல் கைத்தலத் தேந்தும்
புதல்வனைப் பயந்து தருகுவம் யாமென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தாடலும்
நேடிய வானோர் நேர்ந்துடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுடன் அழைத்துக்
காவளர் சாரற் கயிலையிற் சென்று
சூரன் வன்மையுஞ் சுரர்படு மிடுக்கணும்
ஊரா வணிந்தோற் குணர்த்திடு நீயெனக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சலும்
எமநாட் டரசன் இயல்புடன் நவில்வான்
அஞ்சா தேநீ யவன்முன் செல்ல

நஞ்சார் கண்டன் நயன மூன்றினுள்
நெற்றியி னயன நீயா மாதலிற்
குற்றம்வந் தடாதுநீ கூறுதி சென்றென
வானவன் மொழிய மற்றவன் றானும்
ஈனமின் றாமென விருதய மொருப்பட்டு
எமையா ளிறைவன் உமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகத்
தெள்ளுதேன் மொழியாள் திகைத்து நாணுறப்
பாவகன் வரவு பரமனு மறிந்துதன்
மூவிரு நுதல்விழி முளரியி னுதித்த
அறுமுகப் பொருளை யவன்கையி லளித்தலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதிநீண் முடிச் சுடரோன் கொணர்ந்து

வாத ராசன் வலக்கையிற் கொடுப்பப்
போர்புனை வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
தார்புனற் கங்கைதன் கையிங் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்க வொண்ணாமற்
பொரும்புனற்சரவணப் பொய்கையி லிடுதலுஞ்
சரவணக் கமலந் தனினிலை யுற்றுக்
குரவணி மூவிரு குருமணி மகுடமுந்
தோளிரண் டாறுந் துலங்கு குண்டலமுந்
தாளிரண் டுடனே தாமரை வதனமும்
மலையுந் தானவர் வாழ்வினைத் தொலைத்திடுஞ்
சிலையும் வேலுஞ் செஞ்சர முங்கொண்டு
அறுமுகக் கடவுள்வந் தவதரித் திடுதலுங்
கறைமிடற் றிறையொடு கௌரிசென் றெடுத்துத்
தம்பதி யடைந்த சதமகன் முதலிய
உம்பர்சீர் அருளென உயர்விடை வழங்க
வாரந் திகழுஞ் சீர்புனை வெற்புஞ்
சூரன் மார்புந் துளைபடத் துளைத்தே
அமரர் கோவுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்கிட
அமரா வதியில் அமர்ந்தினி திருந்தபின்
சமர வேலுடைத் தாரகன் றன்னைக்

கண்டுள மயங்கிக் கடவுளர் மகளிர்
விண்டனர் போன்று மெலிவது கண்டே
அண்டெரல் லாம்வந் தடைவுடன் கூடி
மாதொரு பாகன் மலரடி வணங்கித்
தாதணி கொன்றைச் சடைமுடிக் குன்றே
பிறவா தவனே பேரருட் கடலே
இறவா தவனே யிமையவர்க் கரசே
மருவளர் கடம்பன் மாநகர் புகாமல்
அருளல் வேண்டும் அமலவென் றிறைஞ்சி
இமையோர் சொல்ல இறைவனும் வெகுண்டு
குன்றெறி சுடர்வேற் குமரனை முனியக்
காவல்கொண் டோர்வினைக் கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திட அவள்தனை வானவன் நோக்கி

மங்கை நீதான் வருந்துத லொழிகெனச்
சக்கர பாணியைச் சான்றா விருத்தி
அக்கணி மார்பனும் ஆயிழை யுமையும்
மிக்கநற் சூது விருப்புட னாட
மன்றலர் கூந்தல் வென்றுமன மகிழ்ந்து
கன்றினால் விளவெறி கண்ணனை நோக்கிச்
சூதினில் வென்றா ராரென மொழிய
ஆதிவென் றாயிழை தோற்றா யென்று
தாதிமி ரளகத் தையலை நோக்கி
நீதி யில்லா நெறியவ னுரைக்க
மலைமகள் வெகுண்டு மற்றவன் றன்னை
நிலமிசைக் குருட்டுப் பாம்பாய் நீபோய்
வாரண முகத்து மதலைமுன் னிருந்த
வேரணி யாலிற் கீழ்க்கிடந் திடுகென
நாரணன் றானு நாகமாய்க் கிடந்தபின்
சீரணி கரிமுகத் திருமுகக் கடவுள்
கரும்புங் கிழங்குங் கதலியும் வருக்கையும்
விரும்புமாங் கனியும் வேண்டுவ வளித்து
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழிறிக ழாலின் கீழினி திருந்த
கம்பமா முகக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப்போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பனூா லேணியிற் றாரணி குறுகிக்
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திப்
பொரியவ லடைகாய் பொற்புற வைத்துக்
கார்த்திகைக் கார்த்திகை கழித்த பின்னாள்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கித்
திருவைத் தோய்ந்த திகழ்மணிப் புயத்தில்
இருபத் தோரிழை இன்புறக் கட்டி
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதி நாயகற் காகிய வெழுத்தொடு
மூன்றெழுத் தாலே மொழிந்த மந்திரந்
தேன்றிகழ் குழலியர் சிந்தையு ளடக்கிப்
பொருவரு மலரடிப் பூசனை புரிந்தே
இருபது நாளு மிக்கதை கேட்டு
மற்றைநா டன்னின் மதிமுக மலர்விழிக்

கற்றை வார்குழற் கன்னிய ரெல்லாம்
வாரண முகத்தவன் வாழ்பெருங் கோயில்
சீருடன் விளங்கத் திருவிளக் கிட்டுக்
கோமயங் கொண்டு குறைவற மெழுகி
ஏமுறு கரும்பும் எழிலுடைக் கதலியுந்
தாளுடைக் கமுகுந் தழைபடு மஞ்சளுஞ்
சேறுடைச் செந்நெல்லுந் திசைதொறு நிரைத்தே
கோசிகங் கோடிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வனை நிறைகுடந் திருத்தி
ஐங்கரன் றிருவுரு அமைந்துள் அன்பொடு
தெங்கிள நீருஞ் சீர்பழுக் காயும்
விரிந்த பாளையும் மேதகு நீர்பூச்
சொரிந்த கேதகை தொல்கனி யுடனே
பொருந்திய கவரி புனைமணி மாலை
தெரிந்தவை யெல்லாந் திருந்தத் தூங்கி
மலைமகள் மதலையை மஞ்சன மாட்டிப்
பலநிறப் பட்டும் பழுதறப் புனைந்து
சிந்துர நுதலிற் செறிந்தபொற் பட்டமும்
இந்திர தனுவென இலங்குமணி யாரமும்
மகரப் பகுவாய் வாகு வலயமும்
நிகரற வொளிவிடு நித்தில மாலை
திகழ்மணி முடியொடு சிலம்புசெஞ் சதங்கை
புகரறு பூண்கள் பொலிவுறப் பூட்டிச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பன்னீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழ்தரச் சாத்திச்
செருந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்குகுன் றாத்தி
தாதகி பாதிரி தாதுமந் தாரம்
மாதவி கடம்பு மகிழ்சிறு ஞாழல்
நெய்த றயில நீலந் தாடிமங்
கொய்திடு குல்லை கொன்றை பைங்குரவு
நரந்தை யலரி நந்தியா வர்த்தங்
கரந்தை கமலங் கமழிரு வேலி
செவ்வந்திபிச்சி சிறுசண் பகமலர்
மவ்வல் செவ்வல்லி மயிலை யிருவாட்சி
தும்பை யறுகு துழாயிரும் பூளை

வம்பலர் பட்டிகை மத்தமோ டெருக்குக்
காந்தள் கூதாளங் காக்கண மடம்பு
மாந்தளி ருடனே வளர்பஞ்ச வில்வம்
பூந்தொடை களபம் புழுகுகத் தூரி
ஏந்திள முலையா ரிசையச் சாத்திக்
கதிர்நெற் பொரியுங் கண்டசர்க் கரையும்
முதிர்நெற் கட்டியும் முரித்ததிண் கரும்புந்
தேங்காய் செவ்விள நீர்பல கிழங்கு
எட்பொரி யிருவி யிருதினை மாவும்
அப்பமும் அவலும் ஆலங் காயும்
வெள்ளிலை யடைக்காய் விரவுகர்ப் பூரமோடு
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்துப்
பல்லிய மார்க்கப் பழுதறு திருவிளக்கு
எல்லியும் பகலென இருளற விளக்கு
எல்லியும் பகலென இருளற விளங்கக்
கற்பகக் கடவுள் களிப்புறச் செய்து
மிக்க புகழை விருப்புட னாங்கவர்
கேட்பது கண்டு கேளா திருந்த
பாப்புரு வாகிய பழமறை யாளன்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனெனக்
காப்பிடு வித்துக் கனிவகை பலவும்
ஆங்கவன் றனக்கு வேண்டுவ கொடுத்துப்
பாங்குடன் இக்கதை பரிவுடன் கேட்டபின்
தெய்வ மங்கையர் சிந்தித் தவைபெற
வையநா யகியால் வாரள வானவன்
பண்டையின் வண்ணம் பார்மிசை யெய்தி
அண்டர் நாயகன் அரிவையோ டிருந்த
உஞ்சைமா நகர்புகுந் துமையடி வணங்க
வெஞ்சின மிகுத்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபநீக் கினன்மறை யோனென
மானன கண்ணி மனைக்கத வடைக்க
இறையவ னிதற்குக் காரண மேதென
மறையவ னுரைப்பான் மற்றுமுன் மதலை
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தையுண் மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றா ணீங்க
யாங்கதை கேட்போ மெனநிகைந் தருளிச்

சக்கர பாணி தான்கதை சொல்ல
அக்கணி மார்ப னன்புடன் கேட்ப
மாதுமை யடைத்த வன்றா ணீங்க
மாதுமை தன்னை யரனகை செய்ய
நானே வரநீ நகைபுரிந் ததுவென்று
தேனார் சடையாய் தெளியச் செப்பெனப்
பொன்மலை முலையாய் புகலக் கோளாய்
உன்மகன் நோன்பின் உறுதியை யறிந்து
சிந்தையுண் மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் லானை ஆயிழை வணங்கித்
தேங்கமழ் கடம்பன் தேவர்சே னாபதி
ஈங்கு வரும்படி யானுநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை கேட்டபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்து
சரவண சம்பவன் றான்வந் தெய்தி
அரவணி அமலன் அடியிறைஞ் சியபின்
பரிவுடன் இக்கதை பார்தலந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிர மார்க்கன்
தன்பெரு மனையுந் தானுமிக் கதையை
அன்புடன் கேட்டே அரசு பெற்றபின்
மற்றவ னகரின் மடந்தையர் தம்முள்
எற்பிறை நுதலாள் இலக்கண சுந்தா
கழைபொரு தோட்கையிற் கட்டிய விழையை
விழைவில ளாகி விதிவழி களைந்து
வற்றிய கொவ்வையின் மாடே போடக்
கற்றையஞ் சடைமுடிக் கரிமுக னருளால்
ஆங்கது தளிரும் அடைவுடன் பூவும்
நீங்கறப் பொலிந்து நிற்பது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயி லுங்குழற் பொற்றொடி யொருத்தி
கொவ்வை யடகது கொய்வாள் குறுகிச்
செவ்விய வரசன் றேவிமுன் போட்ட
இழையதிற் கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழையோ டிகல்விழிக் கோதைமுன் காட்ட
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்தி
இருவினை தீர இந்நோன்பு நோவென
அப்பமோ டடைகாய் அந்நாட் கொண்டு

புட்பமுன் வைத்து உவந்து நோற்றபின்
பண்டையி னிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசன் கோயில்வைத் தனனே
விகிர மார்க்கன் விழிதுயி லளவில்
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சதங்கையுந் தாளிநின் றொலிப்பக்
கொண்டல் போல்வரும் குஞ்சரக் கடவுள்
கலைக்குல வரசன் கனவில் எய்தி
அலக்க ணெய்து மரசர்க ளரியே
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடப் புறத்தெனக்
துண்ணென விழித்துத் துணைவியை நோக்கி
அண்ண லுரைத்திடு மளவை தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிந்து
மாநகர் கேடுறும் வகையது கண்டே
அணியிழை யானை அயன்மனை யகற்ற
வணிகன் றன்மனை புகுந்தவ ளிருப்ப
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்
மயிலியன் மேனி மடந்தையுண் மறுகிக்
குயவன் றன்மனை புகுந்தவ ளிருப்பக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனும் அகற்றிய பின்னர்க்
குயிற்பெடை நிகர்மொழிக் கோதையுமேங்கித்
தூசுக ளார்க்குந் தொழிலோன் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்துவே றாய்விட
ஆசறை யவனும் அகற்றிய பின்னர்க்
காசறை யளகக் காரிகை புலம்பி
மாலைக் காரன் மனையிடை புகுந்தபின்
மாலை பாம்பாம் வகையது கண்டே
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்ப்
புயலின் வார்ந்த பூங்குழல் வாடி
உழவன் றன்மனை புகுந்தவ ணிருப்ப
வளர்பயி ரழிந்துபல் வளமுங் குன்றவும்
புரிகுழ றனைப்புறம் போவென் றகற்ற
அவ்வை தன்மனை புகுந்தவ ளிருப்ப
அவ்வை சென்ற அகங்க டோறும்
வைதனர் எறிந்தனர் மடியத் தள்ளினர்

கைகொடு குத்தினர் கள்ளியென் றியம்பினர்
அவ்வகை சால அறிவு தளர்ந்து
வவ்விய துயரொடு மனையிடை புகுந்த
கன்னியால் வந்த காரண மி/தென
மின்னின் நுண்ணிடை மெல்லிநல் லாளே
சாணாக மெடுத்து வாவெனப் புகலச்
சாணா கத்தைத் தையல்சென் றெடுக்கச்
சாணாகம் புழுவாய்த் தண்ணீர் வற்றிப்
பேணிய வெல்லாம் பெரும்புழு வாக
மானார் விழியாள் வருந்தக் கண்டு
தானே சென்று சாணாக மெடுத்துக்
கோல மாகக் கொழுந்தரை மெழுகிப்
பாலின் மென்மொழிப் பாவையை நோக்கிப்
புத்தகம் மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் புரிந்துநின் றாடக்
கொவ்வை யிதழ்வாய்க் கொடிவிழுந் தேங்க
அவ்வைதா னவளை யஞ்சலென் றழைத்துப்
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
முத்தமி ழறிந்த மூதறி வாட்டி
தவநெறி பிழைத்த தையலே நீதான்
சிவன்மகன் நோன்பு தெளிவுறப் புரிகெனப்
பொரியவ லடைகாய் முதற்பல பொருள்களுந்
தெரிவுறப் படைத்துச் சீர்வழி பாட்டுடன்
செவ்விய கரத்திற் றிருந்திழை யாத்தே
அவ்வைமூ வேழ்தினம் அருங்கதை சொல்ல
மவ்வலங் குழலாள் மனமகிழ் கூர்தரச்
செவ்வியோ டக்கதை தெளிவுறக் கேட்டபின்
பொற்புறு விநாயகர் பொலிதிரு வருளால்
விக்கிர மார்க்கன் வேட்டையிற் சென்று
தண்ணீர் வேட்டுத் தன்கிளை விடுப்ப
உண்ணீர்க் கரக முவப்பமொண் டுடனே
பண்ணேர் மொழியாள் பரிந்துடன் கொடுப்பச்
சேனையுந் தானுந் தேக்கிட வுண்டே
யானை குதிரை யவைகளு மருந்திப்
பின்னுந் தொலையாப் பெருமையைக் கண்டு
கன்னிகை யிடத்திற் கடிதி னடைந்துநீ
யாரென வினாவ விளமயிற் சாயலாள்

பேருரை யாதுநாண் பெருகநின் றிடலும்
மின்னே ரிடையன நடைமெல் லியலைத்
தன்மனை யாளெனத் தரணிப னறிந்தே
ஓண்டே ரேற்றி யுளமகிழ் வதனுடன்
கொண்டூர் புகுந்த கொற்ற வேந்தன்
தலைநம் பிராட்டித் தலைமைபெற் றுயர
நிலையருள் புரிந்த நிமலா போற்றி
கற்பவர் தலைவ போற்றி கருதுவோர் கண்ணே போற்றி
நற்பத மவர்க்கு நல்கு நாயகக் களிறே போற்றி
பொற்கர மைந்தாய் போற்றி புகர்முகக் குன்றே போற்றி
அற்பமாய் மகத்தாய் நின்ற ஆகுவா கனனே போற்றி
அன்று நீ டவனித் தேரை அச்சறுத் தமரர் போற்ற
நன்றருள் புரிந்த வேத நாயகக் களிறே போற்றி
பண்டுதான் மேரு வெற்பிற் பாராத மெழுதி வைத்த
வண்டமிழ் முதல்வா விண்ணார் வணங்குமா முகவா போற்றி
ஈண்டுமாங் கனியை வேண்டி இறைவனை வலஞ்செய் தங்கன்
நீண்டகை முதல்வா என்று நினைப்பவர் தலைவா போற்றி
ஏத்துவார் முதல்வா போற்றி இறையவன் புதல்வா போற்றி
சீர்த்தநல் லுமையா ளீன்ற செல்வனாஞ் சிறுவ போற்றி
அன்பொடு பரவிநாளும் அடிதொழு வார்கட் கெல்லாம்
துன்பம் வராமல் இன்பே தோன்றநின் றருள்வாய் போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
எண்ணுறுந் தாரக வெழுத்தே போற்றி
ஆறணி சடையோன் அருளே போற்றி
நீறணி மேனி நிருமல போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் றருநற் பாலா போற்றி
செய்யதாள் போற்றி போற்றி திரிபுரஞ் செற்றோன் பெற்ற
ஐய, என் வினைகள் தீர்த்தே அஞ்சலென் றருளுவாயே.

நூற்பயன்

கல்லா தவர்நோற்பிற் கற்பவைநன் றாகவுறும்
இல்லாதவர்நோற்கின் இன்மைபோம்- பொல்லாத
பாவம்போம் மிக்க பழவினை நோய் தானும்போம்
வேகமலம் போமே மிக

வெள்ளை யெருதேறும் விரிசடையோ னீன்றளித்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை- உள்ளபடி
கற்றவரும் நோற்றவருங் காதலுடன் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்து நீண்மௌலிக்
கற்பகத்தின் நோன்பைக் கருத்துடனே- சொற்றபடி
நோற்றோர் மிகவாழ்வர் நோலா திருந்துகதை
கேட்போர்க்கும் வாராது கேடு.

அகத்திய முனிவர் அருளிச் செய்த பிள்ளையார் கதை முற்றிற்று.



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன்
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்

கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி

இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்து'த்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

# விநாயகரின் 32 தோற்றங்கள்


பால கணபதி


தருண கணபதி


பக்தி கணபதி


வீர கணபதி


சக்தி கணபதி


த்விஜ கணபதி


சித்தி கணபதி



உச்சிஷ்ட கணபதி



ஷிப்ர கணபதி



விக்ன க்ணபதி




ஹேரம்ப கணபதி




லக்ஷ்மி கணபதி



துர்கா கணபதி



சங்கடஹர கணபதி



மஹா கணபதி



விஜய கணபதி



சிருஷ்டி கணபதி



உத்தண்ட கணபதி



ரணமோசன கணபதி



துண்டி கணபதி



துவிமுக கணபதி



மும்முக கணபதி




சிங்க கணபதி



யோக கணபதி


நிருத்த கணபதி


ஊர்த்துவ கணபதி


ஏகாட்சர கணபதி


வரகணபதி


திரயாஷ்ர கணபதி


க்ஷிப்ரபிரசாத கணபதி


ஹரித்திரா கணபதி


ஏகதந்த கணபதி



# திருநீற்றுப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருந்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்த மதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தருவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடா தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.



# கோளறு பதிகம்

திருசிற்றம்பலம்

வேய் உறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல?ணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

மதிநுதன் மங்கையோடு வடவா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம வையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தென்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் ற?னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார வர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே
திருசிற்றம்பலம்



# திருவங்கமாலை

தலையே நீ வணங்காய் -
தலைமாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும் பிரான்தன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மிகளோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதும்
செவிகாள் கேண்மிகளோ

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்து கண்டாய் - மத
யானை உரிபோர்த்துப்பேய்
பேய் வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கை யாற்பயனென்

கால்களாற்பயனென் - கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற்பயனென்

உற்றார் ஆருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன்அல் லால்நமக்கு
உற்றார் ஆருளரே

இறுமாந்திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்று
இறுமாந்திருப்பன் கொலோ

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும் தேடித்
தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்

திருச்சிற்றம்பலம்.



# 7 ஆம் திருமுறை

பண் - செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை
கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே.

அன்றில் முட்டா தடையுஞ் சோலை
ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த
காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார்
தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால்
வாழ்ந்து போதீரே.

துருத்தி உறைவீர் பழனம் பதியாச்
சோற்றுத் துறைஆள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர்
மனமே எனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால்
வாழ்ந்து போதீரே.

செந்தண் பவளந் திகழுஞ் சோலை
இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமா(று)
உமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார்
தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால்
வாழ்ந்து போதீரே.

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை
சேருந் திருவாரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல்
மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து
தங்கண் காணாது
மனத்தால் வாடிஅடியார் இருந்தால்
வாழ்ந்து போதீரே.

ஆயம் பேடை அடையுஞ் சோலை
ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா
றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே.

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க்
கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை
இகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீர் அடிகேள்
பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால்
வாழ்ந்து போதீரே.

பேயோ டேனும் பிரிவொன் றின்னா
தென்பர் பிறரெல்லாங்
காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ
கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை
இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை
இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால்
வாழ்ந்து போதீரே.

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண்
கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டானத்தே
அடிப்பே ராரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர்
வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

